# காஞ்சியில் காலடி





(தில்லைக்காள

# 1. ஸர்வக்ஞ பீடம்

மனிதன் எவ்வளவு முதுமைக் காலந்தொட்டு உள்ளானே அவ்வளவு பழமை வாய்ந்தது நமது மதம். ஸநாதனிகள் என்றும், வைதீக மார்க்கத்தார்கள் என்றும் திகழ்ந்த மதத்தினரை நாளடைவில் சரித்திராசிரியர்கள் இந்துக்கள் என்றும், இந்து மதத்தார் என்றும் குறிப்பிட்டார்கள். இந்து சமூகத்தின் முதுகெலும்பே மதம். "மதக் கட்டுப்பாடு ஒன்றுதான் ஒற்றுமை பொருந்திய பலமான இந்தியாவை உருவாக்க முடியும்' என்று சுவாமி விவேகானந்தர் 19-20 நூற்றாண்டில் கூறியதை ஏறக்குறைய இரண்டாயிரத்தி ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பே காலடியில் அவதரித்து, தமது பாதம் நாடெங்கிலும் பட்டு புனிதமடைய யாத்திரை செய்து, பிறமதங்களால் மங்கிக் கொண்டிருந்த நமது புராதன இந்து மதத்தின் சிறப்பை மீண்டும் ஓங்கச் செய்த பகவத்பாதாள். மதக் கொள்கைகளை விளக்கி வலியுறுத்தியதோடு, செயலிலும் காட்டியருளினர். ஸ்ரீ சங்கர பகவத்பாதாளுக்குப் பிறகு நமது மதத்திற்கு பலவிதமான சோதனைகள் ஏற்பட்ட போதிலும், பரம மங்களம் ஒன்றையே குறிக்கும் நாமத்தைத் தாங்கி, நம் நல்வாழ்வுக்காக நம்மிடையே வாழ்ந்த ஸ்ரீ சங்கரருடைய திருவுள்ளக் கருணையால், சோதனைகள் ஒவ்வொன்றிலிருந்தும் புடம் போட்ட பொன் போன்று இந்து மதம் மேலும் மேலும் பிரகாசிக்கத் தொடங்கியது. இன்றைய நாகரிக உலகத்தில் பல்வேறு மதங்களுக்கு மத்தியில் இந்திய உபகண்டத்தில் மட்டுமே தோன்றி பிரசாரம் எதுவுமின்றி உலக மாந்தரை தன் பால் ஈர்க்கும் மகத்தான கொள்கைகளை உடையது இந்துமதம்.



(தில்லைக்காள

# 1. ஸர்வக்ஞ பீடம்

மனிதன் எவ்வளவு முதுமைக் காலந்தொட்டு உள்ளானோ அவ்வளவு பழமை வாய்ந்தது நமது மதம். ஸநாதனிகள் என்றும், வைதீக மார்க்கத்தார்கள் என்றும் திகழ்ந்த மதத்தினரை நாளடைவில் சரித்திராசிரியர்கள் இந்துக்கள் என்றும், இந்து மதத்தார் என்றும் குறிப்பிட்டார்கள். இந்து சமூகத்தின் முதுகெலும்பே மதம். "மதக் கட்டுப்பாடு ஒன்றுதான் ஒற்றுமை பொருந்திய பலமான இந்தியாவை உருவாக்க முடியும்' என்று சுவாமி விவேகானந்தர் 19-20 நூற்றாண்டில் கூறியதை ஏறக்குறைய இரண்டாயிரத்தி ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பே காலடியில் அவதரித்து, தமது பாதம் நாடெங்கிலும் பட்டு புனிதமடைய யாத்திரை செய்து, பிறமதங்களால் மங்கிக் கொண்டிருந்த நமது புராதன இந்து மதத்தின் சிறப்பை மீண்டும் ஓங்கச் செய்த பகவத்பாதாள். மதக் கொள்கைகளை விளக்கி வலியுறுத்தியதோடு, செயலிலும் காட்டியருளினார். ஸ்ரீ சங்கர பகவத்பாதாளுக்குப் பிறகு நமது மதத்திற்கு பலவிதமான சோதனைகள் ஏற்பட்ட போதிலும், பரம மங்களம் ஒன்றையே குறிக்கும் நாமத்தைத் தாங்கி, நம் நல்வாழ்வுக்காக நம்மிடையே வாழ்ந்த ஸ்ரீ சங்கரருடைய திருவுள்ளக் கருணையால், சோதனைகள் ஒவ்வொன்றிலிருந்தும் புடம் போட்ட பொன் போன்று இந்து மதம் மேலும் மேலும் பிரகாசிக்கத் தொடங்கியது. இன்றைய நாகரிக உலகத்தில் பல்வேறு மதங்களுக்கு மத்தியில் இந்திய உபகண்டத்தில் மட்டுமே தோன்றி பிரசாரம் எதுவுமின்றி உலக மாந்தரை தன் பால் ஈர்க்கும் மகத்தான கொள்கைகளை உடையது இந்துமதம்.

படிப்படியாக மனித மிருகம், மனிதனுக ஆகி, தேவராகி வாழத்தான் சட்டதிட்டங்கள் சமூகத்தில் அமுலாக்கப்பட்டு மதம் என்ற ஒரே கோட்பாட்டின் கீழ் இயங்கி, பலவித இனங்கள் ஆனுலும் பறவை என்ற அடிப்படையில் ஒற்றுமை காண்பது போல், மதத்திலே நம்பிக்கையும் ஒற்றுமையும் கொண்டு வாழ்ந்து வந்தனர் நம் முன்னோர்கள்: சரித்திரத்தின் முற்காலம் இயற்கையையே கடவுள் என நம்பி பூசனைகள் செய்து வாழ்ந்தனர். சூரியன், அக்னி, வருணன், என்றெல்லாம் தான் பழமையான ரிக் வேதத்தில் அதிகம் காணப்படுகிறது. ஐம்புலன்களின் நுகர்ச்சிக்கு அப்பாற்பட்ட பூரண இன்பத்தை நாட இயல்பாகவே மனிதன் முயன்று முயன்று முன்னேறியிருக்கிறுன். கடவுள் நம்பிக்கையில்லாதவர்கள் தனக்கு அடுத்தடுத்து கஷ்டங்கள் வரும் போது தன்னையுமறியாமலேயே அந்த தெய்வ சந்நிதியை நினைத்து பிரலாபிக்கின்றனர்: இதனுல்தான் மனிதன் தன்னுடைய பலஹீனமான கூக்குரலை தன் இதய அடியிலிருந்து எழுப்பும் வரை கடவுள் என்ற நம்பிக்கை இருந்தே திரும் என உபமான உபமேயங்களோடு புராணங்கள் கூறுகிறதை அறிஞர்கள் எடுத்துக் காட்டுகிருர்கள்.

பயம் ஒன்றே மனிதனை பக்திக்கு உட்படுத்தி வந்துள்ளது என்பதுதான் சித்தாந்தம்: தன்னிலும் மேலானதொரு சக்தி என்று நினைக்கும் போதே அவன் தலை பணிகிருன்: அங்குதான் மதம் நம்பிக்கையின் அடிப்படையிலே தோன்றுகிறது. 'இவர்தான் உன் தந்தை' என்றதும் பெற்ற தாயின் கூற்றை எவ்வளவு ஆணித்தரமாக நம்பி குழந்தை தந்தையை ஏற்றுக்கொள்கிறதோ அவ்வண்ணமே மனிதன் தெய்வத்தையும் தெய்வ நம்பிக்கையையும் ஏற்று வாழ்ந்துவந்திருக்கிருன். கடவுள் அவதாரங்கள், அம்சங்கள் நம்மிடையே அவ்வப்போது அதியற்புத அதிசய தோன்றுதல்கள் வரிசையில் (முதல்வருக்கும் முதல்வராக) ஸ்ரீ சங்கரர் தோன்றி, "மதம் தான் எல்லாவற்றிற்கும் அடிப்படையான தெய்வ பலத்தை மறைமுகமாகவும், நேர்முகமாகவும் போற்றுகிறது" என தமது பல்வேறு பாஷ்யங்களில் விளக்கியருளியுள்ளார்.

எல்லையில்லாதது—பரம்பொருள்—முடிவும், வடிவும் இன்றி வாக்கிற்கும் மனதிற்கும் புலப்படாததாக உள்ளது என்பது பகவத்பாதாள் கருத்தில் ஊடுருவி பிரகாசிப்பதை அறியாதவர் வெகு சிலரே.

"யதோவாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ'
"மனோவாசா மகோசரா"

ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யம்: காணும் இந்த உலகம் மாய ப்ரபஞ்சம்:

'ஜகத் விலக்ஷணம் ப்ரஹ்ம'

உலகத்தை அறிவதால் ப்ரஹ்மத்தை அறியமுடியாது. ஆனால் உலகம் தோன்றுகிறதே ஏனில், அது நடுப்பகல் வெயிலில் தூரத்தே கானல் நீரை நீர் எனக் கண்டவன் கதை போல் தான்!

"ப்ரஹ்மன் யத்பாதி சேன் மித்யா யதா மருமரீசிகா" என்று சாஸனம் செய்து.

"திக் தேசகாலாத்யநபேக்ஷ்ய ஸர்வகம்
சீதாதி ஹ்நத் நித்ய ஸுகம் நிரஞ்சனம்
ய: ஸ்வாத்ம தீர்த்தம் பஜதே விநிஷ்கிரிய:
ஸ ஸர்வவித் ஸர்வகதோS ம்ருதோபவேத்"

என்று ஆத்மஸ்வரூப ஐக்யத்தினால் மட்டுமே தான் ஜீவன் பசுபாவம் நீங்கி ப்ரஹ்மமே தானாய், நித்யனாய் ஆனந்தனாய் இருக்க முடியும் என்று வாதிட்டு, பாஷண்ட துர் மதங்களை பிரசாரம் செய்தவர்களைக் கண்டனம் செய்து, 'அத்வைதமே ஸத்யம்' என்று திருவிடை மருதூர் மஹாலிங்கம் கைநீட்டி மும்முறை ஸத்யம் செய்து, 'ஜய ஜய சங்கரா' போற்றி யென உலகம் போற்றும் உத்தம சித்தாந்தத்தை தோற்று விக்க, பரமன் பரம கருணையோடு பாதுகையை பகவத் பாதாளாக அவதரிக்க அனுப்பினான். உலகம் உய்ய தன் காலடியை காலடிக்கு போய் ஜனனமெடுக்கும்படி பேர ருள் புரிந்த மத்தியார்ச்சுன மகாலிங்கத்தைக் கரங்கூப்பி

வணங்குகிறோம். புகழும் பெருமையும் குன்றாது வளர்ந்து கொண்டே வரும் அத்வைதத்தை அளித்த பரம கருணாகர ஞகிய ஆதிசங்கரர் நாமஸ்மரணே ஒன்றே சகல பாபங்களே யும் போக்க வல்லது. எந்த மத ஸம்பிரதாயம் எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும் இந்துமத ஸம்பிரதாயம் மட்டும் ஈசன் பாதுகையில் ஆரம்பித்து, பணிவன்பின் சின்னமாக உலகின்கண் தொன்று தொட்டு வந்துள்ளது.

ஆசாரிய சங்கரரே:

"மனஸ் சேன்ன லக்நம் குரோரங்க்ரிபத்மே"

என்று 'பாதங்களின் பக்தியே மேலானது' என்கிருர். முகத்தையோ உடலின் வேறு எந்த உறுப்பையும் கூருமல் (காலடிக்கு) பாதத்துக்கு பாரதம் முக்கியம் அளித்தது. தொன்மையான இதிஹாசம்—இராமயணம்—என்ன கூறுகிறது? ராம பாதுகையை பரதன் பெற்றுச் சென்று, பக்தியோடு சிம்மாசனமேற்றி, அதனுடைய பிரதிநிதியாகத்தான் ராஜ்ய பாரம் செய்து வந்தான் என்று வர்ணிக்கிறது. விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை கரைத்துக் குடித்து, தித்திக்கும் பொறுக்கு மணிகளாக அழகிய ஸ்லோகங்களே யெல்லாம் அள்ளிச் செறிந்த ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகன் "பாதுகா ஸஹஸ்ரம்" என்ற அற்புதமான நூலே இயற்றியுள்ளார்:

உபநயனம் ஆனபிறகு தாய் தந்தை குரு முதலியோர் பாதத்தைத் தொட்டு வணங்குவதைத்தான் கற்றுக் கொடுக்கிருர்கள்: "பாத தீர்த்தம்" "பரிகல சேடம்" என்கிருர் சிற்றம்பல நாடிகள். இப்படியே வழி வழியே மற்ற எந் நாட்டவர்க்கும் இல்லாத தூய உயர்ந்த பழக்கம் "பாதம் தொட்டு வணங்கல்" விநயஸம்பத்து நம் நாட்டுக்கே மட்டும் உரிய, உயரிய பண்பு ஆகும்.

ஸ்ரீ சங்கரராக அவதரித்த அப்பாதம் பாரதத்தில் பாத பூமியை (காலடி)த் தான் தேர்ந்தெடுத்தது. மிக உயர்ந்த காவியம் கருத்துக்கள் படைக்கும் ஒருவன் மன சந்தோஷத்

# ஆத்ம போதம்

(ஸ்ரீ சங்கரர்)

"தபோபி : க்ஷீணபாபானாம் சாந்தானாம் வீதராகிணாம்
முமுக்ஷூணாம் அபேக்ஷ்யோயம் ஆத்ம போதோ விதீயதே" 1

போதோந்ய ஸாதநேப்யோ ஹி ஸாக்ஷான் மோக்ஷைக
ஸாதனம்
பாகஸ்ய வஹ்நிவக்ஞானம் விநா மோக்ஷோ ந ஸித்யதி 2

★



'ஆத்ம போதம்' எனும் இந்நூல் தவத்தினால் பாவங்கள் நீங்கப் பெற்றவர்களுக்கும், அமைதியுற்று ஆசைகள் யாவும் அற்றவர்களுக்கும், தன்னைத்தான் அறிய விரும்புகிறவர்களுக்காகவும் கூறப்படுகிறது.

ஸ்வதர்மம், அனுஷ்டானம் செய்வதால் பாவம் நீங்கும். விருப்பு வெறுப்பு மறையும். வைராக்யம் தலைதூக்கும். ஞான விசாரமே மோக்ஷ வீட்டின் திறவுகோல். ஞான வேட்கை மிகுந்த முமுக்ஷூக்களுக்காக இந்நூலை ஸ்ரீ சங்கரர் உரைக்கிறார்.

★

"Prayers are heard in heaven very much in proportion to our faith. Little faith will get very great Mercies, but great faith still greater."

—*Charles Haddon Spurgeon.*

---

# ஆத்ம போதம்

"அவிரோதிதயா கர்ம நாவித்யாம் விநிவர்தயேத்
வித்யா வித்யாம் நிஹந்த்யேவ தேஜஸ்திமிர ஸங்கவத் ॥ 3
"அவச்சின்ன இவாக்ஞானத் தந்நாசே ஸதி கேவல :
ஸ்வயம் ப்ரகாசதே ஹ்யாத்மா மேகாபாயே அம்சுமாநிவ" ॥ 4



ஒன்றுக்கொன்று விரோதமின்மையால் கர்மா அக்ஞானத்தை அழிக்காது. ஒளிக் கதிரினால் இருள் நீங்குவதுபோல், ஞானம் ஒன்றே அக்ஞானத்தைப் போக்கும்.

அக்ஞானத்தில் எல்லையுள்ளதாக, முடிவுடையதாக காணப்படும் இவ்வாத்மா அறியாமை நீக்கத்தால் எங்கும் நிறைந்த தன்மையுடையது எனத் தெரியும். மேகத்தால் மறைந்த சூரியன் போன்று அறியாமையால் அறிவு (ஞானம்) மறைந்துள்ளது.

Without faith Man can do nothing: with it all things are possible.

—*Sri William OSLER*

தோடு ரமணீயமான சூழ்நிலையையே தேர்ந்தெடுப்பான்! இப்படி, ஏகாந்தமாக ஒரு மனோரம்யமான சூழ்நிலையில்தான் குரு, சிஷ்ய உபதேசம் தத்வ விசாரம் தொடங்கும். ஆனால் பகவத் கீதையை பகவான் போர்க்களத்தில் அல்லோல கல்லோலப்படும் நேரத்தில் உபதேசம் செய்தார். அதுவும் 'வறட்டு வேதாந்தம்' என்று கூறுவார்களே அந்த வேதாந்தத்தையே முழக்கினர். அதனால்தான் 'பகவத் கீதை' உலகம் முழுவதும் போற்றும் அரிய பொக்கிஷமாக உள்ளது.

மானிட கவிகளுக்கும், மேதைகளுக்கும், காவிய மணிகளுக்கும்தான் சூழ்நிலை தகுதியோடு அமைய வேண்டியது அவசியமாகிறது. ஆனால் தெய்வமே, கேவலம் மானிட உருவில் வரும்போது, சூழ்நிலை எத்தகையதாக இருந்தாலும் ஒன்றுதான் என்பதற்கு திருஷ்டாந்தமாகவே, சங்கரர் அவதரித்த காலடியையும், பகவத் கீதை தோன்றிய போர்க்களத்தையும் இங்கு குறிப்பிட நேர்ந்தது. காலடியில் பரமன் நடித்த நாடகம், குருக்ஷேத்திரத்தில் பரந்தாமன் நடித்த நாடகம்! பகவத் கீதைக்கு ஸ்ரீ சங்கரர் செய்த பாஷ்யத்தில் வேத சாரம் பொங்கி வழிகிறது என்று அறிஞர்கள் வர்ணிக்கிறார்கள். ஹரியும் ஹரனும் நம்மிடம் கருணை ஒன்றை மட்டுமேதான் காட்டுகிறார்கள் என்பதற்கு வேறு உதாரணம் தேட வேண்டிய அவசியமில்லை. சிவ - விஷ்ணு பேதம் பூசல், சர்ச்சை எதுவும் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் இல்லை என்பதற்கு எடுத்துக்காட்டாகவே சங்கரர் கீதா பாஷ்யம் விளங்குகிறது.

பகவான் சங்கரரும் பகவத் கீதையும் தான் நம் நாட்டுக்கு அரிய ஆசாரிய புருஷனும், அனுபவ நூலும்! சங்கரர் எப்படி எல்லா மதத்தினராலும், எல்லா காலத்தவராலும் போற்றப்படுகிறாரோ அப்படியே பகவத் கீதையும் எல்லா காலத்துக்கும் பொருந்துவதாக அமைந்துள்ளதுதான் அந் நூலின் பெருமை: கலியுகத்தில் பகவத் கீதைக்கு மட்டுமே மக்கள் முதல் இடம் கொடுத்து, அது காட்டும் வழியில்

வாழ்க்கை முறையை மாற்றியமைத்துக் கொள்ள முற்படுவார்கள் என்ற காரணத்தாலேயே, ஸ்ரீ சங்கரர், அத்வைத சித்தாந்தத்தை (எல்லாம் ஒன்று! தோன்றுவதெல்லாம் மாயை) உருவாக்கி பிரகனடம் செய்த போதிலும், பகவத் கீதைக்கு பாஷ்யம் செய்து, பக்தி வழிபாட்டுக்கும், கர்மத்தைச் செய்வதொன்று தான் மனித இனத்தின் முதல் கடமை என்பதற்கும் முக்கியத்வம் கொடுத்துள்ளார். கர்மத்தைச் செய்யும் மனிதன் பயனைக் கருதாமல் இருக்க மாட்டான். பயன் கிட்டவேண்டுமானல் செய்யும் கர்மத்தில் பக்தியையும் சிரத்தையையும் கணக்கிடாமல் குழைக்க வேண்டியதவசியம். ஸ்ரீ சங்கரருடைய கீதா பாஷ்யம் எல்லாவற்றிற்கும் முன்னேடி எனக் கூறுவது மிகையாகாது.

இவ்வாறு பெருமையாகவும் சிறப்பாகவும் விளங்கிக் கொண்டிருக்கும் ஒரு குரு பரம்பரையைத் தோற்றுவித்த ஸ்ரீ சங்கரர் தமது அவதார தலமாகத் தேர்ந்தெடுத்த இடம் ரமணீயமான பூர்ணநதிதீரம்: பூரணத்தின் பூரணமாக எஞ்சாத பூரணத்தை உரைக்க வருகிறவன் பூர்ணநதி தீரத்தை தேர்ந்தெடுத்தான்: பகவத்கீதையை உபதேசம் செய்த அந்த கிருஷ்ணபராமாத்மாவின் கோயிலுக்கு சமீபம் அத்வைதத்தை. வைதீக மார்க்கத்தை, தர்மத்தை நிலை நாட்ட அவதரித்தான், எட்டுவயதில் நான்கு வேதமும் பன்னிரண்டு வயதில் சகல சாஸ்திரங்களிலும் தேர்ச்சி பெற்று, உற்றத்தையும் சுற்றத்தையும் திகைப்படையச் செய்தான்.

அகிலத்துக்கும் ஆசாரிய புருஷனுக எல்லா திசைகளிலும் ஸம்ப்ரதாய மடங்களை நிறுவி, கைலையினின்றும் தாம் பெற்றுவந்த யோக, போக, வர, ஸித்தி, விமுக்தி என்னும் லிங்கங்களை ஸ்தாபித்து பிறகு சிருங்ககிரியில் சாரதாம்பாளை ப்ரதிஷ்டை செய்து, அவதார நோக்கம் பூர்த்தி பெற ஸ்ரீ காஞ்சியை வந்து அடைந்தார்கள். அங்கு பிலாகாசத்தில் அதி உக்கிரசக்தியாக விளங்கிய காமாக்ஷியை அருள்மாரி

பொழியும் அன்னையாக ஸ்ரீ சக்ரநாயகியாக்கி, காமகோடி பீடம் என்னும் ஸர்வக்ஞ பீடத்தில் தாமே ஆரோஹணம் செய்யுமுன், இந்நாட்டின் நாலா திசைகளிலும் நிர்மாணித்த மடங்களுக்கு ப்ருத்வீதவர், பத்மபாதர், ஹஸ்தாமலகர், தோடகர் என்ற சிஷ்யர்களை அதிபதிகளாக நியமித்தார். ஸ்ரீ காஞ்சியில் காமகோடி பீடத்தை மத்ய கேந்திரமாக வைத்து தாமே அதில் அமர்ந்து கொண்டு எல்லாவற்றையும் பரிபாலனம் செய்தார். இவ்வாறு சில காலம் இயங்கியும், இயக்கியும் வந்த ஸ்ரீசங்கரர் எட்டு வயது பாலகனான மேதை 'ஸர்வக்ஞாத்மன்' என்பவனை தமக்குப் பிறகு ஸ்ரீகாமகோடி பீடத்திற்கு வாரிசாக நியமித்தார்.

''ப்ராக் அஷ்டமாத் விதித வேத்யம்—உதூடபால்யம்
ஸர்வக்ஞ ஸமயம்—அத ஹம்ஸிதம்
ஆத்மநா ஏவ''—

பால்மணம் மாறாத அச்சிறுவனுக்கு வழிகாட்ட சுரேச்வராச்சாரியரை நியமித்தார்.

''ந்யததாத் ஸ்வபீடே குப்தம்
ஸ்வசிஷ்ய திலகேந ஸுரேச்வரேந''

காமத்தின் கோடியிலே மனத்தின் அசைவுகள் தோன்றும் அலைகளின் கடைசியிலே எனப்பெயர் பொருத்தம் தோன்றும் 'காமகோடி' யாகிய ஸ்ரீ காஞ்சி காமாட்சியின் கருணைக் கண் பார்வையில், தமது இச்சை-இந்துமதத்தினர் என்றென்றும் தூய வாழ்வும், பூரண நல்வாழ்வும் வாழவேண்டும்-நீடித்துத் துலங்கவேண்டி 'ஸர்வக்ஞ பீட' மெனும் ஸ்ரீ காமகோடி பீடத்தை ஸ்தாபித்து, சிஷ்ய பரம்பரையிடம் அந்த மகத்தான பிரதிஷ்டையை ஒப்படைப்பதற்கு முன்பு, தமே முதல் பீடாதிபதியாக அமர்ந்து, மானிடரின் ஆன்மீக ஆளுனராக அமர்ந்தருளி, அன்று முதல் இன்றுவரை அரிய, பெரிய, சீல மிகுந்த மகான்கள் பரம்பரை யொன்று ஸ்ரீ காஞ்சியில் வளர்ந்து கொண்டிருக்க அடிக்கல் நாட்டினர். கேட்போர், படிப்போர் மெய்சிலிர்க்கத் தோன்றிய இந்த அஸ்தி

வாரத்தில் எழும்பிய ஆன்மீகக் கோட்டையே ஸ்ரீ காமகோடி பீடம்.

* * *

ஸ்ரீ காஞ்சியில் அன்றுமுதல் காலடி இடம் பெயர்ந்து விட்டது. அத்வைதிகளுக்குக் காலடியே ஸ்ரீ காஞ்சியாகவும், ஸ்ரீ காஞ்சியே காலடியாகவும் தோற்றமளிக்கிறது. இதில் அதையும், அதில் இதையும் பார்த்து இன்புறுவதே அத்வைத சித்தாந்தத்தின் சாரம். ஜீவன் வேறு, பிரம்மம் வேறு என்றால்தானே இந்த இரண்டையும் இணைக்கும் மூன்றாவது சக்தி ஒன்றைத் தேட வேண்டிவரும்! ஸ்ரீ சங்கரரின் அத்வைத சித்தாந்தமோ அதற்கு இடம் தரவில்லை! ஆகவே, ஸ்ரீ காஞ்சியில் காலடியைக் காணும் லட்சக்கணக்கான பக்த அன்பர்களுக்கு ஒரு சிறு தொண்டு செய்வதே இந்நூலின் முக்கிய நோக்கம். நிற்க.

அப்பரம்பரை சிஷ்யர்களின் காலடியிலே வழி வழியே இந்நூற்றாண்டு ஆரம்பத்தில் 67 பீடாதிபதிகள் அலங்கரித்து, இன்று நடமாடும் க்ஷேத்திரமாக இயங்கும் நூலகமாக, அறிவுக் களஞ்சியமாக தெளிவுக்கோர் தெளிவாக, குவலய குருவாக தவசீலராக, தியாகச் சுடராக திகழும் நம் அன்புக்கும் பெருமதிப்புக்கும் பாத்திரமாக அருளாசிகளைப் பொழியும் அப்பெரியவாள் 68வது பீடாதிபதி ஸ்ரீ சந்திரசேகர இந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஆவார்: அம்மாமுனியின் வழியைப் பின்பற்றி ஆன்மீக உலகின் சுடரொளியாக நாட்டின் நாலாதிசைகளுக்கும் திக்விஜயம் செய்து கொண்டு வரும் ஸ்ரீ புதுப் பெரியவாள் ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி சுவாமிகளின் ஜீவிய சரிதத்தை மையமாக வைத்து இந்நூல் வரிசையில் இந்து மத, பாரத தேச, தமிழக அருமை பெருமைகளை நாம் அறிந்துகொள்ள முற்படுமுன் அச்சிறிய, பெரிய திருவடிகளாம்ய வழித்துணைக்கு அழைத்துச் செல்வோம்.

## 2. என்றும் பதினுறு

இதிகாசங்கள், புராணங்கள் உப புராணக்கதைகளில் சில சமயம் சிக்கல்கள் வரும்போது கதையின் ஓட்டம் தடை படும். அந்த சமயத்தில் சஞ்சீவியாக நாரதர் தோன்றி ஏதோ ஒரு புதிரையோ, முடிச்சையோ போட்டு கதை என்ற தேரை நகர்த்துவார். இல்லையென்றல் இந்திரன் வந்து சேரு வான். அவனுடைய நடவடிக்கைகள் எல்லாமே சர்ச்சைக் குரியவை. அதே சமயம் கதாரஸமும் நிறைந்து, காவியத் தின் போக்கில் தேக்கம் ஏற்படும்போது, அவன் திடும் பிரவேசம் செய்து முறைகேடான செய்கை ஒன்றில் ஈடு பட்டு, சாபமோ அல்லது சாப விமோசனமோ பெற்றுப் போவான். தடைபட்ட புராணம் அப்புறம் ஓட ஆரம்பித்து, முடிவில் போய்தான் முடிவடையும்!

இந்த உதாரணத்தை இங்கே குறிப்பிடவேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டு விட்டது. காரணம் வாசகர்கள் இதுவரை படித்து முடித்த சில பக்கங்கள் ஏறக்குறைய பதினுறு மாதங்களுக்கு முன்பு எழுதப்பட்டது. அதற்கு மேல் அது ஓடவில்லை! ஓட்ட நான் முயற்சி எடுக்கும் போதெல்லாம் ஏதேனும் ஒரு இடையூறு தோன்றிவிடும். "என்றும் பதினுக இது இருந்துவிடக்கூடாதே" என்ற கவலையில் நான் இருந்தபோது, நண்பர் வாசஸ்பதி வந்து சேர்ந்தார். என்றே ஒருநாள் ஏதோ ஒருவேளைக்கு முன்னறி விப்பு எதுவுமில்லாமல் வரும் அந்த நண்பரை அன்போடு வரவேற்பது என் வழக்கம். அவர் வந்து போனல் என் எழுத் துத் தொழிலில் ஏதாவது ஒரு புதிய திருப்பம் ஏற்படுவதை அனுபவத்தில் நான் கவனித்திருக்கிறேன். ஆகையால்

சுமார் இரண்டு வருஷம் கழித்து திடும்பிரவேசம் செய்த அவரை வரவேற்று உபசரித்தேன்!

வாசஸ்பதியைப் பற்றி ஏற்கெனவேயே சாஸ்தா பதிப்பக வாசகர்கள் ஓரளவுக்கு அறிந்துகொண்டிருப்பார்கள். விசிஷ்டாத்வைதியான அந்த அறிஞருக்கு சக்தி வழிபாட்டில் அசாத்திய ஈடுபாடு; அதன் காரணமாக சாக்த நூல்களில் பெரும்பாலானவற்றைப் படித்து ஆராய்ந்து. அழகழகான கருத்துக்களை வெளியிடுவார். ஆனால் கூடவே ஒரு துர்க்குணமும் உண்டு. பாதி பேசிக்கொண்டிருக்கும்போதே எண்ணத்தை எங்கேயோ மாற்றி ஓடவிட்டு,கேட்பவரின் ஆவலைத் தூண்டிவிட்டுத் தவிக்க வைத்துவிடுவார்! அப்போதெல்லாம் முன்னுக்குப்பின் முரணாக ஏதேனும் பேசும் அவரை நம் வழிக்குத் திருப்பிக்கொண்டு வர நாம் படாதபாடு படவேண்டும். சில சமயம் அலுப்பு மேலிட, "நீங்கள் நன்றாகப் படித்திருக்கிறீர்களே தவிர அது யாருக்கு உபயோகம்? 'எட்டிப் பழுத்து என்ன? ஈயாதார் வாழ்ந்தென்ன? தாம் கற்றதை பிறருக்குச் சொல்லிக்கொடுத்து அவரும் பயனடையச் செய்வது தானே தர்மம்!' 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற வாக்கியங்களும் இதற்குச் சான்றாக இருக்கின்றனவே!" என்று அவர்மீது கோபமும் வந்துவிடும். ஆனால், அவர் நமது கண்டனத்தையோ, அபிப்பிராயத்தையோ பொருட்படுத்தமாட்டார்!

* * *

இப்படியொரு பிரகிருதியான வாசஸ்பதி அன்று மாலை நான் சற்று ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த போது என் மேஜை மீதிருந்த பழைய குப்பைகள், புதிய குப்பைகள் எல்லாவற்றையும் புரட்டிக்கொண்டிருந்திருக்கிறார் "ஓய்வு என்பது ஒன்பது மணி நேரம் தான்! சரியாக இரவு ஒன்பது மணிக்குப் படுப்பேன்! காலை ஆறு மணிக்கு எழுந்து விடுவேன்" என்று சொல்வதோடு செயலிலும் காட்டும் வாசஸ்பதி

பகலில் சற்றுநேரம் சாய்ந்து கூட உட்கார மாட்டார்! தூக்கம், சோர்வு எதுவும் பகல் வேளையில் அவரிடம் நெருங்காது. ஏதேனும் பேசுவார். யாரும் கேட்க ஆள் இல்லாவிட்டால் நல்ல அருமையான ச்லோகங்களையும், வேத, உபநிஷத மந்த்ரங்களையும் சுத்த ஸ்வரத்தில் கண்ட நாதம் காததூரம் கேட்கும்படி சொல்லிக்கொண்டிருப்பார். ஆனால் என் வீட்டுக்கு வந்துவிட்டால் புஸ்தகங்களையும் கையெழுத்துப் பிரதிகளையும் புரட்டிக் கொணடிருப்பார். "என்ன ஐயா செய்கிறீர்?" என்று கேட்டால், 'ஏதோ குப்பையைப் புரட்டிக் கொண்டிருக்கிறேன்! இதுவரை ஒரு குந்துமணி கூட கிடைக்கவில்லை. குப்பையை எழுதித் தள்ளி வயிறு பிழைக்கவேண்டுமென்பது உமது தலையெழுத்து! லக்கினத்தில் புதன் இருக்கிறானேல்லியோ! எழுத்துக் குப்பைதான் சேர்ந்துகொண்டேயிருக்கும். ஞானகாரகன்: ஜீவனாதிபதி புதன். இந்தக்காலத்தில் இந்நாட்டில் புதனுக்கு வேலையில்லை. ஏனெனில், ஞானக் களஞ்சியத்தில் முக்கால்வாசிக்கு மேல் கடல் கடந்து போய்விட்டது, அந்நிய செலாவணி சம்பாதிக்க! எஞ்சியிருக்கும் கால்வாசி ஞானத்தை உம்மைப் போன்ற ஜாதகக்காரர்கள் — லக்கினததில் புதன் — குப்பையாக்கிக் கொண்டிருக்கிறார்கள்!" என்று வேடிக்கையாகப் பேசுவார். ஜோசியத்திலும் அவர் நிபுணர் என்பதால் சில சமயங்களில் நான் ஏதாவது அர்த்தமில்லாத கேள்விகள் கேட்பேன். அவரும் பட்டதும் படாமலும் பலன் கூறுவார்!

இத்தகைய குணவான் என் மேஜையைக் குடைந்து முடிந்த சமயம் நான் தூக்கம் கலைந்து எழுந்து வந்தேன். அவர் கையில் ஏதோ அச்சுக்கோத்து 'புரூப்' பிரதி எடுக்கப் பட்ட நீளக் காகிதம் ஒன்று இருந்தது. நான் உள்ளே நுழைந்ததைக் கூட கவனிக்காமல் அவர் அதைப் படித்துக் கொண்டிருந்தார். எல்லாவற்றையும் அலட்சியமாகத் தூக்கி எறியும் சுபாவமுடையவர் எதையோ ஊன்றிப் படித்ததைக் கவனித்த நான் பேசாமல் என் அறைக்குப் போய் விட்டு, சற்று நேரம் கழித்து வந்தேன். அப்போதும் அந்த

நீள 'புரூப்' காகிதம் அவர் கையிலேயே இருந்தது! சிரித்துக் கொண்டே, "என்ன குப்பை அது! சற்று முன்பு வந்தேன்; ஒரேயடியாக அதில் மூழ்கியிருந்தீர்கள்! இப்போதும் அதைக் கீழே வைக்கவில்லையே? உம்மையே அடியோடு கவர்ந்த விஷயம் அது என்றால் கல் வெட்டிலோ, செப்பு சாஸனத் திலோதான் அது பொறிக்கப்பட வேண்டும்..." என்று சொல்லிக்கொண்டே கிட்டத்தில் போய் மிக ஆச்சரியத் தோடு அதைப் பார்த்தேன். உடனே திடுக்கிட்டேன்!

ஒரு காலத்தில் என் எண்ணம் பூராவும் வியாபித் திருந்து, பிறகு, "என்றும் பதினாறாக" மாறி என் மேஜை யின் ஓரத்தில் ஒரு உறைக்குள் ஒளிந்துகொண்டிருந்த "காஞ்சியில் காலடி" என்ற நூலின் ஆரம்பம் அது. சில கையெழுத்து ஏடுகளை அச்சுக்கோத்து புரூப் அனுப்பிய அச்சகத்தாரும் 'அது என்னவாயிற்று' என்று கேட்கவில்லை. நானும் மேற்கொண்டு அந்நூலை எப்படி எழுதுவது என்று தயங்கியதோடு, வகையறியாமல் தள்ளி வைத்திருந்தேன். ஆனால் என் மனத் தளத்தில் நீங்காத ஒரு வேதனையாக அது இருந்தது. இந்த நாற்பது வருஷ எழுத்துலக வாழ்க்கையில் எழுத ஆரம்பித்த எதுவும் எனக்குத் தடைப்பட்டு நின்ற தில்லை, என நான் பெருமையடைவதை என்னை நன்கு அறிந்த வர்கள் ஆட்சேபிக்கத் துணியமாட்டார்கள். அப்படியிருந்தும் இந்த நூல் மட்டும் ஏனோ தெரியவில்லை, தடைபட்டு நின்று விட்டிருந்தது. ஒவ்வொரு நாளும் அந்த ஞாபகம் வராமல் என் பொழுது கழிந்ததில்லை. அந்த அளவுக்குத்தான் நான் வெற்றி கண்டேனே தவிர, என் எழுதுகோல் அந்த மகத் தான நூலை எழுதி முடிக்கும் பாக்கியத்தை இந்த ஜன்மத் தில் பெறப்போவதில்லை என்று நம்பிக்கை இழந்தவனாகவே மாறிவிட்டேன்! எனக்கு மீண்டும் அந்த நம்பிக்கையை வளர்த்து, அந்நூலை நான் எழுதி முடிக்க நன்கு உற்சாக மூட்டும் ஒரு கருவியாக நண்பர் வாசஸ்பதி வந்து சேர்ந் திருக்கிறார் என்று எண்ண அலைகள் என் உள்ளத்தில் மோதி, அவர் கையிலிருந்த அந்த 'புரூப்'பை அபபோதுதான்

புதிதாக பார்ப்பவன்போல் நானும் நெருங்கிப் பார்த்தேன். இதிகாச, புராண கதைகள் நகர மறுக்கும்போது அங்கே தோன்றும் நாரத மாமுனியாகவே நண்பர் வாசஸ்பதி எனக்கு அன்று காட்சியளித்தார்! "என்ன, குப்பையில் ஒரு குந்துமணி கிடைத்து விட்டதோ?" என்று புன்முறுவலோடு கேட்டேன்.

"ஆமாம்! ஏன் இதை ஊறுகாய் போட்டு வைத்திருக்கிறீர்! ஏதோ பெரிய அஸ்திவாரம் போட்டிருக்கிறீர். பத்து இருபது, முப்பது மாடி கட்டடத்திற்கான அஸ்திவாரம். ஆனால் மேலே எழும்பவில்லையே, ஏன்?" என்று கேட்டார்.

"இனிமேல் எழும்பிவிடும். ஏனென்றால் அதை எழுப்பி விட நீங்கள் வந்து சேர்ந்துவிட்டீர்கள்... அதை நான் ஊறுகாய் போடவில்லை. குருநாதன் சித்தம் அது... குருவுக்கு மிஞ்சிய சிஷ்யன் இல்லையே நான்?" என்றேன்.

"என்ன நடந்தது? உமக்குத்தான் ஜாதக ரீதியாகவே குரு கடாக்ஷம் உண்டே. போதாததற்கு, ஆசிரியர், எழுத்தாளர் என்ற பக்கபலத்தோடு குருவிடம் நெருங்கிப் பழகவும் பேசவும் வாய்ப்பு இருக்கிறதே!... நீர் சொல்வது புரியவில்லை. குருவின் சித்தம் வேறு மாதிரியாக இருந்ததோ?"

"அப்படியும் உறுதியாகச் சொல்ல முடியாது. சுமார் ஒண்ணரை வருஷத்துக்கு முன்பு ஸ்ரீ புதுப் பெரியவாளின் திவ்ய சமுகத்தில் அவர்களின் தேச யாத்திரையைப் பற்றி ஒரு நூல் எழுத ஆசைப்படுகிறேன் என்று விண்ணப்பித்துக் கொண்டேன். 'அப்படியே செய்யுங்கள்,' ஒரு 'மாதிரி நூல் தயார் செய்து காட்டுங்களேன்' என்று உத்தரவாயிற்று. அதற்குப் பிறகு சில நாட்கள் கழித்து, 'மாதிரி நூல்' ஒன்றும் முதல் அத்தியாயத்தின் சாரத்தையும் தயார் செய்து ஓரளவுக்கு நூல் எப்படி இருக்கும், என்ன விஷயங்கள் அதில் அடக்கமாகும், என்ன செலவு ஆகும் என்ற புள்ளி விவரங்களோடு ஸ்ரீ காஞ்சி மடத்தில் புதுப் பெரியவர்களை தரிசனம் செய்து, உடன் கொண்டு போயிருந்த மாதிரி

நூலையும் சமர்ப்பித்தேன். சுமார் அரை மணி நேரம் அதை மௌனமாக இருந்தபடியே புரட்டிப் புரட்டிப் பார்த்த சுவாமிகள் மெல்லிய குரலில் லேசாகச் சிரித்தபடி "பெரிய திட்டம்! பகற்கனவு போல் இருக்கு!" என்றார். ஆர்வத்திலும் ஆவலிலும் கும்மாளமடித்துக் கொண்டிருந்த என் நெஞ்சில் அந்த 'பகற்கனவு' என்ற சொல் சுரீர் என்று உரைத்தது. சர்க்கஸ் ஸ்டண்ட் நிபுணர் ஐம்பது அடி உயரத்தில் பாய்ந்து விளையாடுபவர் பிடி நழுவி 'பொத்'தென்று கீழே விழுந்தால் என்ன கதி அவருக்கு வருமோ, அதே கதிக்கு நான் ஆளாகிவிட்ட ஒர் உள்ளுணர்வு என்னை ஆட்கொண்டுவிட்டது. திகைப்பும், திகிலும் மேலிட நமஸ்காரம் செய்து, திரும்பினேன். மறுநாளே அச்சகத்திலிருந்து அது வரை நான் விவரமாக எழுதிக் கொடுத்துவிட்டுப் போயிருந்த கட்டுரையின் அச்சுக்கோத்த புரூப் வந்தது. அதை நான் படிக்கக்கூட இல்லை. ஸ்ரீ ஆசாரியாளின் 'பகற்கனவு' ஒரு மூடு பனியாக என்னைச் சூழ்ந்துகொண்டுவிட்டது. ஆனால் என் திட்டம் என்னவோ தகர்த்தெறியப்படவில்லை. என்றோ ஒருநாள் அந்த பகற்கனவு பலிதமாகி விடும் என்று காத்து இருந்தேன். நீர் நல்லதுக்கு வந்து சேர்ந்திருக்கிறீர்" என்றேன்.

"பாலினுள் அடங்கியுள்ள வெண்ணெய், நெய், மோர் மூன்றும் நமக்கு அறிமுகமானவையே! ஆனால் அதைப் பாலில் இருந்து பெறவேண்டுமானால் அந்தப் பாலை முறித்து வெவ்வேறு அம்சங்களாக மாற்ற ஒரு சாதனம் வேண்டியிருக்கிறது. அதுதான் உரை மோர், இப்போது யோசித்துப் பாரும். உமக்கே யார் பால், யார் உரை மோர் என்பது தெரியும்..." என்று கூறிவிட்டு என்னை ஏறிட்டுப் பார்த்துச் சிரித்தார் அவர். நான் தயங்கியதும், உம்; சொல்லும்! பெரிய எழுத்தாளன், சிந்தனையாளன் என்கிறீர்! ஊரில் இருக்கிற சில இரண்டுங்கெட்டான் வாசகர்களும் உம்மைப் பாராட்டுகிறார்கள்... இந்தச் சிறிய புதிருக்கு விடை காண இவ்வளவு நேரமா! அந்தக் காலத்திலே பள்ளிக்கூடங்களில் மனக்



தேவி சாரதா






கணக்குப் போட மாணவர்களுக்கு இரண்டு நிமிஷம்தான் கொடுப்பார்கள். ஞாபகம் இருக்கிறதா? இப்போ மனக் கணக்குப் பள்ளிப் பிள்ளைகளுக்கு மூளைக்கு ஒத்துக்கொள்ளாத விஷயம் என்று அந்தப் பரீக்ஷையையே நிறுத்தி விட்டார்கள்!'' என்று சிரித்தார்.

அவர் கூற்றில் உண்மை இருந்ததை நான் உணர்ந்தேன். பாலையும் உரைமோரையும் மூளையில் போட்டு கலந்து குழப்பினேன். சுமார் கால் மணி நேரம் அலசிப் பார்த்த பிறகே பதில் சொல்ல தைரியம் பிறந்தது. ''பால் சிஷ்யனைக் குறிக்கிறது. உரை மோர் குருவைக் குறிக்கிறது: சரிதானு!'' என்று தயங்கியபடி கேட்டேன்.

''நூறு மார்க் வாங்கி விட்டீர்! பால் மனம் படைத்த சிஷ்யனுக்கு உலகியல், பொருளியல், பக்தி, பண்பு எல்லாம் புரியாத கேள்விக் குறிகள் தாம். கல்வி கேள்விகளில் சிறந்தவர்களுக்குக் கூட இவற்றில் சந்தேகம் வந்துவிடும். பாலாக வரும் சிஷ்யனுக்குத் தெளிவு ஏற்படச் செய்யும் மகத்தான பொறுப்பை ஏற்றுள்ளார் குரு மூர்த்தி. அவர் திருஉருவின் முன்பு சிஷ்யனின் பால் மனத்தில் ஒளி யொன்று பளிச்சிடுகிறது. அந்த ஒளியோடு குருநாதனின் உபதேச ஒலியும் அருளோடு சேரவே, அந்த சிஷ்யன் என்ற பாலில் உரை மோர் கலந்து விடுகிறது. அவ்வளவுதான், சிஷ்யன் மனத்திலிருந்த மூடுபனி விலகி, விழுந்து விழுந்து குருவின் முன்னுல் நமஸ்கரித்து அவர் ஆசிகளைப் பெற்றுத் திரும்புகிறுன். அது முதல் அவனுக்குச் சங்கடங்கள் ஏற்படும் போதெல்லாம் குருவே உறுதுணையாக வருகிறுர். சிஷ்யனுடைய த்யானத்திலேயே குரு திருப்தியடைந்து சூக்ஷ்மமாக அவன் முன் தோன்றி, அவனுக்கு வழி காட்டுகிறுர். உடனே அங்கே சிஷ்யனை பாலில் வெண்ணெயும், நெய்யும், தயிரும், மோரும் பொங்கி வழிகின்றன!''

''நல்ல உதாரணம், நூதனமாகவும் இருக்கிறது. போகட்டும்: உம்ம அபிப்பிராயம் என்ன? இந்தக்கட்டுரைத்



கணக்குப் போட மாணவர்களுக்கு இரண்டு நிமிஷம்தான் கொடுப்பார்கள். ஞாபகம் இருக்கிறதா? இப்போ மனக் கணக்குப் பள்ளிப் பிள்ளைகளுக்கு மூளைக்கு ஒத்துக்கொள்ளாத விஷயம் என்று அந்தப் பரீக்ஷையையே நிறுத்தி விட்டார்கள்!'' என்று சிரித்தார்.

அவர் கூற்றில் உண்மை இருந்ததை நான் உணர்ந்தேன். பாலையும் உரைமோரையும் மூளையில் போட்டு கலந்து குழப்பினேன். சுமார் கால் மணி நேரம் அலசிப் பார்த்த பிறகே பதில் சொல்ல தைரியம் பிறந்தது. ''பால் சிஷ்யனைக் குறிக்கிறது. உரை மோர் குருவைக் குறிக்கிறது: சரிதானா!'' என்று தயங்கியபடி கேட்டேன்.

''நூறு மார்க் வாங்கி விட்டீர்! பால் மனம் படைத்த சிஷ்யனுக்கு உலகியல், பொருளியல், பக்தி, பண்பு எல்லாம் புரியாத கேள்விக் குறிகள் தாம். கல்வி கேள்விகளில் சிறந்தவர்களுக்குக் கூட இவற்றில் சந்தேகம் வந்துவிடும். பாலாக வரும் சிஷ்யனுக்குத் தெளிவு ஏற்படச் செய்யும் மகத்தான பொறுப்பை ஏற்றுள்ளார் குரு மூர்த்தி. அவர் திருஉருவின் முன்பு சிஷ்யனின் பால் மனத்தில் ஒளி யொன்று பளிச்சிடுகிறது. அந்த ஒளியோடு குருநாதனின் உபதேச ஒலியும் அருளோடு சேரவே, அந்த சிஷ்யன் என்ற பாலில் உரை மோர் கலந்து விடுகிறது. அவ்வளவுதான், சிஷ்யன் மனத்திலிருந்த மூடுபனி விலகி, விழுந்து விழுந்து குருவின் முன்னால் நமஸ்கரித்து அவர் ஆசிகளைப் பெற்றுத் திரும்புகிறான். அது முதல் அவனுக்குச் சங்கடங்கள் ஏற்படும் போதெல்லாம் குருவே உறுதுணையாக வருகிறார். சிஷ்யனுடைய த்யானத்திலேயே குரு திருப்தியடைந்து சூக்ஷ்மமாக அவன் முன் தோன்றி, அவனுக்கு வழி காட்டுகிறார். உடனே அங்கே சிஷ்யனென பாலில் வெண்ணெயும், நெய்யும், தயிரும், மோரும் பொங்கி வழிகின்றன!''

''நல்ல உதாரணம், நூதனமாகவும் இருக்கிறது. போகட்டும்: உம்ம அபிப்பிராயம் என்ன? இந்தக்கட்டுரைத்

தொடர் சரியாக அமையுமா? மதம் பற்றி பேசுவதும் எழுதுவதும் சர்ச்சைக்கு இடமளித்து விடுகிறதே! ஏற்கெனவேயே இந்தக் காலடிக்கும் காஞ்சிக்கும் உள்ள பொருத்தம் பற்றி சர்ச்சை இருந்துவருகிறது...இப்போ நான் வேறு...!"

"மட்டையைப் போட்டுக் குட்டையைக் குழப்பிவிட மாட்டீர், கவலைப்படாதேயும். ஏற்கெனவே நீர் ஸ்ரீகாஞ்சியில் சங்கரரை அமர்த்தி எழுதியிருக்கிறீர்: தவிர சங்கர விஜயம் பற்றியும் விரிவாக எழுதி, அனுபவசாலியாக மாறிவிட்டீர்! தவறு எதுவும் வராது...உம், எழுத ஆரம்பித்துவிடும்..."

"எப்படி எழுதுவது? உம்மிடம் சில சந்தேகங்களுக்குத் தெளிவு கண்ட பிறகு தான் எழுத்து வேலை ஆரம்பமாகும். முதலில் சங்கரருடைய காலம் எது, சொல்லும்? அவர் எத்தனை வயது வாழ்ந்தார்? எப்போது தோன்றினார்?"

"எப்பொழுது பிறந்தாரா? கி. பி. 1894ம் ஆண்டு மே மாதம் 20ந்தேதி பிறந்தார்! பதிமூன்று வயதில் அதாவது 1907ம் ஆண்டில் ஸர்வக்ஞ பீடத்தில் அமர்ந்தார்...!" என்று அவர் பேசிய போது நான் குறுக்கிட்டு, "என்ன சுவாமி, திடீர் என்று மூளைக் கோளாறு ஏற்பட்டுவிட்டது! நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் ஏதோ பிதற்றுகிறீரே?" என்று கேட்டேன்.

"நான் பிதற்றவில்லை. நீர் கேட்ட கேள்விக்கு அது சரியான பதில்தான். இப்போது காஞ்சியில் தேனம்பாக்கத்தில் தவயோகமூர்த்தமாக, சில சமயம் கலகலவென்று பேசியும், சில சமயம் கம்மென்று ஆடாமல் அசையாமல் காட்டிய பல்லைக் காட்டியபடி உட்கார்ந்திருக்கும் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளை உலகம் என்ன விதத்தில் எடை போடுகிறது? அவரே ஆதிசங்கரரின் அவதாரம், அவரே நடமாடும் தெய்வம் என்றெல்லாம் சொல்லவில்லையா? உலக அபிப்பிராயத்தை யொட்டித் தானே நீரும் எழுதவேண்டும்? அதற்காகத் தான் அப்படி மறைமுகமாகச் சொன்னேன்...

அந்த மகான் வேறு, ஆதிசங்கரர் வேறு என்பது உமது அபிப்பிராயமோ?"

"அபசாரம்! அபசாரம்!! இப்போது நாம் காணும் கண் கண்ட தெய்வத்தைப் பற்றி எழுதுவதுதானே என் குறிக்கோள்! கட்டுரையின் தலைப்பும் அதற்குத் தானே அஸ்திவாரம்? காலடியில் தோன்றிய ஸ்ரீ பகவத்பாதாளின் ஆயுளை சிலர் ஏறக்குறைய 2500 ஆண்டுகள் என்று கூறுகிறார்கள். அதற்கு ஆதாரங்கள் பலவற்றை ஆணித்தரமாக எடுத்துக் காட்டுகிறார்கள். வேறு ஒரு பகுதியினர் அந்த அவதாரத்தின் ஆயுளை சுமார் 1300 ஆண்டுகள் என்கிறார்கள், அவர்களும் நிறைய சான்றுகளைக் காட்டுகிறார்கள். ஒரு கட்டுரையாளனுடைய கடமை என்ன தெரியுமா?..." என்று நான் கேட்டதும் வாசஸ்பதி இடிஇடி யென்று சிரித்தார். "கட்டுரையாளனின் கடமையைத்தான் நீர் செய்து காட்டுகிறீரே! எதையோ ஒன்றை எழுதி வாசகர்களைக் குழப்பிவிட்டு, அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு இந்தத் தெருவிலிருந்து அடுத்தத் தெருவுக்கு கொம்பு, கயிறு, தம்பட்டத்தைத் தூக்கிக் கொண்டு ஓடும் கழைக் கூத்தாடி போல், வேறு ஒரு நூல் எழுதத் தொடங்குவது தான் கட்டுரையாளன் கடைப்பிடிக்கும் கடமை! அவன் வாழ, வயிறு வளர்க்க அவ்வாறு செய்வதுதான் தர்மம் என்றும் கூறலாம். தர்மத்தில்தான் பலவகை இருக்கிறதே? எல்லா தர்மங்களும் ஓரளவுக்கு பொருளாதார அடிப்படையில் தானே தோன்றியுள்ளன! வேத, வேதாந்த தர்மங்கள் எல்லாம் காலத்திற்கேற்றவாறு இப்போது வளைந்து கொடுக்க ஆரம்பித்து விட்டன...உம் ஹூம்! தவறு: அவை வளைந்து கொடுக்கவில்லை! பொருளாதார உலகில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாம் அவற்றை நமது சூழ் நிலைக்கேற்ப வளைத்து விடுகிறோம்...சரி! பேச்சு திசை மாறிப் போவதை நீர் விரும்பலாம். ஏனெனில், பதினாறு மாதங்களாகத் தள்ளிப் போடப்பட்ட விஷயம்...இன்னும் பத்து நாளோ, மாதமோ ஒத்திப்போடுவதால் ஒன்றும் குடி முழுகிப் போய்விடாது என நீர் நினைக்கலாம். என் அபிப்

பிராயம் வேறு. முதல் அத்தியாயத்தைப் படித்த பிறகு எனக்கு இந்நூலே உம்மைக் கொண்டு சீக்கிரம் எழுதி முடிக்க ஆர்வம் ஏற்பட்டு விட்டது. ஆகவே, வீண் பொழுது போக்க நான் விரும்பவில்லை'' என சற்றுக் கண்டிப்பாக அவர் கூறியதும்; நான் என் தோளில் ஏற்றப்பட்டுள்ள சுமையின் பலத்தை உணர்ந்தேன்.

சற்று நேரம் இருவரிடையே நிலவிய மௌனத்தைக் கலைத்துக் கொண்டு வாசஸ்பதி ''உமக்கு என்னென்ன சந்தேகங்கள், சேளும். தெரிந்தவரை பதில் சொல்கிறேன். அதை வைத்துக் கொண்டு கட்டுரையை நகர்த்தி விடும். அப்புறம் வழித்துணை நாதனுக இக்கட்டுரையின் ஜீவநாடியான ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளே உமது பேனுமுனையிலும், கையிலும், கற்பனையிலும் அமர்ந்துவிடுவார்!'' என்ருர்.

''ஸ்ரீ சங்கர பகவத்பாதாளின் காலத்தை சுமார் கி. மு. 2500 ஆண்டுகளுக்கு முன்பு என்று நான் கட்டுரை ஒன்று எழுதியிருக்கிறேன். ஸ்ரீகாஞ்சியில் அவர்கள் ஸர்வக்ஞ பீடாரோகணம் செய்து, பாரத ஹிந்து ஸநாதன தர்மத்தை அஷ்டதிக் பாலகர்களும் திகைக்கும்வண்ணம் தமது அத்வைத சித்தாந்தத்தின் மூலம் பரவச் செய்து, ஸ்ரீ காஞ்சியிலேயே அன்னை காமாட்சியின் அருள் ஒளியில் லயமடைந்து, அந்த திய்ய சந்நிதியிலேயே தமது சந்நிதியும் விளங்க திருவருள் புரிந்து, கேரளத்திலிருக்கும் காலடியை ஸ்ரீ காஞ்சிக்கு கொண்டு வந்துவிட்டார்என்று மேற்கோள்களோடு கட்டுரை எழுதியுள்ளேன். நமது வைதிக மதத்தின் பால் பற்றும், பக்தியும் கொண்டு வாழும் கோடிக் கணக்கான மக்கள் இந்த அபிப்பிராயத்தோடுதான் இன்றும் வாழ்ந்து வருகிருர்கள். ஸ்ரீ காஞ்சியில் பகவத்பாதாள் நிரந்தரமாக வாஸம் செய்யும்வரை நாட்டின் நாலா திசைகளுக்கும் விஜயம் செய்து, மெய்ஞ்ஞான பிரசாரம் செய்து, வேதத்திற்கு விபரீத வியாக்கியானங்கள் கூறி பாஷாண்ட மதங்களை ஸ்தாபித்து மக்களை துன்மார்க்கத்தில் கடத்திச் சென்ற

போலி மத பிரசாரகர்களை வாதுக்கு இழுத்து வெற்றிகண்டு, தமது பிரம்மஸூத்ர பாஷ்யத்திற்கு வெகு சீக்கிரத்தில், வெகு எளிதில் ஆதரவு தேடிக் கொண்டார்! காட்டுத் தீ போல் பரவிக் கொண்டிருந்த தீய சக்திகளை அழித்து ஆத்வைத சித்தாந்தத்தை உலகம் உள்ளளவு பிரசாரம் செய்ய ஸ்ரீ மடங்கள் ஐந்தை ஸ்தாபித்து, ஐந்தாவதான ஸர்வக்ஞ பீடத்தில் தாமே அமர்ந்து, ஸ்ரீ காஞ்சி காமகோடியின் முக்கியத்வத்தையும் நாடறியச் செய்தார். அவ்வழி வந்த மகான்கள் வரிசையில் இன்று நாம் செய்த பாக்கியமாக ஆதிசங்கரரே அவதாரமென நாம்போற்றும் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் இரண்டாவது சென்னை மாநகர பட்டணப் பிரவேசத்தின் போது சில கட்டுரைகள் எழுதினேன். இவற்றிற் கெல்லாம் எதிர்ப்பு இல்லை என்றாலும் அபிப்பிராய பேதங்கள் அவ்வப்போது எழுந்து, சிலர் என்னிடமே விளக்கம் கேட்டிருக்கிறார்கள். அப்போதெல்லாம் குருபாதம் என் கருத்தில் வந்து அமர்ந்து ஞான சூன்யமான என்னை ஆட்கொண்டு சரியான விளக்கங்கள் கூறி, எனக்கு உதவும்! இப்போதும் அந்த குரு பாதம் துணை கொண்டு தான் ஆரம்பித்தேன். நீங்களும் வந்து சேர்ந்தீர்கள்! ஸ்ரீ பகவத் பாதாளின் காலத்தை சுமார் கி. மு. 500 என்று சொல்வது சரியாயிருக்குமா?'' என்று இதுவரை நான் ஸ்ரீ காமகோடி பீடத்தோடு கொண்டிருந்த தொடர்பின் தன்மையைச் சுருக்கமாகக் கூறி, அவர் அபிப்பிராயத்தையும் கேட்டேன்.

''ஸ்ரீ சங்கரர் தோன்றிய இடம் காலடி: கேரளத்தைச் சேர்ந்த திவ்ய ஸ்தலம். ஆனால் அவருடைய திருப்பாதங்களும், திருப்பார்வையும் இந்நாடு பூராவும் பலனடைய வேண்டி, பரவி வியாபித்திருக்கின்றன. அவருடைய பிறந்த காலத்தை இப்போது ஆட்சேபிப்பதோ, ஆராய்வதோ அபிப்பிராயத்தை வலியுறுத்துவதோ, அதற்காகச் சர்ச்சையைக் கிளப்புவதோ, ஒருவரையொருவர் கண்டனம் செய்து கொள்வதோ முறையற்ற செயல் என்பதே என் அபிப்

பிராயம். தவிர அவர்கள் பிறமதக் கண்டனம் செய் தார்கள் என்னும்போது, புத்த, சமண மதங்களை சிலர் சுட் டிக் காட்டுகிறார்கள். அம்மதங்கள் ஏறக்குறைய 1500 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியவை! ஸ்ரீ சங்கர பகவத் பாதாளின் காலமோ கி. மு. 500ம் ஆண்டு. தங்களுடைய வாதத்திற்கு பலம் கொடுக்கவேண்டி பகவத் பாதாளின் காலத்தை கி. பி. ஆறு, ஏழு நூற்றாண்டுகளுக்குக் கொண்டு வருவதை இந்திய சரித்திரம் ஏற்றுக் கொள்ளாது.

"ஆகவே, நீர் உமது முந்தைய தீர்மானத்தையொட்டியே பகவத் பாதாளின் காலத்தை கி. மு. 500 என்று வலியுறுத் தலாம். ஸ்ரீ காஞ்சியே அவருடைய இறுதிக்கால வாசஸ் தலம் என்பதும் பொருத்தமானதாகவே இருக்கும். ஏனெ னில், காலடியில் தோன்றியவருக்கு கேரள சரித்திரத்தில் அதிக இடம் தரப்படவில்லை. மற்ற மாநிலங்களிலும் அதே நிலைதான். ஆனால், நமது பழந்தமிழ் நாட்டில் பகவத் பாதா ளுக்கு முதல் இடம் கொடுக்க எந்தப் பிரிவினரும் தயங்குவ தில்லை. தவிர நமது புராதன ஆலயங்கள் பலவற்றில் பகவத் பாதாளின் திருவுருவம் சிலா ரூபத்தில் பூஜையில் இருப்பதை நாம் பார்க்கிறோம். அதுவும் தொண்டைமண்ட லத்தில் (சென்னை—வட ஆற்காடு, செங்கற்பட்டு, தென் ஆற்காடு மாவட்டங்களில் சங்கர ஆராதனை வெகு காலமாக நடைபெற்று வருகிறது. திருவொற்றியூர், மாங்காடு, ஸ்ரீ காஞ்சி போன்ற தலங்களில் ஸ்ரீ சங்கரருடைய சிலைக்கு பிரதான இடம் தரப்பட்டிருக்கிறது.

"கேரளத்தில் பிறந்து ஹிந்து மதத்தின் சிறப்பை தமது பிரும்ம ஸூத்ர பாஷ்யத்தின் மூலம் எடுத்துக் காட்டி மக்கள் கலியுகம் முடியும்வரை ஏற்கக்கூடிய விதத்தில் அத்வைத சித்தாந்தத்தைத் தோற்றுவித்து, 'திராவிட நாட்டின் பண் புக்கும், சீலத்திற்கும், பக்தி வாழ்க்கைக்கும், சாஸ்த்ர ஞானத் திற்கும், மக்களின் பணிவன்புக்கும் தலைமை பூமியாக விளங் கும் ஸ்ரீ காஞ்சிமா நகரத்தை பழந்தமிழ் மரபு மேலும்

# ஆத்ம போதம்

"அக்ஞான கலுஷம் ஜீவம் ஞானப்யாஸாத் விநிர்மலம்
க்ருத்வா ஞானம் ஸ்வயம் நச்யேத் ஜலம் கதகரேணுவத் ॥ 5

ஸம்ஸார: ஸ்வப்ந துல்யோ ஹி ராகத்வேஷாதி ஸங்குல:
ஸ்வகாலே ஸத்யவத்பாதி ப்ரபோதே ஸத்யஸத் பவேத் ॥ 6

☆



அச்ஞானத்தில் கலக்கமுற்றுள்ள ஜீவன் ஞான அப்யாஸத்தினுல் தெளிவடைகிறது. கலங்கிய ஆற்றுநீரில் பொடி செய்து போடப்பட்ட தேத்தாங்கொட்டை நீரிலுள்ள கலங்கிய நிலையை தெளியச் செய்து தானும் அம் மண் முதலிய அழுக்குடன் அடியில் தங்குவது போல், அஞ்ஞானத்தை நாசம் செய்து ஞானமும் மறைந்து விடுகிறது. உண்மையில் கனவு போல் காணும் இவ்வுலகம் ஆசைகளால் (ராகத்வேஷ) நிறைந்தது. ஞானம் ஏற்பட்டதும் (விழித்தவன்போல்) பொய்யாக ஆகி விடுகிறது.

☆

I cannot conceive how a man could look up into the heavens and Say there is no God.

—*Abraham Lincoln*

---

பிரகாசிக்க அடைந்து, அன்னையின் அருள்நோக்கில் தமது ஆன்மீக தத்துவங்களை சமர்ப்பித்து தேசிய ஒற்றுமைக்கும் அடிகோலிய ஸ்ரீ ஆதிசங்கரரை ஸ்ரீ காஞ்சியில் அன்று தரிசித்தவர்கள் பாக்கியசாலிகள் என்றால், இந்த இருபதாம் நூற்றாண்டில் வாழக் கொடுத்து வைத்த நாமும் அவர்களைவிட ஒருபடி அதிகமாகவே புண்யமும் பாக்கியமும் செய்தவர்கள்! ஏனெனில், கி. மு. 5-ம் நூற்றாண்டுக்கும், கி. பி. இருபதாம் நூற்றாண்டுக்கும் இடையே கடந்துபோன இருபத்தி நான்கு நூற்றாண்டுகளிலும் ஸ்ரீ ஆதிசங்கரர் அவதாரமாகவே ஒரு மகான் விளங்கினார் என்று வரலாறு எதுவும் கிடைக்கவில்லை. நீண்டதொரு பரம்பரை பகவத்பாதாள் காலத்திலிருந்து ஸ்ரீ காமகோடி பீடத்தை அலங்கரித்து வந்தபோதிலும், இந்த இருபதாம் நூற்றாண்டில் நாம் தரிசிக்கும் ஜகத்குரு... ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சுவாமிகள் போன்ற ஒரு புருஷோத்தமர் நம்மிடையே வாழ்ந்து வந்த வரலாறு சரித்திரக் குறிப்புகளில் இருப்பதாக எந்த ஆராய்ச்சியாளரும் எடுத்துக் காட்டவில்லை.

"மகான்கள் தோன்றுவதும் மறைவதும் நம்மைப்போன்ற சாதாரண மக்களின் நலனுக்காகத்தான். இன்று ஸ்ரீ காமகோடி பீடாதிபதியாகத் திகழும் ஸ்ரீ பெரியவர்கள் உலக மாந்தரின் கவனத்தையே ஈர்ந்தவர். ஜகத்குரு என்றால் உலகத்திற்கே குருவாக விளங்குபவர் என்று அர்த்தம். ஸ்ரீ பகவத்பாதாளின் அத்வைத சித்தாந்தத்திற்கு உலகின் எந்த பாகத்திலிருந்தும் எந்த மதத்தினரிடத்திலிருந்தும் எதிர்ப்பு வரவில்லை. பிற மதங்கள் போதிக்கும் நீதி, நெறிகளனைத்தையும் அத்வைத சித்தாந்தம் தெளிவாகக் காட்டுகிறது. புராதன ஹிந்து மதத்தின் காலத்தையும், அனாதியான வேதங்களின் பெருமையையும் உலக மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். அதனாலேயே வெளிநாடுகளிலிருந்து யோக, ஆன்மீக ஆராய்ச்சிக்காக நமது தேசத்திற்கு வருபவர்கள் முதலில் பகவத் பாதாளின் பரம்பரைக்கே முக்கியத்வம் கொடுக்கிறார்கள். அதற்கு ஒரு

# ஆத்ம போதம்

தாவத் ஸத்யம் ஜகத் பாதி சுக்திகா ரஜதம் யதா
யாவந்ந ஞாயதே ப்ரஹ்ம ஸர்வாதிஷ்டான மத்வயம் ॥ 7

உபாதாநேகிலாதாரே ஜகந்தி பரமேச்வரே
ஸர்க ஸ்திதி லயான் யாந்தி புத்புதாநீவ வாரிணி ॥ 8

★



எல்லாவற்றிற்கும் இருப்பிடமான இரண்டற்றப் ப்ருஹ்மத்தை அறியும்வரை கிளிஞ்சலில் (மாயத் தோற்றமான) வெள்ளியைப் போல் இவ்வுலகமும் உண்மையாகத் தோன்றும்.

நீரில் தோன்றி, இருந்து, மறையும் குமிழி போல், எல்லாவற்றிற்கும் ஆதாரமாக உள்ள பரப்ரஹ்மத்திடமே உலகமெல்லாம் தோன்றி, நின்று அழிந்துபோகிறது.

★

"Confidence imparts a wonderful inspiration to its possessor."

*—John Milton.*

காரணம் கூறினாலே போதுமானது. பிரம்மஸூத்ர பாஷ்யத்தையும், வேதம் ஏற்கும் ஒரு சித்தாந்தத்தையும் முதன் முதலாக உலகிற்கு அளித்தவர் ஸ்ரீ ஆதிசங்கரர். அந்தத் தெய்வத் தோற்றத்திற்குப் பிறகே மற்ற மதங்களும் மதாசாரியர்களும், சித்தாந்தங்களைத் தோற்றுவித்த பாஷ்யக்காரர்களும் அவதாரம் செய்திருக்கிறார்கள். வீடு ஒன்று கட்டுவது மிகக் கஷ்டமான காரியம்: ஆனால் கட்டிய வீட்டுக்குக் குற்றம் குறைகூறி, மனம் போனபடி மாறுதல்கள் செய்வது சுலபம். ஹிந்து மதம் என்ற தேர் உலகப் பாதையில் ஓட சக்கரங்களும், அச்சும், அச்சாணிகளும் செய்து போட்ட மகான் ஸ்ரீ சங்கரர். அந்தப் பலத்தில் அமர்ந்திருக்கும் மேல் தட்டுக்கு மேல் திரைச்சீலைகள் வண்ணத்தோரணங்கள் கட்டி அவரவர் கருத்தில் தோன்றியதுபோல் பொலிவு உண்டாக்கியவர்கள் மற்ற சித்தாந்தக் காரர்களும், பாஷ்யக்காரர்களும் என்று சொன்னால், அதைத் தகுந்த ஆதாரங்களோடு ஆட்சேபிக்க யாரும் தைரியமாக முன்வரமாட்டார்கள் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை.''


* * *

வாசஸ்பதியின் வாதத்திறனை நான் நன்கு அறிவேன். அதோடு அவர் அதிகமாகக் கொண்டாடுபவர்களையும், போற்றி வணங்குபவர்களையும் சற்று நிந்தாஸ்துதியான வார்த்தைகளாலேயேதான் சுட்டிக் காட்டிப் பேசுவார். ஸ்ரீ பெரியவாளை ''கிழம்'' என்பார். ஸ்ரீ புதுப் பெரியவாளை ''கன்று'' என்பார். ஆனால், அத்வைத மடாதிபதிகளான பெரியவாளும், புதுப் பெரியவாளும் அவருடைய இரு கண்கள் என்று கூறுவது பொருத்தமாயிருக்கும்! அவர் பேசி முடித்ததும் நான் ஆரம்பித்தேன்:

''அப்படியானால் உங்கள் உதவியோடு நான் இக்கட்டுரையை எழுதத் தொடங்கலாம் இல்லையா? மறுபடியும் உறுதிமொழி கேட்கிறேனே என்று நினைக்காதீர்கள். நீங்கள்

# ஆத்ம போதம்

ஸச்சிதாத்மங்யனுஸ்யூதே நித்யே விஷ்ணௌ ப்ரகல்பிதா:
வ்யக்தயோ விவிதா: ஸர்வா ஹாடகே கடகாதிவத் ॥ 9
யதாகாசோ ஹ்ருஷீகேசோ நாநோபாதி கதோ விபு:
தத்பேதாத் பிந்நவத் பாதி தந்நாசாத் கேவலோ பவேத் ॥ 10



ஸத், சித், வடிவமாயும் எங்கும் பரவி அழிவற்றதாக உள்ள ப்ரஹ்மத்திடமே பல்வேருக வித்யாசமுள்ள எல்லாம் தங்கத்தில் காப்பு, நகை முதலியனபோல கல்பிதம் செய்யப்பட்டுள்ளது.

ஆகாயம்போல் முடிவற்ற பரம், உபாதிகளின் சேர்க்கையினல் (குடம், மடம், முதலியவற்றில் உள்ள ஆகாய வெளிபோல்) பல்வேருகத் தோற்றமளிக்கிறது. அவ்வுபாதி நாசத்தால் தனது இயல்பான, இரண்டற்ற ஒன்றேயான நிலையை அடைகிறது.

Find the thing meant for you to do and do the best you can. You must be faithful to the place where God put you and for which you are eqipped.

—*Henry David Thorean*

---

ஒரு மண் குதிரையாயிற்றே என்றுதான் கேட்டேன்..." என்றேன்.


"மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கக் கூடாது. ஆனல் இந்த மாதிரி ஒரு கான்கிரீட் தள அறைக்குள் மண் குதிரையில் உட்காரலாமல்லவா? பேசாமல் வேலையைப் பாரும்...நாள் நட்சத்திரம் பார்க்க வேண்டாம். இன்று நல்ல நாளதான், ஆரம்பிக்கலாம். விட்ட இடத்தில் தொடங்கப் போகிறீரா? வேறு திட்டம் போடப் போகிறீரா?" என்று கேட்டார்.

"என்ன செய்யலாம் சொல்லுங்களேன்...ஸ்ரீ புதுப் பெரியவாளின் ஜீவிய சரிதமும், அவர்கள் இதுவரை செய்து வந்த திக்விஜயமும்தான் இந்நூலின் மையத்து ஆணி! மற்ற விவரங்கள் எல்லாம் தேருக்கு அலங்காரம் செய்வதுபோல் தான். ஸ்ரீ புதுப் பெரியவாளின் பிறந்த மண்ணைத் தரிசித்து விட்டு வந்தேன். அவர்கள் வேத, சாஸ்த்ர பாடம் பயின்ற இடங்களுக்கும் போய்வந்தேன். அவர்களுடைய பெற்றோரையும் பேட்டி கண்டு பேசினேன்...அந்த விவரங்களை யெல்லாம் எழுதவேண்டும் முதலில்...நீங்கள் என்ன அபிப்பிராயம் சொல்கிறீர்கள்?"

"இந்த எழுத்துத் தொழிலில் ஊறிப்போன உமக்கு நான் என்ன யோசனை கூறமுடியும்? ஆனல் எனக்குத் தோன்றியதைச் சொல்கிறேன். அது சரி என்று உமக்கும் தோன்றினல் அப்படியே எழுத ஆரம்பித்துவிடும். ஏற்கெனவே பத்திரிகையில் ஸ்ரீ காமகோடி பீடத்தைப்பற்றி ஏதேதோ கட்டுரைகள் எழுதியிருக்கிறீர்கள். இரண்டு பெரியவர்களையும் அடிக்கடி சந்தித்துப் பேசியிருக்கிறீர்கள். அம் மகான்களும் உம்மோடு பேசுவதை ஒரு நல்ல ஜனோபகாரமாகக் கருதினர்கள் என்பதை நான் அறிவேன். அதனல் அந்த உமது அனுபவங்களை யெல்லாம் ஞாபகப் படுத்திக் கொண்டு ஒரு கூட்டாஞ்சோறு தயார் பண்ணும். பிறகு அதற்கு காது, மூக்கு, வாய் எல்லாம் வைத்து ஓர்

# ஆத்ம போதம்

நாநோபாதி வசாதேவ ஜாதி வர்ணாச்ரமாதய: |
ஆத்மந் ஆரோபிதாஸ் தோயே ரஸவர்ணதிபேதவத் ‖ 11
பஞ்சீக்ருத மஹாபூத ஸம்பவம் கர்ம ஸஞ்சிதம் |
சரீரம் ஸுகதுக்காநம் போகாயதன முச்யதே ‖ 12



★

நீரில் தோன்றும் நிறம், சுவை முதலியன சேர்க்கையினுல் தோன்றுவதுபோல, உபாதிகளின் கூட்டுறவால் ஆத்மாவிடத்து ஜாதி, வர்ணம், ஆச்ரமம் முதலிய தர்மங்கள் ஏற்பட்டு தோற்றமளிக்கிறது.

பஞ்சிகரணம் செய்யப்பட்ட மஹாபூதங்களிலிருந்து (மண், ஆகாயம், தீ, நீர், காற்று) உண்டான சுக துக்கங்களை அனுபவிக்கக் கருவியாக உள்ள உடல் ஆத்மாவின் உறைவிடமாக கூறப்பட்டுள்ளது.

★

The best way to know God is to love many things.

—*Vincent Vad Gogh*

உரு கொடுத்து விடும். உமக்குத் தெரியாவிட்டால் தானே யோசனை கூறவேண்டும்? இந்த வித்தையில் நீர் கைதேர்ந் தவர்: ஆகையால் இதையெல்லாம் எழுதி முடியுங்கள்... நாளையோ மறுநாளோ நான் வருகிறேன். இந்தக் கட்டுரை ஆரம்பத்தைப் படித்ததும் என் எண்ணம் தேனம்பாக்கத் திற்குப் போய்விட்டது. கால்கள் காஞ்சீபுரம் பஸ்ஸைப் பிடிக்கத் துடிக்கின்றன. ஆகையால் எனக்கு அனுமதி கொடும். இரண்டு நாள் தேனம்பாக்கத்தில் தங்கியிருந்து உம்ம முயற்சி வெற்றியடைய நானும் பிரார்த்தனை செய்து கொண்டு வருகிறேன்" என்று என்னை உற்சாகப்படுத்தி விட்டு, வெற்றிலைப் பாக்குப் பெட்டியையும், துணிமணிப் பையையும் கையில் தூக்கிக் கொண்டார். அதற்கு மேல் அவரைத் தடை செய்து நிறுத்த முயன்றால் தோல்விதான் அடைவோம் என்பதை அனுபவத்தில் நான் பார்த்தவனாதலால், வாசல்வரை சென்று அவரை வழி அனுப்பி வைத்து விட்டு வந்தேன்.

*　　　*　　　*

திரும்பியும் "காஞ்சியில் காலடி" கட்டுரை புரூப்பை கையில் எடுத்து, பதினாறு மாதங்களுக்கு முன்பு எழுதியதைப் படித்துப் பார்த்தேன். வாசஸ்பதி அந்தச் சிறிய கட்டு ரையை ரஸித்து என்னை ஊக்குவித்ததில் ஆச்சரியமேயில்லை. ஏனெனில், அந்தப் பகுதியில் இன்னும் ஜீவன் ஓடிக் கொண் டிருந்தது. 'என்றும் பதினாறு'க இந்த நூல் இருக்கவேண்டி குருத்யானம் செய்து, மானசீகமாக ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளுக்குப் பூரண கும்பம் கொடுத்து வரவேற்றேன். புன்முறுவலோடு கை உயர்த்தி அருளாசிகள் வழங்கிய ஸ்ரீ புதுப்பெரியவாளிடம் "தயவு செய்து தூலமாக சுவாமி கள் எங்கு சென்றாலும் சூக்ஷ்மமாக இக்கட்டுரைத் தொடர் பூர்த்தியடையும்வரை இங்கேயே இருக்கவேண்டும்" என்று வேண்டிக் கொண்டேன்.

# 3. குரு தத்துவம்

1959-ம் ஆண்டு என்று ஞாபகம். சங்கர ஜயந்தி விழாவுக்கான ஏற்பாடுகள் நகரத்தின் பல்வேறு பேட்டைகளில் நடைபெற்றுக் கொண்டிருந்ததற்கு அறிகுறியாக அழைப்பு இதழ்கள் வந்துகொண்டிருந்தன. ஒரு நாள் அலுவலகத்தில் முக்கியமான வேலையில் இருந்த சமயம், டெலிபோன் மணி அடித்தது. எடுத்துப் பேசினேன். அந்த முனையிலிருந்து பேசியவர் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். பேசியவர் பேராசிரியர் டாக்டர் டி. எம். பி. மகாதேவன் அவர்கள். ரத்னக்கச்சிதமாக, ''ஒன்றுமில்லை. சங்கர ஜயந்தி விழா சம்பந்தமாக உங்கள் ஒத்துழைப்பு வேண்டியிருக்கிறது. என் உடல்நிலை சரியில்லாததால் நேரில் வரமுடியவில்லை. மன்னிக்க வேண்டும். என் உதவியாளர் பேராசிரியர் சுந்தரம் அவர்களை என் பிரதிநிதியாக அனுப்பியிருக்கிறேன். வந்துகொண்டிருக்கிறார்: இன்னும் பதினைந்து நிமிஷங்களில் அங்கு இருப்பார். விவரங்களைச் சொல்வார்'' என்று அழகாகவும், 'தமிழ் பண்பின் எல்லைக்கோடு இது தான்' என்பதற்குச் சான்றாகவும் பேசினார். இத்தனை வருஷங்களாக—சுமார் 22 ஆண்டுகள்—பெயரளவுக்கு அறிந்திருந்த அறிஞர் இப்போது நம் ஒத்துழைப்பை நாடுவானேன்?' என்று பீதியடைந்து உட்கார்ந்து விட்டேன்.

பேராசிரியர் சுந்தரம் குறித்த காலத்தில் என்னிடம் வந்து சேர்ந்தார். ஒரு தூதுவனுக்குரிய லக்ஷணங்களோடு வார்த்தைகளை எண்ணிப் பார்த்துப் பொறுக்கி எடுத்துக் கோத்து, ''சங்கர ஜயந்தியன்று நீங்கள் ஏதாவது ஒரு விஷயம் பற்றிப் பேசவேண்டும் என்பது டாக்டர் டி. எம். பி.

அவர்களுடைய ஆசை. இன்னும் ஒரு வாரம் தான் அவகாசம் இருக்கிறது. அதனுல் தயவுசெய்து நாளை பத்து மணிக்குள் தாங்கள் பேசப்போகும் விஷயத்திற்கான தலைப்பைச் சொல்லவேண்டும் அப்போதுதான் முன்கூட்டியே பத்திரிகைகளுக்குச் செய்தி அனுப்ப இயலும்'' என்ருர்.

அவர் பேசி முடித்ததும், சுரீர் என்று ஆயிரம் தேள்கள் ஒரு சமயத்தில் தேகம் பூராவும் கொட்டினுற் போல் இருந்தது. "ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது! ஆள் மாருட்டத்தில் என்னை நாடி வந்திருக்கிருர். சாஸ்த்ரம், சம்பிரதாயம், வேதம், மந்திரம், தத்துவம், சமயம், சித்தாந்தம் என்ற வார்த்தைகள் எழுதப்பட்டிருக்கிற திசையில் தலைவைத்துக் கூடப் படுக்காதவன் நான். என்னைக் கூப்பிட்டு சங்கர ஜயந்தி விழாவில் பேசச் சொல்லவாவது! சேசே! கிழவனைத் தூக்கி பணையில் வைத்து தாலி கட்டச்சொன்ன கதைதான் இது! குருடனுல் ராஜ பார்வை பார்க்க முடியுமா? யாரோ நம்மை முட்டாள் என்று உலகிற்கு பிரகடனப்படுத்த செய்திருக்கும் சூழ்ச்சிதான் இது!'' என்று ஏதேதோ எண்ணங்கள் கொந்தளிக்க பேராசிரியர் சுந்தரம் அவர்களிடம், "தயவு செய்து கையில் உள்ள விலாசத்தை சரியாகப் பாருங்கள்! டி. எம். பி. அவர்கள் டெலிபோன் செய்ததுமே எனக்குச் சந்தேகம்தான்... வேறு யாரையோ மனதில் வைத்துக் கொண்டு தவருக என்னை அணுகி யிருக்கிறீர்கள்!'' என்று நினைக்கிறேன்.

பேராசிரியர் சுந்தரம் என் பெயர் விலாசம் எழுதப்பட்டிருந்த காகிதத்தை என்னிடம் கொடுத்தார். தொடர்ந்து, "நீங்கள் தானே இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பவர்!'' என்று கேட்டார்.

"ஆ...ஆ...மா...மா...மாம்...'' என்று அழமாட்டாக் குறையாகச் சொல்லிவிட்டு, "எனக்கு ஒன்றும் பேசத் தெரியாதே! தவிர இந்த சத் விஷயங்களில் துளிக்கூட ஸ்மரணை இல்லையே? என்னை எப்படி தேர்ந்தெடுத்தீர்கள்?'' என்றேன்.

"நாங்களா தேர்ந்தெடுக்கிறோம்! சில பெயர்களைக் குறித்து ஸ்ரீ காஞ்சி பெரியவாளுக்கு அனுப்புவோம். அவர்கள் அதில் சிலவற்றை அடிப்பார்! சிலவற்றை புதிதாகச் சேர்ப்பார். அப்படியொரு பழக்கத்தில்தான் டி. எம். பி. அவர்கள் பல வருஷங்களாக சங்கர ஜயந்தி விழா நடத்தி வருகிறார். இந்த வருஷப் பட்டியலில் உங்கள் பெயர் சேர்க்கப்பட்டிருக்கிறது. யார் சேர்த்தார்களோ எனக்குத் தெரியாது" என்றார்.

"நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான். அதற்கு நான் தகுதியற்றவனாயிற்றே! என் யோக்கியதை, திறமை, ஞானம் எல்லாம் எனக்குத் தானே தெரியும்? மற்றவர்கள் எப்படி என்னை எடை போட முடியும்?"

"ஏன் எடை போட முடியாது? பத்திரிகையில் நீங்கள் எழுதும் கட்டுரைகளைப் படிக்கிறவர்கள் உங்களை எப்படி தவறாக எடை போடமுடியும்? சமீபத்தில் நீங்கள் சங்கரரை பற்றி தொடர் கட்டுரையாக எழுதி பிரசுரித்ததை எவ்வளவு பேர் ரசித்தார்கள் தெரியுமா? அக் கட்டுரை ஆசிரியரை சங்கர ஜயந்தி விழாவில் பேசச் சொல்லாவிடில் இந்த ஆண்டு விழா பூர்த்தி பெற்ற தாகாதே!"

"உண்மை! சத்தியமான வார்த்தை! அக்கட்டுரையின் ஆசிரியரை அவசியம் சங்கர ஜயந்தியில் கலந்துகொண்டு பேசச் சொல்ல வேண்டியதுதான்! ஆனால் அந்தக் கட்டுரையாளர் வருவரோ, இல்லையோ?" என்று நான் சந்தேகத்தை எழுப்பியதும் தத்வப் பேராசிரியர் சுந்தரம், "அப்படியானால் அக்கட்டுரை எழுதியவர் யார்? உங்கள் பெயர்தானே போட்டிருந்தது?" என்று திகைப்புடன் கேட்டார்.

"உண்மை...ஆனால் என் பெயரை அதன் ஆசிரியருக்குத் தாற்காலிகமாக கொடுத்திருந்தேன். அவருக்குப் பேரும் புகழும், பெருமையும் தேவையில்லை. அந்த அற்ப ஆசைகளுக்கு அவர் இடம் கொடுப்பதில்லை. அக்கட்டு

ரையை என் பெயரில் எழுதி வெளியிடும்படிக் கூறினர். தட்ட முடியாத இடத்திலிருந்து வந்த உத்தரவு. பணிந்து விட்டேன் !" என்று உணர்ச்சியோடு கூறிவிட்டு, மேலும் பேராசிரியரின் அரிய பொழுதை வீணாக்க விரும்பாதவனாக, "என்ன யோசிக்கிறீர்கள்! அக்கட்டுரையின் பின்னால் ஒளிந்து கொண்டிருக்கும் எழுத்தாளர் வேறு யாருமில்லை. நமது பெரு மதிப்புக்கும், மரியாதைக்கும் பக்தி மேலீட்டுக்கும் பாத்திரமான ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்தான். அவர்களுடைய படைப்புதான் அக்கட்டுரை! பக்தி உலகில் என்னை இழுத்துப் போட திருவுள்ளம் கொண்டு, என்னைக் கொண்டு அதை எழுதச் சொன்ன மகான்! இப்போது சொல்லுங்கள், நான் சங்கர ஜயந்தி விழாவில் பேசத் தகுதியுள்ளவனா?" என்று கேட்டேன்.

தத்வப் பேராசிரியர் இருக்கையிலிருந்து எழுந்து நின்றார். "மிகமிகத் தகுதியுள்ளவர் நீங்கள்! அன்று கட்டுரையை உங்களைக் கொண்டு எழுதச் சொன்ன பெரியவர் இன்று விழா வைபவத்தில் ஸ்ரீ சங்கரர் பெருமையையும் உங்கள் மூலமாக ஒரளவுக்குச் சொல்ல சித்தம் கொண்டு விட்டார்... சரி...நாளை காலையில் பத்து மணிக்கு வருகிறேன். பேசப் போகும் விஷயத்தின் தலைப்பைக் கூறி விடுங்கள்..." என்றார்.

"எனக்குப் பேசத் தெரியாது. ஏதோ எழுதுவேன். இதுவரை நான் மேடைமீதேறி ஒரு வார்த்தைகூடப் பேசியதில்லை, என்ன செய்கிறது?" எனக் கரங்குவித்தபடி நான் கேட்டதும், பேராசிரியர் சுந்தரம், "பரவாயில்லை! எழுதிப் படித்து விடுங்கள். சில சமயம் அம்மாதிரியும் நடப்பதுண்டு..." என்றார்.

"சரி, நான் ஒன்று சொல்கிறேன், அப்படிச் செய்துவிடுங்கள். இன்று இரவு சம்ஸ்கிருத கல்லூரியில் உள்ள ஆசாரியாள் முகாமுக்குப் போய், பெரியவர்களைச் சந்திக்க முயற்சி செய்கிறேன். அவர்கள் அபிப்பிராயப்படி செய்துவிடு

கிறேன். நாளை டெலிபோன் செய்யுங்கள்!" என்று நான் கூறியதும், "பெரியவர்கள் அபிப்பிராயம் தேவையில்லை. ஏனெனில், பேச்சாளர் பட்டியலை அவர்கள் அங்கீகரித்து விட்டார்கள்" என்று சொல்லிவிட்டு விடை பெற்றுச் சென்றார் பேராசிரியர் சுந்தரம். நான் பம்பரம் மாதிரி சுற்றத் தொடங்கிய என் தலையை இரு கையாலும் இறுகப் பிடித்துக்கொண்டு அந்த அதிர்ச்சியிலிருந்து விடுபட முயற்சி செய்தேன்!

ஆனால் முயற்சி சிறிதளவும் வெற்றிக்கு வழிகூட காட்டவில்லை. அன்று இரவு பன்னிரண்டு மணிவரை ஆசாரியாள் முகாமில் காத்திருந்தும், சொல்லியனுப்பியும் பேட்டி கிடைக்கவில்லை. மறுநாள் விடியற்காலையிலும் அப்படியே தான் என்று சொல்லலாம். தரிசனம் கிடைத்தது. ஆனால் தனி பேட்டி கிடைக்கவில்லை. கூட்டத்தை நெருக்கிக் கொண்டு முன்னேறி மகா சந்நிதானத்திடம் முறையிட்டுக் கொண்டேன். ஆனால், அவர்கள் வழக்கம்போல் சிரித்து விட்டு, அநுக்கிரகம் செய்து அனுப்பி விட்டார்கள்! என் முறையீட்டுக்கு செவி சாய்க்கா விட்டாலும் ஏதோ ஒரு மாதிரி அருளாசிகள் வழங்கியதே எனக்கு ஒரு புதுத்தெம்பைக் கொடுத்து விட்டது. இப்படி ஒரு சிஷ்யனை இக்கட்டிலிருத்தி, அவன் தவிப்பதை வேடிக்கை பார்க்கும் குருநாதனுடைய நிலையை ஆராய்ந்தபடியே வீட்டுக்குத் திரும்பிச் சென்றேன்.

ஆராய்ச்சியின் பயனாக சிறிதளவு தெளிவு ஏற்பட்டது. வெறும் செப்புப் பாத்திரத்தில் வைத்த தயிர் களிம்பு ஏறி கெட்டு விடும். அதே பாத்திரத்தில் வெள்ளி பூசிவிட்டால் களிம்பு என்ன செய்யமுடியும்? கண்ணுக் கெட்டாத தூரத்தில் நிற்கவேண்டியதுதானே? நான் எப்போதும்போல் சாதாரண நானாக இருந்தால் ஆராய்ச்சியில் தெளிவு காண இயலாது! ஆசாரியாளின் அருள் ஒளி என்ற வெள்ளி பூசப்பட்ட நான் என்பதால் அஞ்ஞானம் என்னை விட்டு அகலத் தொடங்கியது. சரியாகப் பத்து மணிக்குப் பேராசிரியரிடமிருந்து 'டாண்' என்று டெலிபோன் வந்தது,

# ஆத்ம போதம்

பஞ்சப்ராண மனோ புத்தி தசேந்த்ரிய ஸமந்விதம்
அபஞ்சீக்ருத பூதோத்தம் ஸூக்ஷ்மாங்கம் போக ஸாதனம் ॥ 13

அநாத்ய வித்யா அநிர்வாச்யா காரணோபா திருச்யதே
உபாதி த்ரிதயாதந்ய மாத்மாந மவதாரயேத் ॥ 14



●

பூதங்களின் ஸூக்ஷ்ம நிலையில் உண்டான ஸூக்ஷ்ம சரீரம் (மனம், புத்தி, பத்து இந்திரியங்கள், ஐந்து வாயுக்கள்) ஆத்மா ஸுகதுக்கங்களை அனுபவிக்க கருவியாக ஆகிறது.

ஆதியில்லாததும் விவரிக்க முடியாததுமான அவித்தையே காரணோபாதி எனப்படுகிறது. ஆத்மஸ்வரூபம் ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண உபாதிகளைவிட வேறானது என்று தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

●

TREES DON'T EAT the fruits they bear. We must be in this spirit of detachment.


*—His Holiness of KANCHI*

---

# ஆத்ம போதம்

பஞ்சகோசாதி யோகேன தத்தன்மய இவ ஸ்தித:
சுத்தாத்மா நீல வஸ்த்ராதி யோகேந ஸ்படிகோ யதா ॥ 15

வபு: துஷாதிபி: கோசைர் யுக்தம் யுக்த்யா வகா தத:
ஆத்மானமாந்தரம் சுத்தம் விவிச்யாத் தண்டுலம் யதா | 16



★

சுத்த ஸ்படிகமானது கருப்பு வஸ்திரம் முதலியவற்றின் ஸம்பந்தத்தால் அந்நிறமாக தோன்றுவதுபோல், பஞ்ச கோசங்களின் சேர்க்கையால் சுத்த ஸ்படிகம் போன்ற ஆத்மா அந்தந்த ஸ்வருபமாகத் தோன்றுகிறது.

ஐந்து கோசங்களுடன் சேர்ந்துள்ள ஆத்மாவை நெல்லிலிருந்து உமியைப் போக்க பக்குவமாக குத்திகுத்திப் பிரிப்பதுபோல், தகுந்த உபாயங்களினுல் பிரித்து தெரிந்து கொள்ளவேண்டும்.

★

Dharma is the root of the tree of religion. Bakthi & Gnana are the flowers & fruits thereof.

*—Kanchi Acharya Swamigal*

நானும் பாரம் முழுவதையும் ஆசாரியாள் முகாமிற்கு அனுப்பிவிட்டு டாண் என்று பதில் கூறினேன். "உலகில் குரு தத்வம் (World Guru Cult) என்று போடுங்கள்" என்று பேராசிரியரிடம் கூறியதும், அவர் "நேற்று முகாமில் பெரிய வாளைப் பார்த்திருக்கிறீர்கள், இல்லையா?" என்று ஆவலோடு கேட்டார்.

"ஆமாம்; பார்த்தேன், அவ்வளவுதான்! பேச வாய்ப்பில்லை. ஆனால் அவருடைய தீட்சண்யப் பார்வையிலிருந்து இந்தத் தலைப்பு பளிச்சிட்டது...சரி, அதையே போட்டுவிடுங்கள்: ஆனால் பேசமாட்டேன். எழுதிப் படிப்பேன்: அல்லது யாரையாவது எனக்குப் பதிலாகப் படிக்கச் சொல்லுவேன். இதற்கு நீங்கள் ஒப்புக் கொள்ளவேண்டும்" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டேன். ஏனெனில், நாலுபேர் அந்நியர்களைக் கண்டதும் என் குரலில் ஏற்படும் நடுக்கத்தையும், கீழ்க் கட்டை சுருதியையும் நான் நன்கு அறிவேன்!

அடுத்து மூன்றாவது நாள் குருதத்வம் கட்டுரை, இல்லை—சொற்பொழிவுக் கட்டுரை—தயாராகி விட்டது! என் கையெழுத்தும் என் தலையெழுத்தைப் போலவே புரியாத ஒன்றாகையால் பழக்கப்பட்ட எங்கள் அச்சகத்திலேயே அச்சுக்கோத்து சரி செய்து கொண்டு பரமாசாரியாளின் சந்நிதானத்திற்குச் சென்றேன்.

"கையில் என்ன? ஏதோ கொண்டு வந்திருக்கிறாயே? எனக்குக் கொடுக்கவா, இல்லை ஆபீஸ் விஷயமா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார்கள் மகா சந்நிதானம்.

நானும் லேசாக, ஆனால் பண்போடு சிரித்துவிட்டு, "கொடுக்க வரவில்லை. பகவத் பாதாளுக்குச் சமர்ப்பிக்க காணிக்கையாகக் கொண்டு வந்திருக்கிறேன்" என்றேன்.

"உலகில் குருதத்வம் தானே? சரி, படி! நான் கேட்கிற போது இங்கு இருக்கிறவர்களும் கேட்கட்டும். கொஞ்ச

நேரம் நல்ல பொழுதாகப் போகும்'' என அன்பொழுகக் கட்டளை யிட்டார்.

குருவின் சந்நிதியில் குருதத்வம் பற்றிய கட்டுரையைப் படிக்கும் பாக்கியத்தைப் பெற்ற நான் அதை அனுபவிக்க முடியாதபடி உணர்ச்சி மேலிட்டு, அதில் மூழ்கி விட்டேன். நான் வாசித்ததை நான் உணர்ந்தேனே தவிர, மற்றவர் காதில் அது விழவில்லை என்பது பின்னுல்தான் தெரிந்தது! ஏனெனில், பரமாசாரியாள் பரிவோடு ''உன்னுல் உரக்கப் படிக்க முடியவில்லை; இப்படிக் கொடு'' என்று என்னிட மிருந்த கட்டுரைப் பிரதியை வாங்கி, பக்கத்திலிருந்த ஒரு பக்தரிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னுர். நான் எழுதி யதை நானே கேட்டு ரசிக்க என் ஆயுளில் இன்றுவரை ஒரு நாள்தான் சந்தர்ப்பம் கிடைத்தது. அதுவும் குருவின் சந்நி தானத்தில் கிடைத்ததை என்றென்றும் ஞாபகத்திலிருத்தி பெருமையடைவேன். உடன் இன்னெரு உண்மையையும் தெளிவாக உதாரணத்தோடு அனுபவித்து அறிந்து கொண் டேன். பிரபல சங்கீத வித்வான்கள், தங்கள் பாட்டைத் தாங்களே கேட்டு ரசிக்கும் தன்மையுடையவர்களாக இருப் பார்களாம். அந்த முயற்சியில் வெற்றி பெற்றவர்களே பெரிய சங்கீத மேதைகளாவார்களாம். இங்கே நான் பெரிய எழுத்தாளன் என்பதைக் காட்டிக்கொள்வது என் நோக்க மல்ல. நான் பெரிய எழுத்தாளனும் அல்ல; ஆனுல் குரு பக்திக்கு பூரண இலக்கணமாக நான் திகழ்வதால்தான் அக் கட்டுரை ஓர் உருவெடுத்ததோடு, மாபெரும் அறிஞர்கள் கூடும் மகா சபையில் அரங்கேறும் தகுதியையும் பெற் றிருந்தது.

ஸ்ரீ ஆசாரியாள், கட்டுரையைப் படித்து முடித்தவரிடம், "இப்படி கொடு!'' என்முர்கள். அந்தக் காகிதக் கட்டின்மீது பிரசாதத்தை வைத்து என்னைப் பார்த்து, ''எடுத்துக் கொள்... சரியாக இருக்கிறது. பத்திரிகைக்கு எழுதும் எழுத்தாளன் பாஷை, உத்தி, கொள்கை எல்லாம் நிறைய இருக்கு. ஆனுல் தக்ஷிணுமூர்த்தி தத்வத்தைக் குறிப்பிட்டு

விட்டு, அதிலிருந்து உலக குருமார்களை—நான் உள்பட—விளக்கியிருப்பதை நான் எப்படி ஏற்க முடியும்? உன்னைக் கேட்டால் என்ன சொல்லப் போறே? அதே பத்திரிகை பாஷையில்,உலகில் உள்ள குருநாதர்களுக்கெல்லாம் தக்ஷிணு மூர்த்திதான் 'லீடர்' என்று சொல்லுவாய்!'' என்று கூறி விட்டு, "கவலைப்படாதே! உன் கொள்கைக் கேற்ப நல்ல உதாரணங்களையும், வாதப் பிரதிவாதங்களையும் தேடிப் பிடித்துப்போட்டு பெரிய அழகானதொரு எழுத்துப் பல் லக்கு கட்டியிருக்கிருய்!'' என்ருர்.

[பெரியவாளின் அங்கீகாரம் கிடைத்த அந்த சொற் பொழிவு கட்டுரையின் அசலோ, நகலோ கிடைக்காததால் ஞாபகத்திலிருந்து அதன் சாரத்தை மட்டும் சுருக்கமாகச் சொல்லிவிட்டு வாசகர்களை அடுத்த அத்தியாயத்தைப் படிக்க அழைத்துச் செல்கிறேன்.]

குரு தத்வம் அத்வைதிகளுக்கு சாக்ஷாத் பரமேச்வரனிட மிருந்து ஆரம்பிக்கிறது. தக்ஷிணுமூர்த்தி உருவில் தோன்றி கல்லால மரத்தடியில் அமர்ந்து மௌனமாயிருந்தபடியே பிரதம சிஷ்யர்களான ஸனக சனத் குமாரர்களுக்கு பகவான் உபதேசம் செய்கிருர். உபதேசம் பெற்றவர்கள் மூலமாகவே இந்து மதத்தின் வேதாகமங்களின் சிறப்பும் மகிமையும் பகவான் வலியுறுத்தியுள்ளார்! அப் பரம்பரையில் வந்த வர்களையே இன்று ஜகத்குருவென நாம் போற்றுகிருேம். ஸ்ரீ சங்கரருக்குப் பின் வந்த மதாசாரியர்கள் தக்ஷிணுமூர்த்தி தத்துவத்தைக் கண்டனம் செய்யாவிட்டாலும், தங்கள் சித்தாந்தங்களின் ஜீவ நாடியாக ஸ்ரீ மகாவிஷ்ணுவை அமைத்து, அவரே தெய்வம், குரு எல்லாம் என்று சரணுகதி தத்வத்தை விளக்குகிருர்கள்: தத்வம் எப்படி இருந்தாலும் குருவாக அங்கே ஸ்ரீமந் நாராயணன் அமர்ந்து சிஷ்யர் களுக்கு வழி காட்டுகிருர். பாரதத்தில் தோன்றியுள்ள மற்ற மதங்களும், உலகின்கண் உள்ள பல்வேறு மதங்களும் ஓர் ஆசாரியனை—குரு—சரணடைந்து அவர் காட்டும் பாதை யில்தான் மக்கள் வாழ்வை அமைத்துச் செல்கின்றன. ஜீவ

ராசிகள் அனைத்தையும் ஆராய்ந்தாலும், எந்த இரண்டும் ஒன்றைப்போல் மற்றொன்று இல்லை என ஆராய்ச்சியாளர்கள் அடித்துக் கூறுகிறார்கள். அப்படிப் பார்த்தால் இந்த குரு தத்வம் மட்டும் ஓர் விலக்காக உலகமாந்தர்களை ஒன்றுபடுத்து கிறது. தாய், தந்தையருக்கு அடுத்தபடி நாம் அறிந்து போற்றுபவரும், நம் பெரு மதிப்புக்கும் மரியாதைக்கும் பாத்திரமானவர் குரு பகவான் ஒருவரேதான்!

உலக சரித்திரத்தில் மதம் மட்டும் மிக மிகப் பிரதான மாக இருந்தாலும், வாழ்க்கையின் மற்ற அம்சங்களும் முக்கியத்வம் வாய்ந்தவையே! மதத்திற்கு மட்டும்தான் குரு தேவைப்படுகிறார் என்று நாம் கூறுவது பொருத்தமாயிருக் காது. சற்று சிந்தனையை ஓடவிட்டுப் பார்த்தால் உலக வாழ்வில் எல்லாமே இருள் மயம்தான்: இந்த இருளை ஒவ் வொன்றிலிருந்தும் விலக்கி நம் வாழ்க்கைப் பாதையைக் கரடுமுரடின்றி வழுவழுப்பாகச் செய்து கொடுப்பவர் அனை வருமே நமக்கு குருவாகத்தான் அமைகிறார்கள். மாந்தரின் கடைசி மூச்சுவரை ஞாபகம் இருக்கக்கூடிய மகத்தான சக்தி பெற்றது குரு தத்வம்.

இந்த குரு தடம் புரண்டு போய், சிஷ்யன் சித்தம் கலங் கிப்போன கதைகளும் ஒவ்வொரு மத வரலாற்றிலும் உள்ளன. அப்போது தடம் புரண்ட குருவைத் திருத்தி மறுபடியும் தடத்தில் வைத்து இயங்கச் செய்வதும்சிஷ்ய னுடைய குருபக்தியையே காட்டுவதாகும். இம் முயற்சியில் சிஷ்யன் வெற்றி பெறுதபோது, அவனுக்குப் பல சிஷ்யர்கள் தோன்றி, அவனையே குருவாகக் கொண்டாடி அவனிடம் மெய்ஞ்ஞானத்திற்கான உபதேசத்தைப் பெற விழைகி றார்கள். இம்மாதிரி ஒரு இக்கட்டான நிலை தடம் புரண்டு செல்லும் குருமார்களால்தான் ஏற்படுகிறது. ஆனால் கெட்ட தில் நல்லதும் சில சமயம் விளைகிறதல்லவா? அம் மாதிரி புதிதாகத் தோன்றும் குரு பரம்பரை நாளடைவில் மக்களின் கவனத்தை ஈர்த்து பலம்பெற்று விடுகிறது. இப்படி உலகில் ஆரம்ப காலத்தில் இருந்த மதங்கள் சில, காலப்போக்கில்

# ஆத்ம போதம்

ஸ்தா ஸர்வ கதோப்யாத்மா ந ஸர்வத்ரா வ பாஸதே
புத்தாவேவாவ பாஸேத ஸ்வச்சேஷு ப்ரதி பிம்பவத் || 17

தேஹேந்த்ரிய மனோ புத்தி ப்ரப்ருதிப்யோ விலக்ஷணம்
தத்வ்ருத்தி ஸாக்ஷிணம் வித்யாத் ஆத்மாநம் ராஜவத் ஸதா | 18



★

ஆத்மா, எங்கும் நீக்கமற நிறைந்துள்ள போதிலும், எல்லா விடத்தும் பிரகாசிப்பதில்லை. நிர்மலமான கண்ணுடி போன்ற பொருள்களில் பிரதிபிம்பம் தோன்றுவது போல் புத்தியில் மட்டுமே பிரகாசிக்கும்.

உடல், இந்திரியம், மனம், புத்தி முதலானவற்றிலிருந்து ஆத்மா வேருனது. ஸாக்ஷியாய், அரசன்போல், எல்லா காரியங்களேயும் பார்க்கிறவனுக புரிந்துகொள்ள வேண்டும்.

★

At the end of many births, the wise man
Comes to me, realising that all is Vasudeva.
Such a great soul is very hard to find.

*—Bagavat Gita*

# ஆத்ம போதம்

வ்யாப்ருதேஷ் விந்த்ரியேஷ் வாத்மா வ்யாபாரீவா விவேகினும்
த்ருச்யதேப்ரேஷு தாவத்ஸு தாவந்நிவ யதா சசீ ॥ 19

ஆத்ம சைதன்யமாச்ரித்ய தேஹேந்த்ரிய மனோதிய :
ஸ்வகீயார்த்தேஷு வர்த்தந்தே ஸூர்யா லோகம் யதா ஜனா ॥ 20



★

மேகங்களின் சஞ்சரிப்பினுல் சந்திரன் ஒடுவதுபோல் காணப்படுகிறது. அவ்வாறே இந்திரியங்களின் விவகாரங்கள் அவிவேகிகளுக்கு ஆத்மாவின் வேலையாகத் தோற்றுகிறது.

ஆதித்தனின் வரவினுல் அகிலம் எவ்வாறு தானே இயங்குகிறதோ அவ்வாறே ஆத்ம சைதன்யத்தின் சந்நிதானப் பெருமையால் இந்திரியங்கள் தத்தம் தொழிலைப் புரிகின்றன.

★

The Noblest learning is that which imparts knowledge of the Atman.

—*Ramana Rishi.*

---

பல பிரிவுகளாகி மக்களின் ஆன்மீக வாழ்வு மிளிரக் காரண மாயுள்ளன. குருவை மிஞ்சிய சிஷ்யர்களில் பலர் நல்ல தொரு குரு பரம்பரையை ஏற்படுத்திய பெருமையைப் பெற்று பல நூறு வருஷங்கள் கடந்து போன பின்னும் போற்றி வணங்கப்படுகிறார்கள்.

மேற் குறிப்பிட்ட கருத்துக்களைப் பிணைத்தகட்டுரையே "உலகில் குரு தத்வம்"! கருத்துக்களை விளக்க புராணங்களி லிருந்து உதாரணங்களுக்காக சில திருஷ்டாந்தக் கதை களையும், நிகழ்ச்சிகளையும் குறிப்பிட்டிருந்தேன். அவற்றில் ஸ்ரீ பரமாசாரியாளை மிகக் கவர்ந்தது மார்ட்டின் லுதருடைய புரட்சியாகும். போப்பாண்டவரின் மத ஏகாதிபத்தியத்திற்கு சவால் விடுத்து, தமது கொள்கைகளுக்கு ஆதரவுகளைத் திரட்டி, உலகையே புரட்சிகரமாக விளைத்துப்போட முற் பட்ட கத்தோலிக்க கிறிஸ்து மதத்தை இரண்டாகப் பிளக்கச் செய்தார். மார்ட்டின் லூதர் எக் காரணத்தால் போப் பாண்டவரை எதிர்த்தார், அவர் கூற்றுக்கு மக்கள் ஆதரவு எவ்வாறு கிடைத்தது என்பனவற்றை விளக்க மார்ட்டின் லூதருடைய வாழ்க்கை வரலாற்றின் ஒரு முக்கிய அம்சம்—அவர் கண் முன்னே அப்போதுதான் பாதிரியாரிடம் பணம் (காணிக்கை) கொடுத்து பாவ மன்னிப்பு பெற்றுத் திரும்பிய அவருடைய நண்பர் ஒருவர் திடீரென வந்த இடிக்குப் பலியாகி கருகிப்போனதே!

* *

பெரியவர்களுக்கு ஏதோ கொஞ்சம் சந்தேகத்தை இது உண்டுபண்ணியதுபோலும்! சொற்பொழிவுக் கட்டுரையில் அந்த பாகத்தைக் குறிப்பிட்டு, "அதற்கு ஆதாரம் எங்கே இருக்கிறது! மறுபடியும் மடத்திற்கு வரும்போது அந்தப் புஸ்தகத்தை எடுத்து வா!" என்று பணித்தார்கள்.

வாசஸ்பதி பல தடவை கூறிவருவதுபோல் நான் குரு பலம் உள்ளவன் என்பதை அன்றைய சந்திப்பும், நிகழ்ச்சி

யும், உரையாடலும், கட்டுரைக்கு அங்கீகாரமும் சந்தேகத்துக்கு இடமின்றி எடுத்துக் காட்டின. தேன் குடித்த நரி போல், மகாசந்நிதானத்தின் சந்நிதியில் விழுந்து வணங்கி, எழுந்து, "பெரியவாளுக்குத் திருப்தி தர ஏதாவது திருத்தம் இதில் செய்ய வேண்டுமானல்......"என்று இழுத்தேன். அவர்கள் பதில் கூறுமல் புன்முறுவலோடு கையை உயர்த்திக் காட்டி அனுக்கிரகம் செய்து அனுப்பினர்கள்.

* * *

குரு தத்வம் அத்தியாயம் மேற்குறிப்பிட்ட இடத்தில் சற்றுத் தடைப்பட்டு நின்றது. எப்படியாவது அந்தச் சொற்பொழிவு கட்டுரையின் பழைய பிரதியொன்றைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்து இதில் சேர்க்கவேண்டுமென்ற எண்ணத்தினல் வேணுமென்றே தடைவிதித்துக் கொண்டு அத்துறையில் அனுபவம் உள்ள நண்பர்களிடம் விசாரித்துக் கொண்டிருந்தேன். அந்த சமயம் பார்த்து தேனம்பாக்கத்தில் ஸ்ரீ பெரியவாளை தரிசனம் செய்துவிட்டு இரண்டுநாள் கழித்து வந்து சேர்ந்தார் வாசஸ்பதி. வரும் போதே, "என்ன கட்டுரை எந்த மட்டில் இருக்கிறது? நான் போன இடத்தில் நான் நினைத்தபடியே நல்ல சகுனம், அறிகுறிகள்தான் கண்டேன். எனக்கு என்றுமே 'கிழ'த்திடமிருந்து பிரசாதம் லகுவில் கிடைக்காது. இப்போ உம்ம ஞாபகத்தோடு இருந்ததாலோ என்னமோ போன மறுநாளே பிரசாதம் கிடைத்து விட்டது..." என்று சொல்லிவிட்டு, அதுவரை அச்சாகி யிருந்ததையும் குருதத்வ அத்தியாயத்தையும் வாங்கிப் படித்தார். "சரியாகத்தானே எழுதியிருக்கிறீர் ? ஓட்டம் தடைப் படக் காரணம் என்ன? எதை மனதில் வைத்துக் கொண்டு தவித்துக் குழம்பிக் கொள்கிறீர்? எனக்குப் புரியவில்லையே ?" என்று கேட்டவர், "ஒருவேளை இவ்வளவு பெரிய பலமான அஸ்திவாரத்திற்கேற்ப மேல் கட்டடத்தை எழுப்பும் யோக்கியதை உமக்கு இல்லை என்று நினைக்கிறீரோ?" என்றார்.

“இருக்கலாம். ஆனால் குருவின் கருணையும், ஆசிகளும் கிடைத்து விட்டால் எதையும் சாதிக்கலாம் என்று சொல் லப்படுகிறதே! அந்த இரண்டும் எனக்கு இருக்கிறதாக நீங்கள் வெகு காலமாகச் சொல்லி வந்திருக்கிறீர்கள்! நீங்கள் சொன்னது உண்மையா? வெறும் ஊகம் தானா?”

“இல்லை. உமக்கு குருபலம் நிச்சயம் உண்டு. ஏற் கெனவே நீரே சொல்லியிருக்கிறீர். ‘எனக்கு சம்ஸ்கிருத ஞானம் துளியும் கிடையாது: வேத, வேதாந்த, புராண இதிகாச, தெய்வீக, சாஸ்திர ஸ்மரணை எதுவும் கிடை யாது. அப்படியெல்லாம் இருந்தும் நிர்ப்பந்தம் வந்தால் தெரியாத விஷயங்களையும் எடுத்து அலசி எழுதும் சாமர்த் தியம் குருவின் அருளாசியால் கிடைக்கிறது’ என்று என் னிடமே பெருமையடித்துக் கொண்டிருக்கிறீர்! இப்போ அந்த அருளாசிகள் எங்கே ஓடிப்போய் விட்டன? பெரிய வர்கள் அருளாசிகள் வழங்கி விட்டால் அவற்றை எக் காரணம் பற்றியும் வாபஸ் பெற மாட்டார்கள். சாபம் கொடுத்தால் தான் பின்னர் மனமிரங்கி சாப விமோசனத் திற்கான வழியைக் காட்டுவார்கள். அதுவும் குருவாக நாம் வணங்குபவர்கள் இந்த உயர்ந்த பண்பாட்டிலிருந்து விலகுவதில்லை. எந்த மனம் மாறிய நிலையிலும், காட்டிய கருணையை திரும்பப் பெறுவதில்லை. அப்படியிருக்க உமக்கு மட்டும் ஏன் சந்தேகம் வரவேண்டும்? குருவுக்கு அபசாரம் ஏதாவது செய்துவிட்டு, மனத்திற்குள் திருடனுக்குத் தேள் கொட்டியதுபோல் தவிக்கிறீர் போல் எனக்குத் தோன்று கிறது...அப்படி ஏதேனும் உண்டா?” என்று வாசஸ்பதி கேட்டதும் நான், “மிக இக்கட்டான நிலையில் குருவிட மிருந்து உதவியைப் பெற்றவன். அந்நன்றியைத் திருப்பித் தராமல் இருநதால் அவன் அபசாரம் செய்தவனாவான் இல்லையா?” என்றேன்.

“அவன் எந்த அபசாரமும் செய்யவில்லை. தம்மீதுள்ள பக்தி என்றென்றும் நீடிக்கும் பொட்டு குருவானவர் கடைப் பிடிக்கும் வழியும், கொள்கையும் ஸ்ரீ காஞ்சியில் தனித்

தன்மை வாய்ந்தவை, அதுவும் உமது குரு தேனம் பாக்கத்தில் தவம் செய்கிருரே அவரும், அந்தத் தாயின் சேயாக, இப்போது புல் மேயும் கன்ருக வடநாட்டு யாத் திரையை முடித்துக் கொண்டு இராமேச்வரம் போகும் புதுப் பெரியவாளும் ஒரு நாளும் தங்களை நாடுபவர்களுக்கு தீங்கு நினைக்க மாட்டார்கள்...சரி...வீண் பேச்சு பேசிக் கொண்டு இனி பொழுதைக் கழிக்க வேண்டாம். இதுவரை நீர் எழுதியதையெல்லாம், வரி வரியாக வார்த்தை வார்த் தையாகப் படித்து விட்டேன். நல்ல அஸ்திவாரம் குருவின் பேரருளால் போட்டு விட்டீர்கள். கட்டடம் மேலே எழும்ப என்னுலான உதவியை நான் செய்யத் தயாராகப் பிரஸாதத் தோடு வந்திருக்கிறேன். பேனுவை வைத்துக் கொண்டு உட்காரும். நான் சொல்லும் குருஸ்துதியைச் சொல்லும். அவர் சூக்ஷ்மமாக இங்கு வந்து அமர்ந்து விடுவார். அப்புறம் அரைப் பணம் கொடுத்து ஆடச் சொல்லி, ஒரு பணம் கொடுத்து ஓயச் சொன்ன கதை மாதிரிதான் பேனு ஓடும்! எங்கேயெல்லாம் வெள்ளைக் காகிதம் கிடைக்கிறதோ அங்கேயெல்லாம் "காஞ்சியில் காலடி" கட்டுரை பற்றிய கருத்தோவியங்களும், நீதி, நெறி, பண்பு, பக்தி மலர்களும் தான் பூத்துக் குலுங்கும்...உம்—எழுந்து நிமிர்ந்து உட் காரும். 'என்றும் பதினுரு'க இந்த அரைகுறைத் துண்டுக் கட்டுரை இனி இருக்காது. முழுநீள தெய்வீக நூல் ஒன்று இந்த அஸ்திவாரத்தின் மேல் என்றென்றும் பதினுருக, தெய்வமும் தமிழும் உள்ளளவுக்கு இருக்கும்..." என ஆவேசம் வந்தவர்போல் பேசினுர்.

* * *

நான் அவரோடு தொடர்பு கொண்டு ஏறக்குறைய இருபது ஆண்டுகள் இருக்கும். அந்த இருபது ஆண்டுகளில் ஒருநாள்கூட இவ்வளவு உற்சாகத்தோடும், உணர்ச்சியோடும் அவர் பேசி நான் கேட்டதில்லை. வாசஸ்பதி என்னை ஊக்கு வித்துப் பேசியதை நான் எண்ணமிட்டுப் பார்த்தபோது,

குருக்ஷேத்திரத்தில் ஸ்வதர்மத்தைச் செய்யாது, தாயாதி பங்காளிகளோடு போரிடத் தயங்கிய பார்த்தனை ஊக்கு விக்க கிருஷ்ண பரமாத்மா பகவத் கீதையை உபதேசித்தது தான் ஞாபகம் வந்தது. கண்களில் நீர் கசிய அவரை மனத் தினுள் வாழ்த்திவிட்டு, கரகரத்த குரலில், "குரு என்றால் என்ன என்பதைப் பற்றி எனக்கு—இப்போதுகூட தெளிவு காண முடியவில்லை. கொஞ்சம் உங்கள் வழியில் விளக்கிச் சொல்லுங்களேன்" என்று சர்வ ஜாக்கிரதையோடு கேட் டேன். ஏனெனில், "உலகில் குரு தத்வம்" என்ற தலைப்பில் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு நான் சங்கர ஜயந்தி விழாவில் சொற்பொழிவாற்றிய விவரம் வாசஸ்பதிக்குத் தெரியும்: மேலும் யானைக்குத்தான் ஞாபக சக்தி அதிகம் என்பார்கள். யானையைப் போன்ற குணமுடையவர் அவர் என்பதை நான் அறிவேனாதலால் குரு ஸ்தானத்திற்கு அப் போது நான் எடுத்துக் காட்டிய உதாரணங்கள், விளக்கங்கள், மேன்மைகள் எல்லாவற்றையும் நான் மறந்து விட்டேனே தவிர அவர் மறந்திருக்க மாட்டார்! போன ஜன்மத்தில் படித்தவை, கேட்டவை கூட அவர் ஞாபகத்தில் இருக்கும் அளவுக்கு அப்பியாசம் செய்து தேர்ந்த ஒரு அனுபவசாலி அவர்- குரு தத்வ சொற்பொழிவு கட்டுரையிலிருந்து சில பகுதிகளைத்தான் திருத்தியமைத்து, என்னை மறைமுகமாக சுய உணர்வுக்குக் கொண்டு வந்திருந்தார் அவர் என்பதை நான்அறிவேனாதலால் மேலும் கொஞ்சம் விவரம் சேகரிக் கப் பேச்சுக் கொடுத்தேன்.

வாசஸ்பதி சிரித்தார். "ஓய் என்னையே ஏய்க்கப் பார்க் கிறீர்! இருக்கட்டும். இந்த உயர்ந்த நூலே குரு மகாத் மியம்தானே? பாதம்ஹல்வாவானாலும் ஒரே சமயத்தில் நிறைய சாப்பிட்டால் திகட்டுமல்லவா? குரு தத்வம் இதோடு போதும். பின்னால் கொஞ்சம் கொஞ்சமாக குரு புராணம் பூராவுமே எழுதி விடலாம்" என்றார்.

# 4. அத்வைதம்

மதம், சித்தாந்தம், சமயம் இம்மூன்ருலும் பிணைக்கப் பட்டிருப்பதே மனித இனம். ஜாதி, மத, இன பேதமின்றி உலக ஜனசமுதாயம் இந்த நியதிக்குட்பட்டுத்தான் வாழ்ந்து வருகிறது. அறிவும், ஆராயும் திறனும் மனிதனுக்கு வளரும் விஞ்ஞானம் காரணமாக பெருமளவுக்கு அதிகமாகியுள்ளன. திறமை அதிகமாகி சூழ்நிலையும் சந்தர்ப்பமும் அனுகூலமாக அமைந்துவிட்டால் மனிதன் முதலில் தான் தோன்றி, மறையும் தத்வத்தை ஆராய்வதில்தான் ஆர்வத்தோடு கவனம் செலுத்துகிருன். தோன்றியவன் மறைகிறதை ஆரம்ப முதல் அவன் பார்த்து வருவதால்தான், எங்கேயோ ஒரு சக்தி இருந்துகொண்டு உலகை ஆண்டு, ஆட்டி வைக்கிறது. தத்வ ரீதியாகத்தான் அதை உணர முடிகிறதே தவிர அதன் கால, தேச, பரிமாணம் எதையும் உணர முடியவில்லை. ஆகவே தான், மனிதனுடைய மனித ஆராய்ச்சி ஓரளவுக்குப் போய் நின்று விடுகிறது! நின்றதும் அவன் நாடுவது விஞ்ஞானம் அல்ல: மெய் ஞானத்தையே நாடுகிருன்! மெய்ஞானம் மதம் என்னும் தத்வக் கடலில் மூழ்கிக் கிடக்கிறது. அந்த ஞான சமுத்திரத்தில் அவன் முத்துக்குளிக்க மூழ்குகிருன். முத்தும், பவழமும்; சங்கும், சிப்பியும் கிடைக்கின்றன. அவற்றை ஆராயும்போது வேறு இயற்கையின் விநோதங்களை மேலும் உணர்ந்து வியப்பிலாழ்ந்து போகிருன். தமது அனுபவங்களைக் கோத்து, தொகுத்துப் பார்க்கையில் அநேக மநேக தத்வ அதிசயங்கள் புலனுகின்றன. அவற்றை மேலும் அலசிப்பார்த்து வடிக்கட்டி தனக்கென ஒருவகை உண்மைகளைச் சேகரித்துக் கொள்கிருன். அந்தவகை உண்மைகளே இக்காலத்தில் மதத்தையொட்டிய சித்தாந்தம் என்று வருணிக்கப்படுகிறது.

ஒவ்வொரு மதத்திற்கும் சித்தாந்தம் உண்டு. சித்தாந்தம் என்பதைவிட 'சித்தாந்தங்கள்' எனக் கூறுவது பொருத்தமாயிருக்கும். ஏனெனில், இன்று உலகின்கண் பிரபலமாயுள்ள மதங்கள் எல்லாவற்றிற்குமே இரண்டு மூன்று சித்தாந்தங்கள் உள்ளன. முதலில் ஒரு சித்தாந்தம் தோன்றுவதுதான் கடினம். பின்னர் மகான்கள், மேதைகள் அதனின்று வெவ்வேறு உண்மைகளை ஆராய்ந்து, கடைந்தெடுத்து மனிதவர்க்கம் ஏற்கும் கருத்துக்களை வெளியிடுகிறார்கள். நாளடைவில் அவர்கள் தரும் கருத்துகள் திரட்டுப்பாலாகி, அந்தந்த மதத்தின் சித்தாந்தமாக மாறி விடுகிறது. இதே விதத்தில்தான் நமது புராதன இந்து மதமும் இன்று பல சித்தாந்தங்களுக்குட்பட்டு மக்களைக் கவர்ந்திருக்கிறது.

உலக மதங்களில் எதுவுமே இந்து மதத்தைப்போல் தானாக தோன்றியதில்லை, மற்றவை எல்லாம் ஒரு தனிப்பட்ட மகா புருஷனால் தோற்றுவிக்கப் பட்டவை. ஏதோ ஒரு லிபியில் எழுத்து வடிவில் உபதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்டு, பிரசாரத்திற்கும் ஆளாகி உலகில் வியாபித்திருக்கின்றன. ஆனால் நமது ஸநாதன—வைதீக இந்து மதம் அவ்வாறில்லை. மும்மூர்த்திகளாலும், மகரிஷிகளாலும் வேதமந்த்ர பூர்வமாகத் தோற்றுவிக்கப்பட்டு கடைசியில் வியாஸ மகரிஷியின் வாக்கால் கயிலை முதல் குமரிவரைஎட்டும்படி கூறப்பட்டுள்ளது. வியாஸ பகவானிடமிருந்து அவருடைய ரிஷி சிஷ்யர்களும், அந்த ரிஷி சிஷ்யர்களிடமிருந்து பல்வேறு சிஷ்ய மேதைகளும் வாய்மூலமாகச் சொல்லிக் காதால் கேட்டு கிரஹித்து, குருகுலவாசம் செய்து வேத—உபநிஷதங்களைக் கற்று பாரம்பர்யமாக வாய்மூலமாகவே, அனாதியான காலம் தொட்டு இன்றுவரை வந்துள்ளது. வேத மந்த்ரங்கள் இன்று அச்சில் ஏறி புத்தகவடிவில் வந்தாலும், சுருதி சுத்தமாக குருமுகமாக அத்தியயனம் செய்வதையே பழக்கத்தில் நாம் கொண்டிருக்கிறோம்.

இந்து மதத்திற்கு முதன் முதலாக ஒரு அரிய சித்தாந் தத்தைத் தோற்றுவித்து, பெருமை யெல்லாவற்றையும் தனதாக்கிக் கொண்டவர் அவதார புருஷரான ஸ்ரீ ஆதி சங்கரர். அவருடைய அத்வைத சித்தாந்தத்தின் எதிரொலி இந்த இருபதாம் நூற்றுண்டில் உலகின் எல்லா பாகங்களி லிருந்தும் கேட்பதை நாம் அறிந்து கட்டுக் கடங்காத பெரு மையில் திளைக்கிறோம். வேதஸூத்ர பாஷ்யத்தில் தமது அத்வைத சித்தாந்தத்தை ஜீவநாடியாக்கி, இந்த உலகம் மாயை என்பதை ஊர்ஜிதப் படுத்திக் காட்டியிருக்கிறார்கள் பகவத்பாதாள். காணுவதெல்லாம் மாயை, பொய்! காண தததே மெய், ஸத்யம்! அதுவே பரப்ரும்மம்! அதுவே இம்மாய பிரபஞ்சத்தின் மூலம், அப்பிரும்மத்தினுடைய சாயைதான் உலகம். "இச்சாமாத்ரம் ப்ரபோ சிருஷ்டி!" பிரும்மத்தின் இச்சையால் இந்த நிழல் உலகம் வெளிப்படுகிறது. இதே பிரம்மத்தின் இச்சையால் நிழல்—மாயை பிரம்ம மயமான ஒளியோடு கலந்து விடுகிறது. அதுவே பிரளயம்! அதுவே எல்லாமாகிய ஒன்று! அது இரண்டே அல்ல!

* * *

ஸ்ரீ சங்கர பகவத் பாதாளின் அத்வைத சித்தாந்தத்தை, மனித ஆராய்ச்சி தோல்வியடையும்போது, மனித அறிவுக்கு முட்டுக்கட்டை ஏற்படும்போது, உலகமே இருள் மயமாக மனிதனுக்குத் தோன்றும்போது மனிதன் உணருகிறான். ஆனால் மற்ற சித்தாந்தங்கள் மனிதனை மிரட்டாமல், குழப்ப மடையச் செய்யாமல், குழந்தைக்கு வாழைப்பழமும் மிட்டா யும் கொடுத்து கடைசியில் கசப்பான மருந்தைக் கொடுத்து உடலைப் பற்றியுள்ள நோயை நீக்க முயற்சிப்பதுபோல், வழி பாடு, பக்தி, சரணாகதி என்று மந்த்ரம், மாயம் என்றெல் லாம் நயமாகவும் நாசூக்காகவும் எடுத்துச் சொல்லி, இறுதி யில் அத்வைதப் பெருங்கடலுக்கே மனிதனை இழுத்துச் செல்கின்றன. ஆகவே, அத்வைதம் என்ற ஜீவநதியின் கிளை மற்ற சித்தாந்தங்கள்! ஒரு பெரிய நதி சமவெளியில் ஓடும் போது, நீர்வள நிலவளத்திற்காக வேண்டி அதிலிருந்து

# ஆத்ம போதம்

தேஹேந்த்ரிய குணுன் கர்மாண்யமலே ஸச்சிதாத்மனி
அத்யஸ்யந்த்ய விவேகேந ககநே நீலதாதிவத் ॥ 21

அக்ஞாஞத் மாநஸோபாதே : கர்த்ருத்வாதீநி சாத்மனி
கல்ப்யந்தே அம்புகதே சந்த்ரே சலநாதி யதாம்பஸ : ॥ 22



அறியாமையால் ஆகாயம் நீலநிறமாகத் தெரிவதுபோல் (ஆகாயம் நிறமற்றது) உடல் முதலிய இந்திரியங்களின் செய்கை பரிசுத்த மான ஆத்மாவினதாக மதிமயக்கமடைகின்றனர்.

நீரின் சலனத்தால் சந்திரபிம்பம் அசைவது போல் தோன்றுகிறது. இவ்வாறே மனத்தின் அசைவும் கர்த்தா என்ற நினைவும் ஆத்மா தான் கர்த்தாபோல் தோன்றுகிறது.

"Each and every soul is potentially Divine. The Goal is to manifest this Divinity within by controlling Nature, External and Internal".

—*Swami Vivekananda.*

---

# ஆத்ம போதம்

ராகேச்சா ஸுக துக்காதி புத்தௌ ஸத்யாம் ப்ரவர்ததே
ஸுஷுப்தௌ நாஸ்தி தந்நாசே தஸ்மாத் புத்தேஸ்து நாத்மந: | 23

ப்ரகாசோர் கஸ்ய தோயஸ்ய சைத்யம் அக்நேர் யதோஷ்ணதா
ஸ்வபாவ : ஸச்சிதானந்த நித்ய நிர்மலதாத்மந : ॥ 24



விழிப்பு, சுக துக்கம், ஆசை, அன்பு முதலியன கனவு நிலைகளில் புத்தியில் தோன்றுகிறது. ஆழ்ந்த உறக்கத்தில் (ஸுஷுப்தி) தோன்றுவதில்லை. ஆதலால் இவைகள் ஆத்மாவைச் சேர்ந்தவை அல்ல.

ஆதவனுக்கு ஒளிபோன்றும், நீருக்கு குளிர்ச்சி போலவும், நெருப்புக்கு உஷ்ணம் போன்றும், ஸத், சித், ஆனந்தம் என்றும்தூய்மை, இவைகளே ஆத்மாவினுடைய ஸ்வபாவம்.

Meditation is the only way for Self realisation—'Sivalinga' is the (SILHOUETTE) Symbol of Man Seated in Meditation.

—*Sendil Thuravi.*

கிளைகள் பல பிரிந்து ஓடி, மக்களின் தேவைக்கான பொருள்கள் பூமியிலிருந்து விளைய உதவி செய்து, கடைசியில் கழிவுத் தண்ணீராகவும், எஞ்சிய தண்ணீராகவும் அம்மாபெரும் ஜீவநதியிலேயே போய் கலந்து விடுகின்றன: அல்லது அந்த ஜீவநதிக்கு ஜீவாதாரமாக உள்ள கடலில் போய் கலந்து விடுகின்றன. இந்த ஜீவநதியே அத்வைத சித்தாந்தம்; கிளை நதிகளின் ஸ்தானத்தை, விசிஷ்டாத்வைதம், த்வைதம், சுத்தாத்வைதம், சிவாத்வைதம் ஸ்ரீகண்டபாஷ்யம் போன்ற சித்தாந்தங்கள் பெற்று இந்நாட்டின் புண்ணிய, பாவங்களுக்கு சாட்சி பூதமாக இருந்து நம்மை நல் வாழ்வுக்கு அழைத்துச் செல்கின்றன.

பாரத தேசத்தில் இன்று அந்நிய மதங்கள் கிறிஸ்து—இஸ்லாம்—இரண்டும் ஊடுருவி ஜனத்தொகையில் ஒருகணிசமான பங்கைப் பெற்றுள்ளன. இந்த இரு மதங்களிலும் உட்பிரிவுகள் அநேகம் உள்ளன என்றாலும். மதம் தோன்றக் காரணமாயிருந்த மகா புருஷர்கள் ஒருங்கே எல்லா பிரிவினராலும் போற்றப்படுகிறார்கள். அவர்கள் படைப்பான பைபிளும், குரானும் இப்மதத்தினருக்கு வேதங்கள் போலாகும்.

இக் கருத்தினை பின்னணியாகக் கொண்டு நமது ஸநாதன வைதிக மதத்தைப் பார்த்தால் தெளிவு காண்பது மிகக் கடினம். ஏனெனில், இந்துமதத்தின் பிதா என்று குறிப்பிட்டுச் சொல்ல யாருமில்லை. 'இந்து' என்ற பெயரே நமது வைதிக மதத்திற்கு எப்படி வந்தது என்பதை இன்னும் ஆராய்ச்சி நடத்துகிறார்கள். ஆனாலும் ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மத்திய ஆசியாவிலிருந்து வந்த யாத்ரிகர்கள் வடமேற்குக் கணவாய்கள் மூலம் பாரத புண்ய பூமியில் பிரவேசித்திருக்கிறார்கள். அவர்கள் நடமாடிய பிரதேசத்தில் ஓடிய ஸிந்து நதியை ஆதாரமாகக் கொண்டு, அந்நதி தீரத்தில் வசித்த ஜனங்களை ஸிந்துக்கள் என்று அவர்கள் அழைத்ததாகவும், பின்னர் அது திரிந்து இந்து என்று பெயரடைந்ததாகவும், அந்த ஜனங்களுடைய வைதிக

மதமும் இந்து மதமாகிவிட்டது என்றும் பல சான்றுகளோடு கூறுகிறார்கள். அதுவே இன்று ஸ்திரமாகி விட்டதையும் நாம் பார்க்கிறோம். இனி உலகம் உள்ள அளவுக்கு நமது மதத்தின் பெயர் இந்து மதம்தான் என்று நாம் நம்பிக்கையோடு கூறலாம்.

ஆனால் இந்து மதத்தின் வைதிக-ஸநாதன கொள்கைகள், சாஸ்திரங்கள், பழக்க வழக்கங்கள் யாவும் அனாதியான வேதங்களிலிருந்தும் வேதாகமங்களிலிருந்துமே வருகின்றன. வேதங்கள் நான்கு. ரிக்வேதம் யஜுர்வேதம் ஸாமவேதம், அதர்வணவேதம் என்ற பெயரில் நம் நாடு பூராவும் பரவியுள்ளது. நமது இந்து சமூகம் இந்த நான்கு வேதங்களில் பெரும்பாலும் முதல் மூன்றில் ஏதேனும் ஒன்றோடு சார்பு கொண்டு, பரம்பரை பரம்பரையாக வந்து கொண்டிருக்கிறது. நான்காவதான அதர்வண வேதச் சார்புடையவர் மிக மிகச் சொற்பம் என்பதோடு, இந்த வேத சாரத்தின் பயனை அயல் நாடுகளில் உள்ள சில மதப் பிரிவினர் கொண்டாடுகிறதாகவும் அறியப்படுகிறது. இங்கே நாம் வேதங்கள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடப் போவதில்லை. ஏனெனில் அதற்கான தகுதி ஒரு சிலருக்குத் தான் உண்டு!

இவ்வாறு வேத, வேதாகமங்களுக்குட்பட்ட இந்து மதம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், சமுதாயத்தின் சாபக் கேடாக அவ்வப்போது தோன்றிய சில குதர்க்க மேதைகளிடம் அகப்பட்டுக் கொண்டு, சூறாவளிக் காற்றில் சுழலும் மரக்கலம் போல், கலங்கிய குட்டைபோல், இடிவிழுந்த கோபுரம் போல், பார்வையிழந்த சைத்ரிகன்போல் சீர்கேடடைந்து இருந்ததை சரித்திர வரலாறுகள் எடுத்துக் கூறுகின்றன. இதிகாசங்களும், புராணங்களும் இந்தக் குதர்க்க வாதிகளின் கவனத்திற்கு வந்ததாகவே தெரியவில்லை. அவர்கள் வேதாகமங்களிலுள்ள உண்மைகளுக்கு மாறான அர்த்தங்களைக் கற்பித்து மக்களைக் குழப்பிக் கொண்டு கும்மாளம் போட்டுக் கொண்டிருந்ததைக் கண்டு

பொறுக்காமல்தான், பாரத தேசம் கலியுக பிரளயம் வரும் முன்பே கரடி, புலி சிங்கம் வாழும் கானகமாக மாருமலிருக்க, ஸ்ரீசங்கர பகவத் பாதாள் அவதரித்தார்கள். தெற்கே தோன்றி நாளு திசைகளிலும் அவர் திக்விஜயம் செய்து குதர்க்கவாதிகளை அடக்கி, நமது இந்த மதத்தின் புராதனத் தன்மை மீண்டும் சுடர்விட்டு பிரகாசிக்க அத்வைத சித்தாந்தத்தைத் தோற்றுவித்தார். இன்று நமது பழம்பெரும் நாட்டில் தோன்றியுள்ள மற்ற சித்தாந்தங்களுக்கெல்லாம் முதன்மையாக அது இருப்பதாலேயே, உலக மக்களின் கவனத்தை அது அதிகமாகக் கவருகிறது. ஆனல், இந்து சமூகத்தினர் வேறு சித்தாந்தங்களையும் கடைப்பிடிக்கிருர்கள் என்ற உண்மையையும் உலகம் அறியும்.

அத்வைதத்திற்கு அடுத்தபடியான ஸ்தானத்தை வகிப்பது விசிஷ்டாத்வைத சித்தாந்தம். இதன் கர்த்தா ஸ்ரீராமாநுஜர் என்ற உடையவர். நமது மதாசாரியர்களில் ஒருவராகிய ஸ்ரீராமாநுஜரின் விசிஷ்டாத்வைதத்திற்கு விதை ஊன்றி தண்ணீர் வார்த்தவர்கள் ஆழ்வாராதிகள். அவர்கள் ஸ்ரீமகாவிஷ்ணுவை நாயகனுக வைத்துப் பாடிய பிரபந்தங்களில் சரணுகதி தத்துவம், ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயம் இரண்டும், நரம்புஸ்தானமக அமையப் பெற்றிருக்கின்றன. பாரதம் போற்றும் மகான்களில் ஒருவரான ஸ்ரீராமாநுஜர், ஆழ்வாராதிகளின் பிரபந்தத்தைத் தமிழ் வேதமாக மாற்றி அமைத்து, அதனுள்ளடங்கியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தை வெளிக்கொண்டு வந்து வேத, வேதாகமங்களிலிருந்தும் அதற்கு பலம் தேடி, ஸ்ரீசங்கர பகவத் பாதாளின் அத்வைதத்தைச் சற்று மாற்றி, தமது விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை உருவாக்கினுர். ஸ்ரீஆதி சங்கரர் 'ஆத்மா ஒன்றுதான் உள்ளது. அதுவே ப்ரும்மம்' என்ருர். ஸ்ரீராமாநுஜரோ 'பரம்பொருள் ஸ்ரீமந் நாராயணன்தான்! அப்பரம் பொருளின் அம்சம்தான் ஜீவன். ஜீவன் பரம்பொருளான ஸ்ரீமந் நாராயணனிடம் பக்திசெலுத்தி

வந்தால் ஜீவன் முக்தி பெறலாம்' என்ருர். இதுதான் விசிஷ்டாத்வைத சித்தாந்தம்.

மூன்ருவதாகத் தோன்றியது த்வைத சித்தாந்தம், இதன் ஆசாரியர் ஸ்ரீமத்வாசாரியர். இங்கே தான் ஸ்ரீசங்கர பகவத் பாதாளின் அத்வைதம் கண்டனத்திற்குட்பட்டு முற்றிலும் வேருன ஒரு கருத்து பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. ஜீவன் வேறு; பிரம்மம் வேறு! ஜீவன் பிரம்மத்தை அடைய முடியாது. பக்தி செலுத்தி தனித்து இருக்கவேண்டியதுதான் ஜீவன். 'ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத்' என்ற கொள்கை. ஸ்ரீமகா விஷ்ணுவின் அவதாரங்களை—முக்கியமாக ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா—வழிபட்டு வருவதொன்றே மோக்ஷ சாதனம் என வலியுறுத்துகிறது த்வைதம்!

மதாசாரியர்களான ஸ்ரீராமாநுஜரும், ஸ்ரீமத்வரும் தங்களுடைய சித்தாந்தங்களுக்கு பலம் தேட, பிரும்ம ஸூத்ர பாஷ்யம் செய்தருளியுள்ளார்கள். இருவரும் ஸ்ரீமகா விஷ்ணுவையே பரம்பொருள் என்பதால் இவர்கள் வழியைப் பின் பற்றியவர்களை வைஷ்ணவர்கள் என்று அழைக்கிருேம். ஸ்ரீமகாவிஷ்ணுவை சங்கர பகவத் பாதாள் ஒதுக்கிவிட்டது போலவும், பரமேச்வரனையே அம்மகான் ஆராதித்தது போலவும் தீவிர பிரசாரம் செய்து, சிவ—விஷ்ணு பேதத்தை சமூகத்தில் வளர்க்க சிலர் பல நூருண்டுகளுக்கு முன்பே முற்பட்டார்கள். அத்வைதிகள்—சங்கரர் சித்தாந்தக்காரர்கள்—அனைவரும் சிவ வழிபாட்டை மேற்கொண்டவர்கள்: சிவனே பரம்பொருள் என்று விவேகமற்ற ஒரு கற்பனையை உருவாக்கினுர்கள். உட்புகுந்து ஆராய்ந்தால் ஸ்ரீசங்கரர் தமது சித்தாந்தத்தில் இறை வழிபாட்டைப் பற்றிக் கூறவில்லை; இன்னும் சொல்லப்போனுல், அவர் ஸ்ரீமத் பகவத் கீதைக்கும், ஸ்ரீவிஷ்ணு சகஸ்ரநாமத்திற்கும் தனித்தனியே பாஷ்யம் அருளியிருக்கிருர்கள். இன்றும் அந்த அவதார மகாபுருஷரின் சித்தாந்தத்தை உலகிற்கும், பாரத நாட்டிற்கும் எடுத்து பிரசாரம் செய்து வரும் ஸ்ரீமடங்கள் எதிலுர் சரி, அம் மடங்களை அலங்கரிக்கும் பீடாதிபதிகளும்

# ஆத்ம போதம்

ஆத்மந : ஸச்சிதம்சஸ்ச புத்தே : வ்ருத்திரிதி த்வயம்
ஸம்யோஜ்ய ச அவிவேகேந ஜாநாமீதி ப்ரவர்த்ததே ॥ 25

ஆத்மநோ விக்ரியா நாஸ்தி புத்தேர் போதோ ந ஜாத்விதி
ஜீவ : ஸர்வமல(ஹ)ம் ஞாத்வா கர்த்தா த்ரஷ்டேதி முஹ்யதி ॥ 26



★

ஜடமான புத்தியின் விருத்தியினால் "நான் அறிகிறேன்" என்று ஸச்சிதானந்த ஸ்வரூபமான ஆத்மாவுடன் இணைத்துக் கூறுகின்றனர்.

ஆத்மாவுக்கு விகாரம் இல்லை; புத்திக்கு அறிவு என்பது கிடையாது. மனத்துடன் சேர்ந்த ஆத்மாதான் ஜீவன். ஆத்ம சைதன்யத்தினுடன் மனம் சேர்ந்து நான் கர்த்தா, என்று எண்ணி எல்லா விவகாரங்களிலும் பார்க்கிறேன், செய்கிறேன் என்று ஜீவன் ஈடுபடுகிறது.

★

Self - attainment, *Atmalabha* is the greatest Good to the Society.

—*RamanaMaharishi.*

---

# ஆத்ம போதம்

ரஜ்ஜு ஸர்பவதாத்மாநம் ஜீவோ ஞாத்வா பயம் வஹேத் |
நாஹம் ஜீவ : பராத்மேதி ஞாதஸ்சேத் நிர்பயோ பவேத் || 27
ஆத்மாs வபாஸயத்யேகோ புத்யாதீநீந்த்ரியாணி ஹி
தீபோ கடாதிவத் ஸ்வாத்மா ஜடைஸ்தைர் நாவபாஸ்யதே 28

★



கயிற்றை பாம்பாக நினைப்பதுபோல் தன்னை ஜீவனாக எண்ணுவதால் பயம் அடைகிறான். தான் பரமாத்மா ஸ்வரூபம் என்று உணரும்போது பயம் நீங்கினவனாக ஆகிறான்.

விளக்கொளியானது குடம் முதலிய பொருள்களைப் பிரகாசப் படுத்துவதுபோல, ஆத்மாதான், புத்தி, மனம், இந்திரியம் முதலியவற்றை விளங்க வைக்கிறது. ஜடமான மனம் புத்தி முதலியவற்றால் ஆத்மா பிரகாசப் படுவதில்லை.

Bhakthi & Gnana, Both paths lead you to a State of Supreme peace, MOUNAM, that passeth all understanding.

—*Ramana Maharishi.*

சரி, ஸ்ரீமகா விஷ்ணுவுக்கே முதல் இடம் கொடுத்து நித்ய கர்மாநுஷ்டான, பூஜா கைங்கரியங்களைச் செய்கிறார்கள்! காலையில் எழுந்ததும் "அச்சுதாயநம! அனந்தாய நம! கேசவாய நம:" என்றுதான் ஆசமனியத்தைத் துவக்கு கிறார்கள். இந்த கர்மா அநுஷ்டான மந்திரங்கள் எல்லா வற்றிலும் ஸ்ரீமந் நாராயணனே பெரும்பாலான இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கும் போது, அத்வைதிகளை சிவ பக்தர்கள் தாம் என்றும், பகவத் பாதாள் காட்டிய வழி அதுதான் என்று கூறுவதும் அபத்தமானது: அர்த்தமற்றது.

ஆனால் விஷ்ணுவைப் பரம்பொருள் என்று சொல்லி இரண்டு சித்தாந்தங்களை இரு மதாசாரியர்கள் உருவாக் கியதும், சிவனடியார்கள் சைவ சித்தாந்தத்தை உருவாக்கி, அதற்கு சிவாத்வைதம் என்று பெயரிட்டார்கள். ஆழ் வாராதிகளுடைய பிரபந்தம் விஷ்ணு பக்திக்கு அடி கோலியது போல், சிவபக்திக்கு நால்வருடைய தேவார, திருவாசகமும் நாயன்மார் கதைகளும், சேக்கிழார் திருவிளை யாடற் புராணமும் அஸ்திவாரமாக அமைந்தன. அவ்வளவு தான்: சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் மோதல் ஏற்பட ஆரம் பித்து, மத சரித்திரத்தில் பிளவுகளை உண்டாக்கி விட்டது. அதன் காரணமாக வெவ்வேறு மேதைகள், மகான்கள் நாளடைவில் தோன்றி அவரவரது கொள்கைக்கேற்ப சித்தாந்தங்களையும், பக்திமார்க்கங்களையும் தோற்றுவித்து சிஷ்யர்களைச் சேர்ப்பதில் ஈடுபட்டார்கள். கி. பி, பதினைந் தாம் நூற்றாண்டில் இந்த மதப்புரட்சி, பிளவு காரணமாக ஸ்ரீபகவத் பாதாளின் எண்ணம் மறைமுகமாக நிறை வேறியது! அதாவது பக்திமார்க்கத்தில் ஊறிப்போய் நன்கு பயிற்சி பெற்று, தேர்ச்சியடைந்த பிறகே ஞானமார்க் கத்தின் தன்மை புலப்படும். ஞானமார்க்கத்தில் திளைக்கும் போதுதான் அத்வைதத்தின் சிறப்பு வெளியாகும்; சாதாரண மக்களுக்குத் தேவையான பக்திமார்க்கத்தை அமோக பலனோடு எடுத்துக் காட்ட ஸ்ரீவல்லபாசாரியரின் சுத்தாத்வைதமும், ஸ்ரீசைதன்யரின் கிருஷ்ணபக்தியும்,

கச்சியப்பரின் கந்தபுராணமும், அருணகிரியின் திருப்புகழும், ஸ்ரீராம கிருஷ்ணபரமஹம்ஸரின் அத்வைத ஈடுபாடும் வேத வேதாகமங்களைக் காட்டிலும் பிரபலமடைந்து இந்து சமூகத்தினர் உய்ய பெருமளவுக்கு உதவி செய்தன.

மதக் கொள்கைகளில் மேற்குறிப்பிட்ட பிரிவுகள் தோன்றிய பிறகே சைவ, வைஷ்ணவ சமயங்கள் தலையெடுத்தன. இன்று நாட்டில் சைவர் என்றும், வைஷ்ணவர் என்றும் பிரித்துக் கூறப்படுபவர்கள் அத்வைதிகள் அல்ல. சிவம்—விஷ்ணு இரண்டு தெய்வத்தையும் பரம்பொருளாக கருதிவழிபடுபவர்களே அத்வைதிகள்! அவர்கள் ஆச்ரயிக்கும் ஸ்ரீ மடங்களில், பீடங்களில் மிக மிக முக்கியமானதே ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடம்.

* * *

சில வருடங்களுக்கு முன் திருச்செந்திலாதிபன் சந்நதியில் சுற்றி வந்துகொண்டிருந்த சமயம். 'ஸுப்ரமண்ய புஜங்கம்' சொல்லிக் கொண்டிருந்தேன். உடன் வந்திருந்த வாசஸ்பதியிடம் "வெளியேயோ உள்ளேயோ சங்கரரின் உருவம் இருக்கவேண்டும். ஆராய்ச்சி செய்வோம்" என்று ஒப்பந்தம் செய்து கொண்டு வந்திருந்தேன். உருண்ட விழிகளை மேலும் உருட்டியபடி துருவிப் பார்த்தவர் கண்ணில் அங்குள்ள உள் மண்டபத்தூணில் சுண்ணும்பு அடித்து அடித்து அரையும் குறையுமாக ஒரு உருவம் தெரிந்தது பட்டுவிட்டது. "இதை எண்ணெய் தடவி சுத்தப் படுத்திப் பார்த்தால் ஒரு சமயம் ஆதிசங்கரருடைய உருவாக இருக்கும்" என்றார். அவ்வாறே செய்து பார்த்ததில் ஒரு மரத்தின் அடியில் தண்டு கமண்டலங்களுடன் யோக பட்டை கட்டிய கோலத்தில்,சிரஸில் ருத்ராக்ஷம் தரித்து அழகே உருவான ஒரு திருவுருவம் இருந்தது! ஸ்ரீசங்கரர் தான் என்பதில் சந்தேகம் இல்லை என்றதும், பரம திருப்தியோடு நிர்வாக அதிகாரியைக் கண்டு விவரத்தைச் சொல்லி, "இதற்கு ஒரு பெட்டி செய்து, விளக்கேற்ற ஏற்பாடு செய்யலாம்" என்று கூறினேம்.

“ஆதிசங்கரர் நல்ல ஆளுதானுங்களா?” என்ருர் நிர்வாக அதிகாரி. பூமியே சுழன்றது! நம் நாட்டின் நிலைமை, கல்வியின் அமைப்பு, இந்து சமுதாயத்தின் பால் நாம் கொண்டிருக்கும் அன்பு எல்லாம் இவ்வளவுதானு? அத்வைத சிற்பியான ஆதிசங்கரர் என்பவர் எங்கு பிறந்தார், வளர்ந்தார், இந்நாட்டுக்கு என்ன தான் செய்தார்? ஆதிசங்கரரே தெரியவில்லை என்ருல் அத்வைதம் என்ருல் என்ன தெரியும்? சராசரி மாணவர்கள், அலுவலுகம் செல்லுபவர்கள் எல்லோருக்கும் குலம், கோத்திரம், நமது மத நூல்கள் முதலியவற்றின் பெயராவது தெரிந்திருக்கக் கூடாதா? இதற்குக் கூட வழியில்லை, இன்றைய அவலநிலையில் ‘கங்கை எங்கே ஓடுகிறது?’ என்று திட்டவட்டமாக ஒரு இந்து மாணவனுல் கூறமுடியாது திணறிய சமயம், பாவம் அம்மாணவனுடைய அறிவு எவ்வளவு தூரம் மதசம்பந்தமாக விரிவடைந்துள்ளது என்று கண்டேன். இதுவே அந்நிய நாட்டினராயின் தமது மத நூலான பைபிள், குரான் பற்றி நன்ருகச் சொல்வதோடு தினமும் அதைப் பாராயணமும் செய்கின்றதைக் காண்கிரேும். இந்நிலை மாறவேண்டும். நிற்க...

இரண்டு என்று ஒரு நிலையில் தான் பயம் ஒன்று ஏற்படுகிறது. இரண்டாவது என்பது இல்லையானுல் எந்தவிதமான பயமும் இல்லை, ஆகவே, பயத்தில் மரணபயம் தான் முக்கியமான பயம், அதனுல் தான் அதைப் பற்றி மட்டும் எவரும் சிந்திப்பதோ, பேசுவதோ கூட இல்லை. அப்பயம் நிவர்த்தியாக வேண்டுமானுல் (ஜனனம்) பிறப்பு இருக்கக் கூடாது. பிறக்காது இருக்க புண்ணியம் பாவம் இரண்டும் அகலவேண்டும். புண்ணிய பாவத்துக்கு ஆசையும் கோபமும் தான் காரணம். இவை இரண்டும் தான் மனிதனுக்கு முக்கிய சத்ருக்கள். இதைத்தான் பகவத்கீதையில்,

“காம ஏஷ க்ரோத ஏஷ ரஜோகுண ஸமுத்பவ!
மஹாசனம் மஹா பாப்மா வித்யேனம் இஹவைரிணம்”

என்று கூறுகிருர் பகவான்.

இப்படி ஆசையெல்லாம் அடக்கி, மௌனமாக கண்ணை மூடிக்கொண்டு ஆனந்தமும் அடங்கிய நிலையிலே தன்னைத் தவிர அன்னியமான ஒரு வஸ்துவும் இருப்பதை உணராத இரண்டற்ற ஒன்றேயான ப்ரஹ்மமேதானான நிலைதான் (Existence—Knowledge—Bliss) அத்வைத நிலை! அது எங்கும், எப்பொழுதும் அறிவுமாயமாக—எது அழியும் தன்மையுடைத்து, எது நிரந்தரமானது என்பதை திட்ட வட்டமாக அறிந்த நிலை ஆனந்தமயமான நிலை, இதுதான் (One-Without a Second) இரண்டற்ற ஒன்றேயான நிலை (Non-dualisn) "அத்வைதம்" என்பது ஸ்ரீசங்கரரின் அனுபவத்தைச் சார்ந்த ஸித்தாந்தம். அதனால் நாம் ஸ்ரீசங்கர மரபினர்—"அத்வைதிகள்" இது பூரணமாக உரைக்க முடியாத அனுபவமாதலின் ச்ருதிகளில் "அநிர்வசனீயம்" "அவாங் மனஸாகோசரம்" என்று கூறப்பட்டுள்ளது.

இந்த மஹத்தான உன்னத யோக நிலை இயல்பானதாக இருந்தும் புரியாதபடியுள்ளது. இந்த நிலைகளை விளக்கிச் சொல்வது! "ப்ரஸ்தானத்ரயம்"—அதாவது கீதாபாஷ்யம் (பாஷ்யம் என்றால் விளக்க உரை) உபநிஷத் பாஷ்யம்—ஸூத்ர பாஷ்யம். இவைதான் மூலக்கிரந்தங்கள். இவற்றைப் படித்துத் தெரிந்து கொள்ள முடியாதவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் எளிய முறையில் சில நூல்களை ஆசாரியாள் செய்தருளினார்கள். அவை "ப்ரகரண க்ரந்தங்கள்" இவற்றில் "விவேகசூடாமணி", "ஆத்ம போதம்" முதலிய நூல்கள் சிறந்தவை. இந்நூல்களில் அர்த்த புஷ்டியோடு சுருக்கமாக உபநிஷத சாரங்களைத் தெளிவாகக் கூறி, உபமான உபமேயங்களுடன் விளக்கியுள்ளார். நூலின் பெயரே ஆத்மாவைப் பற்றி போதிப்பது! விவேகத்தை தரவல்ல நூல்களில் கிரீடம் போன்றது என்ற கருத்து துலங்கும்படியுள்ளது.

இப்படி இந்த முக்கிய நூல்களுக்கு அர்த்தங்களும், விரிவுரைகளும் பலபெரிய மஹான்கள் எழுதியுள்ளனர். வ்யாஸமஹரிஷியால் சுருங்கக் கூறப்பட்ட ப்ரஹ்மத்தைக்

குறிக்கும் நூல்தான் ப்ரஹ்ம ஸூத்திரம். அது கடினமானது என்று குறிப்பதற்காகத் தான் நடைமுறையிலே பேசும் போது கூட, "அது என்ன பெரிய ப்ரஹ்ம ஸூத்திரமோ?' என்று கூறுகிறோம். இதற்கும் ஸ்ரீசங்கரர் அரிய பாஷ்யம் அருளினர். இதற்கு ஆசாரியரின் சிஷ்யரான பத்ம பாதரே "பஞ்சபாதிகா" என்று விவரமான நூல் எழுதியுள்ளார். இன்னும் அநேகர் செய்த வியாக்யானங்களில் வாசஸ்பதி மிச்ரரின் பாமதி, அமலாநந்தரின் கல்பதரு, அப்பய்ய தீக்ஷிதரின் பரிமளம் முதலியன சிறப்பான நூல்களாகும்.

நம்முடைய கண்களுக்குத் தோன்றுவது "த்வைதம்." நாம் உலகத்தில் பலபொருள்களைப் பார்க்கிறோம். ஆனால் அவை உண்மையில் இல்லை. விழிப்பு நிலையில் தோன்றும் இவையாவும் தூக்கத்தில் மறைந்து விடுகின்றன.

"யத்ர ஹி த்வைதமிவ பவதி! ததிதர இதரம் பச்யதி யத்ர த்வஸ்ய ஸர்வமாத்மைவா பூத்; தத்கேனகம் பச்யேத்.—(ப்ருஹதாரண்யக உபநிஷத்) எல்லாம் ஆத்மாவாக (அங்கு ஜீவாத்மா; பரமாத்மா என்று கூட இல்லை) ஆகிவிட்டால் —சுவாமி விவேகானந்தர் முதலில் ஏளனம் செய்து, பிறகு அனுபவ வாயிலாகக்காணும் பாலும், கோப்பையும், அவரும் எல்லாமே ப்ரஹ்மமாகவே என்று உணர்ந்த ஆனந்தமே— ஆதிசங்கரரின் 'அத்வைதம்' என்ற அருமையான பிறவிப் பிணிக்கு ஒரு தனி மருந்து.—ஈடு இணையற்றது. [இவ்வளவையும் வாசஸ்பதி ஒரு குட்டி பிரவசனமாக செய்ததும் நிர்வாக அதிகாரி அசந்து போய், "ஏதோ செய்து விடலாம்... கவலைப்படாதிங்க!" என்று சங்கரரை அங்கீகரித்தார்.]

* * *

"அன்று நீர் சொன்னதெல்லாம் உண்மைதான் என்பதற்கு, அங்கங்கே 'கடபுட' என்று சமஸ்க்ருத ஸ்லோகங்களைக் கூறி அவருக்கு விளக்கி எல்லாம் அத்வைதம் தான் என்று கூறிவிட்டீர்! எனக்கு ஒரு சின்ன சந்தேகம். அத்வைதி என்று கூறிக்கொண்டவர்களுக்கு பூஜை அபிஷேகம்

இதெல்லாம் உண்டா? நமது ஆசாரியாள் பரம்பரையினர் இதைச் செய்கின்றனரே? அவர்கள் அடைந்துள்ள பேரானந்த நிலையான 'அத்வைதம்' எங்கே? சாதாரண மனிதன் போல்செய்யும் புளிக்கும் பால், ஊசும் அறுசுவை நிவேதனம், அழுகும் பொருள்களை இவைகள் வைத்துச் செய்யப்படும் பூஜை எங்கே? ஒன்றுக்கொன்று முரண்பாடாக வல்லவா இருக்கிறது,'' என்றேன்.

''நீர் கேட்பது நியாயமான கேள்விதான். அத்வைதிக்கு பூஜை தேவையில்லைதான். பட்டினத்தடிகள் பாடல் தெரியுமா உமக்கு!

''வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம், இன்னொருவர்க்
கெட்டாத புட்பம் இறையாத தீர்த்தம் இனிமுடிந்து
கட்டாதலிங்கம் கருத்தினுள்ளே!
முட்டாத பூஜையன்றோ குருநாதன் மொழிந்ததுவே''

'தியானயோகமே' எல்லா பூஜையும். 'கிழம்' சிவாஸ்தானத்தில் போய் உட்கார்ந்திருக்கிறதே! சும்மாவான்னு கேட்கிறேன். இன்னும் பூசையே பண்ணப்படாதான்னேன். ''ப்ருவோர்மத்யே சிவாஸ்தானம்'' மனஸ்தத்ர விலீயதே என்பது சாஸ்திரம். இதை சூசகமாக உணர்த்துகிறார். நாம் மனத்தை அடக்கு, பூஜை வேண்டாம், புஷ்பம் வேண்டாம்னு சொல்லிவிட்டால் அத்தனை பசங்களும் எல்லாத்தையும் விட்டுவிட்டு, ''இப்போ கேட்டார் பாரும் 'ஆதிசங்கரர் யாரு'ன்னு! அப்படித்தான் ஆயிடும்! அதுக்குத்தான் எல்லாத்தையும் விட்டு விட்டு, எல்லாம் ஒண்ணு என்று தெரிந்த பிறகும் உலகத்துக்காக இந்த படிக்கட்டுகளைக் கட்டி மற்றவர்களும் மேலே வரட்டும் என்ற பரமசிவமான கருணை! தெரிகிறதா? இப்படி பெரியவாள் இல்லாவிட்டால்,

''உளியிட்ட கல்லையும் மொப்பிட்ட சாந்தையும் ஊற்றையறப்
புளியிட்ட செம்பையும் போற்றுகிலேன் உயர்ந்த
பொன்னெனவே

ஒளியிட்ட தாளிரண்டுள்ளே யிருத்துவதுண்மை யென்று
வெளியிட்டடைத்து வைத்தேன் இனிமேல் ஒன்றும்
வேண்டிலேனே''

என்று சிவசிவா என்று இருந்து விடுவார்கள். இது அஹம் வ்ருத்தி இல்லே; அஹம் ஸ்பூர்த்தி! அதாவது நான் நான் என்ற (அகங்காரி) கர்த்தா எண்ணத்தோடு செய்வது அஹம் வ்ருத்தி. நாஅஹம் கர்த்தா நஅஹம் கரோதி. என்று எல்லாம் சிவமயமாய் கண்டுசெய்வது ''அஹம் ஸ்பூர்த்தி அல்லது விருத்தி ஞானம்.

* * *

பேசிக்கொண்டே சற்று புரிந்தும் புரியாத ஒரு குழப்ப மான நிலேயில் ஸ்ரீமடத்தின் வாயிலே அடைந்தேன். முதிய வரும் சிறியவருமாக ஒரு கூட்டம், புஷ்பம் பழத்துடன் பெரியவாளுடைய விச்வரூப தரிசனத்துக்குக் காத்துக்கொண் டிருந்தது, நானும் சற்றுமுன்னே சென்று நின்றுகொண்டிருந் தேன். எனக்கு நாலடி தள்ளி ஒரு 90 வயது கிழவர் கையில் காசிக்கம்பளி கட்டிய ஒரு மூட்டையோடு வாயில் ஏதோ மந்திரம் முணுமுணுத்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தார். எனக்கோ அத்வைதம், பூஜை குழப்பம்! திடீரென்று கன்னத் தில் போட்டுக் கொண்டனர். திரையை நீக்கிக்கொண்டு உறங்கி எழுந்த நிலேயில் மேலும் கீழும் காவி ஆடை தொங்க, என்றும் எவரையும் வசீகரிக்கும் முறுவலுடன் பெரியவாள் வந்தார்கள். 'நீ எப்போ வந்தே?' என்று தட் டுத் தடுமாறி நமஸ்கரித்து எழுந்த பெரியவரை அன்பொழுக விசாரித்து தமக்கே உரிய பாணியில் காலின்மேல் கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்துகொண்டார்கள்.

இன்னிக்கு காலம்பறதான் வந்தேன். பெரியவாளே தரிசனம் செய்யணும்னு தினம் நினேக்கிறதுண்டு. சரீரம் இடம் கொடுக்கலே. ரொம்ப தள்ளாமையாயிட்டேன். இன்னிக்கு வரை எனக்கு பெரியவா கொடுத்த இந்த பூஜையை சிரத்தையோடு 50 வருஷமாக பண்ணிண்டு வந்து விட்டேன். தள்ளாமையினுலே செய்யமுடியலே. அபசாரப்

படப்படாதே என்று சந்நிதானத்துக்கே கொண்டு அர்ப்பணம் பண்ண எடுத்துண்டு வந்துவிட்டேன்'' என்று பூஜை பெட்டியை ஸ்ரீ பெரியவாள் முன் வைத்தார். அதை அப்படியே தனது இடது பாதத்தால் கொக்கி போட்டு இழுப்பது போல் இழுத்துக் கொண்டார்கள் பெரியவர்கள்! எனது சப்த நாடிகளும், எண்ணங்களும் சந்தேகங்களும் சிதறிஓடின.

50 ஆண்டுகள் செய்யப்பட்ட பவித்ரமான பூஜையை பல்கூட துலக்காமல் இடது காலினுல் இழுக்கவேண்டுமானுல் ......அடேயப்பா! அத்வைதத்தின் மகிமைதான் என்னே! அன்று முதல் அத்வைதத்தைப் பற்றி ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால் உடனே நான் கண்ட அற்புத காட்சியை ஞாபகப்படுத்திக்கொண்டு பார்த்து, உடனே தெளிவும் கண்டு கொண்டு விடுவேன். என்னைப் போன்ற அஞ்ஞானக் குன்றுகள் இந்நாட்டில் 99 சதவிகிதம் என்பதால் அன்று கண்ட அதி அற்புதக் காட்சியை இங்கே குறிப்பிட்டு, "இதுதான் 'அத்வை[illegible]' என்பதற்குச் சான்று" என உறுதியுடன் கூறுகிறேன். அத்வைதத்தின் மீது சந்தேகம் உள்ளவர்கள் இத்தெய்வீகக் காட்சியை மனதுக்குள் சித்தரித்துப் பார்த்துக் கொண்டார்களானுல் நிச்சயம் தெளிவு காண்பார்கள் என்பதோடு அதில்தான் சிவனும் விஷ்ணுவும் இல்லை என்பதையும் எல்லாம் ப்ரஹ்மமே என்றும் புரிந்து கொள்வார்கள்.

[அத்வைதம் பற்றிய பொதுப்படையான விளக்கமே மேற்கண்ட கட்டுரை. மேலும் விரிவாக இதை ஆராய நமக்கு இந்நூலில் பல சந்தர்ப்பங்கள் உள்ளன, ஆங்காங்கே பொருத்தமான விஷயங்களைச் சேர்க்க ஆராய்ந்தறிந்த மேற்கோள்கள் பல தயாராயிருக்கின்றன. இந்நூலின் சிறப்பு நாயகனை அறிமுகப்படுத்துவதை மேலும் தள்ளிப்போட்டால் வாசகர்கள் பொறுமை இழந்து புஸ்தகத்தை பின்னுலிருந்து புரட்ட ஆரம்பிக்கவும் தயாராகி விடுவார்கள் என்பதாலேயே ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் பிறந்த மண்ணுக்கு வாசகர் உலகை வரவேற்க, நான் முன்னுல் சென்று ஏற்பாடுகளைச் செய்கிறேன்.]

# ஆத்ம போதம்

ஸ்வபோதே நாந்ய போதேச்சா போதரூபதயா ஆத்மந :
நதீபஸ்யாந்ய தீபேச்சா யதா ஸ்வாத்ம ப்ரகாசதே 29
நிஷித்ய நிகிலோபாதீன் நேதி நேதீதி வாக்யத :
வித்யாதைக்யம் மஹாவாக்யைர் ஜீவாத்மா பரமாத்மநோ : 30



★

ஒரு விளக்கைப் பிரகாசப்படுத்த மற்ருெரு தீபம் தேவைப்படுவதில்லை. அவ்வாறே அறிவு வடிவமான ஆத்மாவை அறிய ஆத்மாவே போதும். இது இல்லை என்று எல்லா உபாதிகளையும் விலக்கி மஹாவாக்யமெனப்படும் (ப்ரம்மத்தை உணர்த்தும்) மந்திரத்தால் ஜீவாத்மா பரமாத்மா இவ்விரண்டினுடைய அபேதத்தை உணர்ந்துகொள்ள வேண்டும்.

★

From the standpoint of the path of knowledge it is the Supreme State of the Self, which is the SATH-GURU.

*—Ramana Maharishi.*

# 5. பிறந்த மண்ணில் இருள் நீக்கி



தாய்—சரஸ்வதி அம்மையார்



தந்தை—மஹாதேவய்யர்

உலகம் வியக்கும் ஏழு அதிசயங்கள் போல் தஞ்சை பெருவுடையான் கோயில் நம்பழந் தமிழ் நாட்டில் வானோங்கி நிற்கிறது. பற்பல அதிசயங்களும், சரித்திர வரலாறும் உள்ள ஒரே கோயில் அது என்றும் கூறலாம். ஆயிரம் வருஷங்களுக்கு முன் தமிழ்நாட்டின் நெற் களஞ்சியம் எனவும் 'சோழ வளநாடு சோறுடைத்து' எனவும் புகழ் பரப்பி நிற்கும் நிலப் பரப்பை ஆண்ட ராஜராஜன் தன் புகழை இன்று வரை உணரும்படி கலைவடிவிலே காட்சியாக்கி அதையும் உயரிய தெய்வ நிலையிலே பதித்துவிடாதிரு



குழந்தை—ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யம்

தால் இன்று அவனைப் பற்றி நாம் அறிவது மிகவும் கடினம். தஞ்சை புஞ்சையாகமல் இருக்கும் காரணம் காவிரியே. நன்றிமறவா நற்குலத் தமிழர் காவிரியை போற்றிப் பாடினர்.

பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
''காவிரி போற்றுதும் காவிரி போற்றுதும்''

என்று தமிழ் காவியம் சிலப்பதிகாரத்தில் காவிரி பாய்ச்சலில் சிறந்து தலைநகராக விளங்கிய பூம்புகாரைப் போற்றுகின்றனர். காவிரி தீர ரஸிகாய நம: என்று அயோத்தியிலே பிறந்து வளர்ந்த சரயூ நதி தீரன் காவிரி ரஸிகனுக, தென்னுட்டையும் வடநாட்டையும் இணைக்கும் தாரக மந்திர பாலமாக புகழ் பரப்பி, பெற்றவருக்கும் வளர்த்தவருக்கும் நற்பெயர் கிடைக்கச்செய்த ஸ்ரீ ராமன் கொலுவீற்றிருக்கும் பல்லாயிரக்கணக்கான தலங்களில் 'வடுவூர்' ராமன் கோவில் மன்னுர்குடி தாலுகாவில் பிரசித்தி பெற்றது. ஒப்பற்ற அழகு வாய்ந்தது! தில்லைவிளாகம் இராமனே அதைவிட ஒருபடி மேல். உலகில் மங்களத்தை உண்டுபண்ண சம்கரோதிதி சங்கர: என்று அந்த சாக்ஷாத் ப்ரமேச்வரனே மங்களாகாரமாக வந்தான் என்கிறான் கம்பன்:

''மூலமும் நடுவும் ஈறும் இல்லது ஓர் மும்மைதாய்
காலமும் கணக்கும் நீத்த காரணன் கைவில் ஏந்தி
சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டு
அயோத்தி வந்தான்

ராமன் சென்ற இடமெல்லாம் முனிவர்களும் தவசிகளும் மக்களும் ''தர்மம் நடந்து வருகிறது'' என்று போற்றி மகிழ்ந்தனர்.

### ''தர்மோ விக்ரஹவாந்''

இப்படி தர்மத்துக்கு இலக்கணம் வகுத்த இராமனுக்கு புகழ் பரப்பிய மன்னுர்குடி தாலூகா இன்றும் புகழ்பரப்பி

மேலும் புதுமை பூண்டு விளங்குகிறது! கயிலையிலே தங்கிய வள்ளல் தான் இராமனாக வந்தான். அதே நீலகண்டன் தான் காலடியிலே சங்கரனாக அவதரித்து அன்று புகழ்பரப்பினான். இன்று சங்கரனாக மக்களுக்குத் தரிசனம் தர மன்னார்குடி தாலுகாவைத் தேர்ந்தெடுத்தான் போலும்! ஸத்யமே பெரிது என்று ஸத்ய வ்ரதமாகக்கொண்ட ஹரிச்சந்திரனின் பெயர் தங்கிய ஹரிசந்திரா நதி தீரம் தான் பிற்காலத்தில் ஸத்ய வ்ரத க்ஷேத்திரத்தில் துறவரசுக்கு இளவரசாக பீடமேற்கப்போகும் இளைஞன் ஸுப்ரஹ்மண்யத்தைப் பெறும் பாக்கியம் பெற்றது.

* * *

மன்னார்குடி ஆலத்தம்பாடி போகும் வழியில் பெரியகுடி பெரியபுள்ளி என்ற ஊர்தான் பிற்காலத்தில் பெரியபுள்ளியாக விளங்கப்போகும் மஹானின் தந்தை மஹாதேவ ஐயர் வாழ்ந்து வந்த ஊர், சிறு அடக்கமான குடும்பம். பிறவியினால் மட்டுமின்றி செயலினாலும் பிராம்மண குலத்துக்கு அணியாக விளங்கிய குடும்பம். தாயார் சரஸ்வதி அம்மையார் இல்லறத்தை நல்லறமாக நடத்தி வருங்கால் புனிதரை கருத்தரித்தனர். தாய்வழி ஊருக்கு "இருள் நீக்கி" அனுப்பி வைத்தார் தந்தை: உலக இருள் நீக்க அவதரிக்கும் அம் மஹான் தேர்ந்தெடுத்த இடத்தின் பெயரும் "இருள் நீக்கி" என்று பார்க்கும்போது இறைவனின் திருவிளையாடல் தெள்ளென வெள்ளிடை மலைபோல் தோன்றுகிறது. மஹாதேவய்யருக்கும் சரஸ்வதி அம்மையாருக்கும் மூத்த குமாரனாக அவிட்ட நக்ஷத்திரத்தில் குருவாரத்தில் ஆடி மாதம் 18—7—1935ல் குமாரன் ஜனனமானான்: தர்மம் காக்கும் தலைமகனார்க்கு அசுர குலமழித்து அறம் மிளிர ஆட்சி நடத்தும் குமரன் போல் ஸுப்ரஹ்மண்யம் என்று தமிழ்த் தெய்வத்தின் பெயரிட்டு தொட்டிலிட்டு மகிழ்ந்தாள் அன்னை!

இங்கு திருவவதாரம் நடைபெற்றதை அறியாத தந்தை இரயில்வே உத்யோகஸ்தராக திருச்சியில் பணியாற்றிக்

# ஆத்ம போதம்

ஆவித்யகம் சரீராதி த்ருச்யம் புத்புதவத் க்ஷரம்
ஏதத் விலக்ஷணம் வித்யாத் அஹம் ப்ரஹ்மேதி நிர்மலம் ॥ 31
தேஹாந்யத்வாத் ந மே ஜன்ம ஜராகார்ச்ய லயாதய :
சப்தாதி விஷயை : ஸங்கோ நிரிந்த்ரியதயா நச ॥ 32



அவித்யையான மாயையால் உடல் முதலியவை தோன்றியது. அறியப்படும் பொருள் யாவும் அழியும் தன்மையுடையது. இவ்வாறு அழியும் பொருள்களைக் காட்டிலும் வேருன நிர்மலமான ப்ரஹ்மமே நான் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

'நான்' (ஆத்மா) தேஹத்தைக் காட்டிலும் வேருனதால் பிறப்பு, இறப்பு, மூப்பு. இளைப்பு, சாக்காடு முதலியன இல்லை, அது இந்திரியமில் லாததால் சப்தம், ஸ்பர்சம் முதலிய விஷயங் களுடனும் கூட்டுறவும் இல்லை.

Worship of HIM by name and form leads one beyond all name and form. DEVOTION Complete culminates in knowledge Supreme.

—*Ramana Maharishi.*

---

# யதி பஞ்சகம்

## (கௌபீன பஞ்சகம்)

வேதாந்த வாக்யேஷு ஸதா ரமந்தோ
பிக்ஷான்ன மாத்ரேணச துஷ்டி மந்த:
விசோக மந்தக் கரணே ரமந்த:
கௌபீன வந்த: கலு பாக்ய வந்த: ॥ 1

மூலம் தரோ: கேவலம் ஆச்ரயந்த:
பாணித்வயம் போக்தும் அமத்ரயந்த:
கன்யாமிவ ஸ்ரீமபி குத்ஸயந்த:
கௌபீன வந்த: கலு பாக்ய வந்த: ॥ 2

தேஹாதிபாவம் பரிமார் ஜயந்த:
ஆத்மாந மாத்மன் அவலோகயந்த:
நாந்தம் நமத்யம் நபஹிர் ஸ்மரந்த:
கௌபீன வந்த: கலு பாக்ய வந்த: 3

ஸ்வாநந்த பாவே பரிதுஷ்டிமந்த:
ஸம் சாந்த ஸர்வேந்த்ரிய த்ருஷ்டிமந்த:
அஹர்நிசம் ப்ரஹ்மணி யே ரமந்த:
கௌபீன வந்த: கலு பாக்ய வந்த: 4

பஞ்சாக்ஷரம் யாவனம் உச்சரந்த:
பதிம் பசூனும் ஹ்ருதி பாவயந்த:
பிக்ஷாசனு திக்ஷு பரிப்ரமந்த:
கௌபீன வந்த: கலு பாக்ய வந்த: 5

—ஸ்ரீ சங்கரர்

# ஆத்ம போதம்

ஆவித்யகம் சரீராதி த்ருச்யம் புத்புதவத் க்ஷரம்
ஏதத் விலக்ஷணம் வித்யாத் அஹம் ப்ரஹ்மேதி நிர்மலம் ॥ 31
தேஹாங்யத்வாத் ந மே ஜன்ம ஜராகார்ச்ய லயாதய :
சப்தாதி விஷயை : ஸங்கோ நிரிந்த்ரியதயா நச ॥ 32



அவித்யையான மாயையால் உடல் முதலியவை தோன்றியது. அறியப்படும் பொருள் யாவும் அழியும் தன்மையுடையது. இவ்வாறு அழியும் பொருள்களைக் காட்டிலும் வேருன நிர்மலமான ப்ரஹ்மமே நான் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

'நான்' (ஆத்மா) தேஹத்தைக் காட்டிலும் வேருனதால் பிறப்பு, இறப்பு, மூப்பு, இளைப்பு, சாக்காடு முதலியன இல்லை, அது இந்திரியமில்லாததால் சப்தம், ஸ்பர்சம் முதலிய விஷயங்களுடனும் கூட்டுறவும் இல்லை.


Worship of HIM by name and form leads one beyond all name and form. DEVOTION Complete culminates in knowledge Supreme.

—*Ramana Maharishi.*

---

# ஆத்ம போதம்

அமநஸ்த்வாத்நமே துக்க ராகத்வேஷ பயாதய !
அப்ராணோ ஹ்யமனா : சுப்ர: இத்யாதி ச்ருதி சாஸநாத் ॥ 33
நிர்குணோ நிஷ்க்ரியோ நித்யோ நிர்விகல்போ நிரஞ்சந: !
நிர்விகாரோ நிராகாரோ நித்ய முக்தோஸ்மி நிர்மல : 34



ஆத்மா, மனம் இல்லையாதலின், விருப்பு, வெறுப்பு, பயம் முதலியன கிடையாது. ஆத்மா ப்ராணனும் அல்ல; மனமும் இல்லை என்று உபநிடதங்கள் கூறுவதால் குணம், செயல் எதுவும் இல்லை. ஆத்மா அழிவற்றது, வேற்றுமை (விகல்பம்) மற்ற பொருள்களின் சேர்க்கை, வேறுபாடு, உருவம், குண, தோஷங்கள் எதுவும் கிடையாததாகிறது.

Beauty is Skin deep. It is the Jugglery of Maya; Go to the Source—Atma—the beauty of beauties, the Everlasting beauty.

—*Swami Sivanandha.*

---

கொண்டிருந்தார். அன்று மாலை நேரத்தில் ஸ்ரீரங்கம் காவிரிக்கு சந்தியாவந்தனம் செய்யச் சென்றார்: பெருமாள் தலைநகரில் விபூதி கிடைக்குமா? வாரி புண்டரம் (தீர்த்தத்தாலேயே விபூதி தரிக்கும் முறை) தரித்தார்: அன்னை அகிலாண்டேச்வரியை தரிசிக்கச் சென்றார்: சோதனையாக ஐயன் ஏகாந்தமாக இருந்தார். பிரஸாதம் அளிக்க ஒரு பட்டர் கூட அங்கும் இல்லை. மன வருத்தத்துடன் வீட்டுக்கு வந்தவருக்கு திரு மகவு உதித்திருக்கிறது என்ற தகவல் தாங்கிய தபால் வந்திருந்தது. ஆகா! இது தான் காரணமோ? வ்ருத்தி தீட்டு, குலவாசாரம் காக்க விபூதி தரிக்க அரன் அனுமதிக்கவில்லை' என்று மனம் தேர்ந்து ஐயன் அருளைப் போற்றி மகிழ்ந்தார்.

ஜீவனோபாயம் ஐயரை விழுப்புரத்துக்கும், திருச்சிக்கும் அலைய வைத்துக்கொண்டிருந்தது. வருடங்கள் உருண்டோடின: வறுமையின் பிடியில் சிக்கிய குடும்பம் பக்கத்தில் ஆதித்யபுரத்துக்கு மாறிற்று. சிறுவன் ஸுப்ரஹ்மண்யம் சிற்றில் சிதைத்து, சிறுபறை முழக்கி சிறுதேருருட்டி விளையாடி விளையாடி ஐந்து வயது பாலகனாக தளிர்நடை பயின்று வர வாரம்பித்தான். மூன்றுவது வரை பள்ளிப் படிப்பு படித்தான. ஆம். உலகெல்லாம் மூன்றாக விரிந்து கிடப்பதை மனப் பள்ளியில் ஐயன் தெளிவு பெற்றானோ? த்ரிபுடியும் நீக்கும் நிமலன் (அறிவோன், அறிவு, அறியப்படும் பொருள்) மூன்றுடன் படிப்பை நிறுத்தினனோ? என ஐயப்பாடே தோன்றுகிறது. வயது எட்டு: சாஸ்திரீய குடும்பமாயிற்றே: உபநயனம் கர்பாஷ்டமத்தில் செய்யப்பட்டது. காலை காபி இன்றி, பிரம்மசாரிகளுக்கு தக்ஷிணை இன்றி, வேதம் தெரியாதவர்களுக்கு அனுக்ஞை இன்றி வேத விதிப்படி நடத்திய இவ்வுபநயனத்தை ஸ்ரீ காமகோடி பெரியவாள் அப்போது மிகவும் பாராட்டினார்களாம்.

ஸ்ரீ காஞ்சி பீடத்தின் மூலக் கரு உருவாவதை அறியானோ அவ்வேந்தல்!

குரு குல வாசம் செய்ய, மடத்துக்கு, திருவானைக்காவில் உள்ள பாடசாலையில் எல்லா ஏற்பாடும் செய்தார் தந்தை. அச்சமயம் திருவானைக்காவில் வேத பாடசாலையில் யஜுர் வேதம் மட்டுந்தான் இருந்தது. செட்டியார் பாடசாலையில் தான் மூன்று வேதமும் இருந்தன. செட்டியார் பாடசாலையில் சேர்க்க மஹாதேவய்யர் மனம் ஒப்பவில்லை. சாதாரணமாகவே மஹாதேவய்யரை எதிர்த்துப் பேச வீட்டில் யாருக்கும் தைரியம் இல்லை. ஆகவே, நாடெங்கிலும் ஆங்கில மோஹம் தலைவிரித்தாடிய காலத்தில், மூத்த குமாரன் வேதம் அத்யயனம் செய்ய அவர் செய்த முடிவை ஏன் என்று கேட்பாரில்லை. ஆனால், நண்பர் ஒருவர் மட்டும், "என்ன! வீட்டுக்கு முத்த பையனை இப்படி விட்டுவிட்டீர்கள்! படிக்க வைக்க வேண்டாமா?" என்றாராம்.

வேத படிப்பு படிப்பு இல்லையா ? "ஏன் ஐயா, போட்டியில்லா படிப்பு இது ஒன்றுதானே! எங்கள் ஊரில் சுந்தரேச சாஸ்திரிகளை விட்டால், பிறகு இந்த 'ரிக் வேதம்' சொல்ல ஆள் இல்லை. இதுதானே நமது குலப் படிப்பு?" என்று எதிர் கேள்வி போட்டு மடக்கினாராம் பெரியவர்.

திருவானைக்கா மடத்தில் தாய் வழி பாட்டனார் மடத்து அத்யாபகராக பணியாற்றி வந்திருந்த காலம் அது. அவர் மூலம் எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்து, பையனுக்கு துணை, தனிமை, பிரிவு தெரியாமல் நல்ல உணவு, என்று எல்லாவற்றிற்கும் ஏற்பாடு செய்து விட்டு, பெரியவாளிடம் உத்தரவு கேட்கக் காத்திருந்தார் மகாதேவ ஐயர். பாவம், பிற்காலத்தில் தன் மகன், தனிமை, தளர்வு, ஏதுமின்றி ஊண் உறக்கமின்றியே வாழ்நாள் முழுவதும் பிறருக்காகவே அர்ப்பணிக்கப் போகிறான் என்று அன்று அவர் அறிவாரா ? தமது தீர்மானத்தின்படி ஒரு சுபதினத்தில் சந்தர்ப்பம் வாய்த்ததும் பெரியவாளை சந்தித்து தமது அபிலாஷையை வெளியிட்டார். அதுவே அவருடைய முதல் சந்திப்பு !

அப்போது பெரியவாள் காமாக்ஷியம்மன் கும்பாபிஷேகத்துக்காக காஞ்சீபுரம் வந்துகொண்டிருந்த சமயம். பெரிய

வாளிடம் மஹாதேவய்யருக்கு பிடிமானம் ஏற்பட்டது ஒரு ருசிகரமான விஷயமாதலால் அதை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும்.

சந்நியாசிகள் வாகனத்தில் போகக்கூடாது. மேனுவில் பெரியவாள் போவதை ஆக்ஷேபித்த காலம் அது. சுவாமி களே முழுக்க முழுக்க ஒதுக்கியே வந்துள்ளவர்களில் மகாதேவ ஐயரும் ஒருவர். அதே காரணத்தை ஒரு குறை யாகக் காட்டி தஞ்சையில் சில கிராமங்களில் பெரியவர்கள் பவனி வரும்போதும், முகாம் போடும்போதும் யாரும் தரிசனம் செய்ய வரவில்லையாம். கணபதி அக்கிரகாரத்தில் வெகு நாட்கள் இக்கொள்கை கடைப்பிடிக்கப்பட்டதாகத் தெரிகிறது. பண்டிதர்கள், சாஸ்திரீய விற்பன்னர்கள் நிறைந்திருந்த காலம், ஒவ்வொன்றையும் அலசி, ஆராய்ந்து பார்த்து, நேர் வழி, சாஸ்திர வழி. தர்ம வழி என்றால்தான் செயல்படுவார்கள். பெரும்பாலான மக்கள் இவ்வாறு வாழ் வதை, தர்மம் காக்கும் பொறுப்பை மேற்கொண்டுள்ள ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள் மிகவும் பாராட்டினார்களே தவிர, தமது சீடர்கள் தம்மை அலட்சியப் படுத்துவதாக எடுத்துக்கொள்ள மாட்டாராம்! ஸ்ரீ பெரியவர்களின் உதார குணத்தையும், சாஸ்திர ஞானத்தையும் உணர்ந்து நாளடை வில் தங்கள் கொள்கைகளை ஸ்ரீ பெரியவர்களுடைய கருத்துக் கேற்ப மாற்றி அமைத்துக் கொண்ட பக்தர்கள் பல்லாயிரக் கணக்கானவர்கள் என்பதை நாடு அறியும்.


மணலூர் பேட்டைக்கு இதே கொள்கையோடு இருந்த மஹாதேவய்யருக்கும் பெரியவர்கள் விஜயத்தின்போது வாழ்க்கையில் அவர் கொண்டிருந்த அபிப்பிராயத்துக்கே திருப்பம் ஏற்பட்டது. அன்றுதான் பெரியவாளிடம் இவரு டைய பிரேமை கலந்த கவனம், காந்தம் இரும்பைக் கவரு வதுபோல் இழுக்கப்பட்டது.

பிறகு ஒரு நாள் விழுப்புரம் முகாம்போது, பெண்ணாற் றங்கரையில் ஸ்நாநம் செய்து திரும்பி வந்து கொண்டிருந்த

# ஆத்ம போதம்

அஹமாகாசவத் ஸர்வ பஹிரந்தர்கதோச்யுத :
ஸதா ஸர்வஸம : சுத்தோ நிஸ்ஸங்கோ நிர்மலோசல : 35

நித்ய சுத்த விமுக்தைகம் அகண்டானந்தம் அத்வயம்
ஸத்யம் ஞானம் அனந்தம் யத் பரம் ப்ரஹ்மாஹமேவ தத் ॥ 36



★

நான் (ஆத்மா) ஆகாயம்போல் எவ்விடத்தும் அகமும் புறமும் நீக்கமற நிறைந்து நிற்பது. நிலைபெற்றது. எங்கும் சமநிலையில் உள்ளது. நித்ய பரிசுத்தமானது. ஒன்றிலும் ஒட்டாதது. தோஷமற்றது. அசைவற்றது.

எப்பொழுதும் பரிசுத்தமானதும், பந்தமற்றதும், எங்கும் எக்காலத்தும் நிறைந்ததும் இரண்டற்ற ஒன்ருனதும், மாறுபடாத உண்மையானதும், அறிவு மயமானதும், அளவிட முடியாததும், எதுவோ அந்த பரப்ரஹ்மமே நான்.

★

"The secret of renunciation is renunciation of egoism and desires.

*—Swami Sivanandha.*

---

சமயம், பிராம்மணர்களே தோள் தூக்கி மேனாவில் வந்து கொண்டிருந்தார்கள் பெரியவர்கள். தன்னையறியாமலேயே மஹாதேவய்யரும் ஓடிப்போய் மேனாவைத் தூக்குபவரோடு தோள் கொடுத்தார். 'சீசர் சென்றான்! வென்றான்' என்பர். இங்கு மஹாதேவய்யரோ வெல்லப்பட்டார்! மாலை நாலரை மணியாகியது பூஜை முடிய. பிறகு தீர்த்த பிரஸாதம் வழங்கி பெரியவாள் பிக்ஷைக்கு போக 5-மணியாகிவிட்டது. இந்நிகழ்ச்சிகள் மகாதேவய்யர் மனதைத் தொட்டது. 'நாமும் இப்படி இருக்கவேண்டும். பீடத்தில் அமர்ந்து பூஜை செய்யவேண்டும்! இனி எப்படி அது சாத்தியம்? எல்லோருக்குமா அது கிட்டுகிறது? பலகோடி ஜன்மம் எடுத்து, பல கோடி மக்களிடையே யாரோ ஒரு பாக்கியசாலிக்கு ஏதோ ஒரு ஜன்மத்தில் இந்த மகோந்நத பீடாதிபத்யம் கிடைக்கிறது! உம்: முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவதற்கு உரிமை உண்டு! அது கிடைப்பதும் கிடைக்காததும் வேறு விஷயம்! ஆசைப்படும் உரிமை இன்று உலகத்தில் எந்த நாட்டிலும் எந்த பிரஜைக்கும் பறிக்கப்படவில்லை. மன வெழுச்சிகள், உணர்ச்சிகள் இவற்றிற்குக் கட்டுப்பாடும் விதிக்கப்படவில்லை! விதிக்கவும் முடியாது. உணர்ச்சி வசமாகி, அவ்வுணர்ச்சி வெள்ளத்தில் உடலை அழுத்தி அழுத்தி எடுத்த ஐயருக்கு முயற்சி திருவினை ஆகியது. அந்தத் தூய்மையான ரத்தத்தை ஆதாரமாக்கிக் கொண்டு அவர் கட்டிய மனக்கோட்டை, அவர் கண்ட பகற்கனவு அவருடைய புதல்வன் ஸுப்ரஹ்மண்யம் மூலமாக பிற்காலத்தில் பலிதமாகப் போகிறது என்பதை அவர் அன்று உணர முடியாது அல்லவா ?

* * *

தன் மைந்தனை பாடசாலையில் சேர்க்க அனுமதி பெற நிர்வாகிகளிடம் வந்து ஐயர் தவமிருந்தார்! இதை அறிந்ததும் பெரியவர்கள் ஐயரை அழைத்து "காஞ்சிபுரத்துக்கு பையனை அழைச்சிண்டு வா! அம்பாள் சந்நதியில் ஆரம்பிச்

சுடலாம். அது தான் ச்ரேயஸ்கரம்; அதுதான் ச்ரேயஸ்கரம்'' என்று இருமுறை அனுக்கிரஹம் செய்தார்கள்.

''பையன் புதுசு...தனிமையை உணரக் கூடாது...அதற்காக...என்று: ''புதுசுதான் புதுப் பெரியவாளாகப் போகிறார் தனிமைதான் பிற்காலம் கூட்டமாகிறது'' என்பதை அறியாத அந்த தந்தை இழுத்தார். ஆனால் தொடர்ந்து அற்புதம் நிகழ்ந்தது.

திருவானைக்காவிலிருந்து தாய்வழி தாத்தாவை முன் கூட்டியே வரவழைத்திருந்தார் சுவாமிகள். இது மஹாதேவய்யருக்கு ஆச்சரியத்தை அளித்தது. காஞ்சியில் காமகோடியின் சந்நிதியில் தன் மைந்தனை அர்ப்பணித்தார் மஹாதேவய்யர், தன்னை அறியாமல்—வித்யாப்யாஸம் செய்ய என்று எண்ணி! பாவம்! புலிவாய்பட்ட மிருகம் போல், சந்நியாசி பார்வை பட்ட அச்சிறுவன் கொட்டியே குளவியாக்கும் வண்டுபோல், சந்நியாசியாகத்தான் போகிறான் என்பதைக் காணாத பேதை தந்தை—அல்ல—பாக்கியவான்! அத்தந்தையைப் பேட்டி கண்டபோது, ''விச்வாமித்ரரிடம் இராமனை ஒப்புவித்த தசரதன்போல் பெரியவாளிடம் ஒப்புவித்தேன். தசரதன் நிலை எனக்கும் அன்று அருளப்பட்டது என்பதை நான் அறியேன். வேதாப்யாஸத்துக்கு திருவிடை மருதூர் பாடசாலைக்கு வித்தியார்த்தியை வித்யா குரு கூடவே அழைத்துச் சென்றதைப் பார்த்தபோது இராமாயண கதாபாத்திரம் தான் ஞாபகத்துக்கு வந்தது! தசரதன் கண்ணீர் விட்டதாகக் கதையில் சிலர் கூறுகிறார்கள். ஆனால் நான் கண்கலங்கவில்லை. கடமையைச் செய்து முடித்த வீரன்போல் திரும்பினேன்'' என்றார்.

* * *

இங்கே இராமாயண சம்பவம் ஒன்றைப் பார்ப்போம்,

உடன் அழைத்துவந்த பச்சிளம் குழந்தை இராகவன் புல்தரையில் உறங்கிக் கொண்டிருக்கிறான்: ஆனால் அந்த

மாமுனி விச்வாமித்ரருக்குதெரியுமல்லவா! அது தர்மஸ்தா பனம் செய்ய வந்த சிசு வென்று. தசரதன் வேண்டுமானல் குழம்பலாம். பாசத்தால் மனம் பதை பதைக்கலாம். திரிகால ஞானியான விச்வாமித்ர மகரிஷி, அவதார மகி மையை எப்படி அறியாமல் இருப்பார்?

இந்த பரமரகஸ்யத்தை மகரிஷி வசிஷ்டரும் அறிந்து, சம்மதித்து, தசரதனுக்கு புத்திமதி கூறி ராமன் விச்வாமித் திரரோடு கானகம் ஏக உதவி உலகம் போற்றும் மகா காவியத்திற்கு—இராமாயணம்— பிள்ளையார் சுழி போட் டார்.

அதிகாலையில் விச்வாமித்ரர் சுப்ரபாதம் பாடி எழுப்புவ தாகக் கூறி காவியம் படைக்கிறுர் வால்மீகி!

கௌஸல்யா ஸுப்ரஜா ராம பூர்வா
ஸந்த்யா ப்ரவர்த்ததே
உத்திஷ்ட நரஸார்த்தூல உத்திஷ்ட
கருடத்வஜ உத்திஷ்டோத்திஷ்ட கோவிந்த
த்ரைலோக்யம் மங்களம் குரு.

['ஹே ராம! என்ன இன்னும் உறக்கமா? கிழக்கே வானம் வெளுத்துவிட்டதப்பா? நரச்ரேஷ்டனே, எழுந்திரு! கருடக் கொடியோனே எழுந்திரு! கோவிந்தா!' மூவுலகுக்கும் மங் களம் செய்யப்பா' என்று ராமனை மனிதனுகவும் தெய்வ மாகவும் மாறி மாறிப் பார்த்து அவதார ரகசியத்தை அறி வுறுத்தி, தமது ஞானத்தை, காட்டியும் காட்டாமலும் அந்த தெய்வ சந்நிதியில் நாடகமாடினுர்.]

* * *

இராம காவிய சம்பவத்தைப் போல்தான் காலடி யாகிய ஸ்ரீ காஞ்சியிலும் நடந்தேறியது. காலடித் தோன் றல் காலடியே வழிவழியே வந்த மரபில் புதுத் தோன்றலே அப்பெரியோன் "கரிய செம்மல் ஒருவனை தந்திடுதி" என்று

தசரதனிடம் கேட்ட விச்வாமித்ரர் போல் மஹாதேவய்ய ரிடமிருந்து 'அரிய செம்மல் ஒருவனை தந்திடுதி' என்று பெற்றனன். அகிலமெல்லாம் மகிழ வேதமும், கீதையும், முழங்க தர்மம் தலைநிமிர்ந்து நடைபோட தளிர்நடை போடுகிறான் பாலகன், அப் பெரியோன் அடி வழியே!

"கோ குருர் அதிகத தத்வ:
சிஷ்யஹிதயோதஹ் ஸததம்" (ப்ரச்னோத்தரமாலிகா)

என்கிறார் ஆதி சங்கரர்! அவ்வழி வந்த இந்த சங்கரரும் இந்நிகழ்ச்சியில் பங்குகொள்ளும் போது சிஷ்ய ஹிதம் ஒன்றையே மனத்தில் கொண்டவர் என்று கூறுவது மிகையாகாது.

ஆசாரிய கடாக்ஷத்தின் பெருமையை யாரால்தான் வர்ணிக்க முடியும்! ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தத்தின் பெருமையைப் பேசிய ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன்.

"ஏகயைவ குரோர் த்ருஷ்ட்யா த்வாப்யாம் வாபி லபேதயத்
நதத் திஸ்ரு பிரஷ்டாபி: ஸஹஸ்ரேணாபி கஸ்யசித்"

[ஆசாரியனுடைய புறக் கண்ணாலோ அல்லது அகக் கண்ணும் சேர்ந்த இரண்டினாலோ கடாக்ஷ வீக்ஷண்யம் படுவதாலோ, இவன் வ்ருத்திக்கு வரவேண்டும் என்று அனுக்கிரஹிப்பதால் ஒருவனுக்கு கிடைக்கும் முழுப் பயனை ப்ரம்மா விஷ்ணு, ருத்ரன் முறையே மும்மூர்த்திகளும் எட்டுகண்களாலும், மூன்று கண்களாலும், ஆயிரம் கண்களாலும் பார்த்தால்கூட கொடுக்க முடியாது!]

"ஆஸ்திக்ய வாந் நிசிதபுத்தி: அநப்யஸூயு:
ஸத்ஸம்ப்ரதாய பரிசுத்தாத்மா ஸதர்த்தீ
ஸங்கேதபீதிரஹித: ஸத்ருணேஷ் வஸக்த:
ஸத்வர்த்தநீ மநுவிதாஸ்யதி சாச்வதீம் ந:

'வேதமே பிரமாணமாக நம்பி வாழ்பவராயும், கூர்மையான அறிவுடையவராயும், பொறாமையற்றவராயும்,

ஆசாரியன் உபதேசித்த நல்ல ஸம்ப்ரதாயத்தின் பெருமை யால் மனத் தூய்மை பெற்றவராயும், மேம் பொருள்களையே விரும்புபவராயும், அற்ப விஷயங்களைத் துரும்பென மதித்து அவற்றை லவலேசமும் நினைக்காதவராயும், நித்தியமாயும், அழிவில்லாததுமான வழியை பின்பற்றப் போகிறுர்' என்று முக்காலும் உணர்ந்த அக்காஞ்சி மாமுனி மட்டும் அறியானே? அதனுல்தான் விரும்பிப் பெற்றுன் அப் பச்சிளம் பால் மணம் மாறு பாலகனை! பாம்பின்கால் பாம்புக்குத் தெரியும் என்பர். சாதுவான சந்நியாசிக்குத் தெரியும் சாது லக்ஷணம்: உலக வியவகாரங்களில் உழலும் நாம் என்ன காணமுடியும்? எதிர்கால அறுவடையை, பலனை, விதையைப் பார்த்து அறியும் உழவன் போல குழந்தையைக் கண்டு ஆய்ந்து ஆதரித்தார் குரு தேசிகன். எது இருந்தால் என்ன பயன்! அந்த குருதேசிகன் கடாக்ஷ வீக்ஷண்யம் மட்டும் இல்லையேல். அதுபோல் சிஷ்யனுக்கு குருவின் பாதார விந்தங்களில் பக்தியின்றேல் என்ன பயன்! நம் பாலகரோ குருபக்திக்கு லக்ஷணம் வகுத்தார். பூரணமான பலனைப் பெற்றுர்.

* * *

"சரீரம் ஸு॒ரூபம் ததா வா கலத்ரம்
யசஸ்சாரு சித்ரம் தனம் மேரு துல்யம்
மனஸ்சேன்ன லக்னம் குரோரங்ரிபத்மே
தத: கிம் தத: கிம் தத: கிம் தத: கிம்"

'அங்க லக்ஷணம், அழகு, மேருநிகரான செல்வம் - எது இருந்தால் என்ன? குருவின் பாதத்தில் பக்தியின்றேல் என்ன பயன்' என்ற ஆதி சங்கரர் பரம்பரை வளர இருள் நீக்கி கிராமத்தில் பிறந்த சிசு வளர்ந்து பொறுப்பேற்கப் போகிறது.

# 6. குருவின் பிடியில்

தமக்குப் பின்னர் காமகோடி பீடத்தை அலங்கரிக்க தகுந்த சிஷ்யரை நியமனஞ் செய்து, அவருக்குத் தரவேண்டிய சாஸ்திரீய பயிற்சிகள் எல்லாவற்றையும் தாமே நேரில் தந்துசிறந்த சிஷ்யனாக ஆக்கவேண்டும் என்று வெகுகாலமாக பெரியவாள் மனதில் விருப்பம் இருந்து வந்திருக்கிறதை பூர்த்தி செய்யுங்காலம் நெருங்கியது. 1954ம் வருடம் மார்ச் மாதம் 19உ முதல் தொடங்கி 22ந் தேதி வரை இப்புனித சந்நியாஸ ஆச்ரமச் சடங்கு புதுப் பெரியவர்களுக்கு காஞ்சீபுரத்தில் நடந்தேறியது. ஸ்ரீமடத்துச் சரித்திரத்திலேயே முக்கியத்வம் வாய்ந்த இம்மஹோன்னத விழாவைக் காண பாக்கியம் செய்த பல்லாயிரக்கணக்கான புண்ணியவான்கள் காஞ்சிபுரத்தில் நெருக்கியடித்துக்கொண்டு குழுமியிருந்தனர்.

பூர்வாங்கமாக ஸ்ரீபெரியவாள் தமது குருபீடத்தை கலவை சென்று ஆத்மீக கலவை செய்துகொண்டு, அம்பிகாபுரம் என்ற காஞ்சிபுரத்தின் அருகேயுள்ள அதிஷ்டானம் ஒன்றிலும் மானஸீக உறவாட்டம் கண்டு, 'கருணாசாகரமாய் காமாக்ஷியே நடந்து வருகிறுளோ' என அனந்த சாகரமென்னும் புராதனமான தடாகத்தின் கரையிலுள்ள அச்வத்த விருக்ஷத்தின் (அரச மரம்) அடியில் உள்ள மண்ணை கிரஹித்துக்கொண்டு ஸ்ரீமடத்திலுள்ள முதல் ஆசாரிய புருஷரான சுரேச்வராசாரியரின் மூர்த்திக்கு ஆராதனைகள் செய்தார். அச்வத்த மரத்தின் அடியே மண்ணை கிரஹித்ததைக் கண்ட கண்கள், துறவிக்கு அரசனும் மண்ணும் எல்லாம் சமம் (துறவிக்கு வேந்தனும் துரும்பு) என்பதைக் கண்டானந்தித்தன. பின்னர் காமாக்ஷியன்னையையும் அவளது திருக்குமரனின் கோஷ்டத்தையும் தரிசித்துக்கொண்டு ஏகாம்பரேச்வரர் ஆலய மாமரத்தையும் மடத்தின் ஆஸ்

தான தேவி திரிபுர சுந்தரி சமேத சந்திரமௌளீச்வரரையும் பிரார்த்தனை செய்து கொண்டார்கள்.

அதே சமயம் உபதேசம் பெறும் பிரதம சீடர் வேத விதிப்படி தேவ, ரிஷி, பித்ருக்களுக்குரிய எல்லா கிரியைகளை யும் செய்து முடித்து முதல் நாள் இரவு முழுவதும் கண் ணுறங்காது தியானத்தில் ஈடுபட்டு இருந்தார்.—பயம் ஒரு புறம்; பக்தி ஒரு புறம்; ஆனந்தம் ஒரு புறம்; இனந்தெரியா மோனம் ஒருபுறம்! எதிர் காலத்தில், புகப்போகும் ஆசிரம பீடத்தின் பெருமையை நினைத்து, தான் அவ்வள்வு உயரிய நிலையை அடையவேண்டுமே என்ற கவலை ஒரு புறம்—என்று மனம் ஒரு பெரிய காந்த சக்தியின் எல்லைக் கோட்டுக்குள்ளே மாட்டப்பட்டவராய், அதிலிருந்து வெளிவர இயலாதவ ராய் தன் வயமிழந்து தன்னை யறியாமலேயே ஈர்க்கும் அப்பெருஞ் (பெரியவாளின்) சக்தியிலேயே தியானத்தில் ஆழ்ந்தார்.

மறுநாட்காலை ஆதவன் உதயம் ஆகும்போதே ஏதோ புதுச் சோபையுடன் காஞ்சிமாநகர் விளங்கியது. குதூகலத் துடன் வீடு தோறும் இதே பேச்சு. அதே சமயம் இளைஞர் ஒருவர் துறவியாகிறாரே என்று மனம் வருத்தம் கொண்ட தாய்மார்கள், கூடவே பாக்கியம் செய்த துறவியைப் பெற்ற அம்மாதாவை போற்றிய வண்ணம் இருந்தனர்! நகரமெங் கும் விழாக் கோலமே பூண்டிருந்தது. காலையில் 9 மணிக்கு எட்டு தண்டி சந்நியாசிகளும் வேத விற்பன்னர்களும், உபநிஷதம் முழங்கி பக்தி மணம் வீசும் பாடல்களுடன் பக்த கோஷ்டியும் பின்தொடர ஸர்வ தீர்த்தக் கரையிலுள்ள முக்தி மண்டபத்தை அடைந்தார் பிரதம டர்.

குருவினது வருகையை எதிர்நோக்கி இடுப்பளவு நீரில் நின்றுகொண்டிருந்தார் இளைஞர், துறவியாகப் போகும் ஸ்ரீ ஸுப்ரமண்யம். ஸ்ரீவிச்வேச்வரர் சந்நிதியில் மஹாவாக்ய உபதேசத்தைப் பெரியவர்களிடமிருந்து பெற்று 'ஜய உன்னை மட்டும் அல்ல, இந்திர, ஸரஸ்வதி முதலிய எல்லாவற்றையும்

வெற்றிகொள்' என்று பெரியவர்கள் ஆசீர்வதித்ததுபோல் "ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி" என்னும் தீக்ஷா நாமத்தை அளித்தார். குருபகவான் குமாரக் கடவுளின், ப்ரம்மண்யத் துக்கு பொக்கிஷமான ஸுப்ரஹ்ம்மண்யம் என்று பெயர் தாங்கியவர் ப்ரம்மமயமானர்! உலக பாசபந்தங்களை அகற்றி னர்! தூய்மைக்குத் தூய்மையாக, வாய்மைக்கு இலக்கணம் வகுத்தாற்போல் அப்பச்சிளம் துறவியின் முகம் பளீரென ஒளி மயமாய் சுடர் விட்டது! கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர் என்றுதான் அக்காட்சியை வர்ணிக்க வேண்டும்.

வைபவம் முடிவுற்றதும் ராமன் பின்தொடர நடை போடும் மஹரிஷி விச்வாமித்திரர் போல் புதுப்பெரியவர்கள் பின் தொடர 'ஜய ஜய சங்கர! ஜய ஜய சங்கர' என்று பக்தி யோடு கூவிய பக்தர்கள் வழிநடை நடந்த ஸ்ரீ பெரியவர்கள் தரிசனம் கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. பூஜை சந் நிதியை ஸ்ரீ மடத்தில் அடைந்ததும் தமது பிரதம சிடருக்கு ஒரு ஸ்படிக மணிமாலையும், ருத்ராட்ச மாலையும் அளித்து பெரிய பீதாம்பரம் ஒன்றையும் அனுக்கிரஹம் செய்தார்கள். 'பீதாம்பரதாரியான நாராயண ஸ்மரணத்தில் ருத்ராட்ச மாலையின் ஜபத்தால் மனம் ஸ்படிகம் போல் ஆகிவிடுவாய்!' என்று சொல்லாமல் சொல்லியது போல் இருந்தது அக் காட்சி. எல்லோருக்கும் பிரசாதம் கொடுத்தருள இரவு மூன்று மணியாகியது எனின் ஜனத்திரளின் அளவு ஒருவாறு ஊகிக்க முடியும். உபதேசம் வழங்குவதற்கு பூர்வாங்க தினத்தன்று நமது மனத்தினை விட்டு அகலாதவாறு பெரிய வர்கள் உபன்யாசம் ஒன்றை நிகழ்த்தினர்கள். அதன் ஒவ்வொரு அக்ஷரமும் ஆஸ்திக அன்பர்களின் மனத்தில் பசு மரத்தாணி போல் பாயக்கூடியது.

"எதிர் காலத்தில் இந்தப் பீடத்தை அலங்கரிக்கத்தக்க ஓர் ஸ்வாமிகளுக்கு புதிதாக ஆச்ரமம் வழங்க ஏற்பாடுகள் செய்துவரும் இச் சமயத்தில் உங்களுக்கு சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். தற்காலம் இருந்து வரும் நிலையில்

# ஆத்ம போதம்

ஏவம் நிரந்தராப் யஸ்தா ப்ரஹ்மை வாஸ்மீதி வாஸநா
ஹரத்ய வித்யா விக்ஷேபான் ரோகானிவ ரஸாயனம் ॥ 37
விவிக்த தேச ஆஸீனோ விராகோ விஜிதேந்த்ரிய:
பாவயேத் ஏகமாத்மாநம் தமநந்த மநன்ய தீ ! ॥ 38



(தைல தாரைபோல்) இடைவிடாது பழக்கம் செய்வதால் "நான் ப்ரஹ்மமாகவே உள்ளேன்" என்ற எண்ணம் உறுதிப்படுகிறது. மருந்து பிணியை நீக்குவதுபோல் இந்த எண்ணம் உலக விஷயங்களிலிருந்து மனத்தை நீக்கும்.


ஏகாந்தமான இடத்தில் உட்கார்ந்து கொண்டு ஆசைகளை அகற்றி, ஐம்புலன்களை அடக்கி வேறொன்றிலும் புத்தியை செலுத்தாமல், எல்லையில்லா பரம் பொருளை தியானம் செய்ய வேண்டும்.

ARISE! AWAKE!! STOP NOT TILL the Goal is reached.

—*Swami Vivekananda*

# ஆத்ம போதம்

ஆத்மந்யே வாகிலம் த்ருச்யம் ப்ரவிலாப்ய தியா ஸுதீ:
பாவயேத் ஏகமாத்மானம் நிர்மலாகாசவத் ஸதா: ॥ 39
ரூப வர்ணாதிகம் ஸர்வம் விஹாய பரமார்த்தவித்
பரிபூர்ண சிதானந்த ஸ்வரூபேணா வதிஷ்டதே ॥ 40



★

ராக த்வேஷாதிகள் அற்ற பரிசுத்தமான மனமுள்ளவன் தன் புத்தியால் ஆத்ம ஸ்வரூபத்தில் எல்லாப் பொருள்களும் மறைந்து போகும்படி செய்து ஏக வஸ்துவான நிர்மலமான ஆகாயம் போன்ற ஆத்மாவை தியானிக்க வேண்டும்.

ப்ரஹ்மத்தை அறிந்தவன், வடிவம், நிறம், ஜாதி முதலான எல்லாவற்றையும் விட்டு விட்டு பரிபூர்ணமான ஞான ஆனந்த நிலையில் இருப்பான்.

★

The Success of Yogis differs according as the means they adopt are mild, medium, or intense.

—*Patanjali Yoga Sutra.*

---


கிராமிய சூழ்நிலையிலேயே தங்கியிருந்து, பல்வேறு துறை களில் தேர்ச்சி பெற்ற அறிஞர்களைக் கொண்டு பிரதம சீட ருக்குப் பாடங்களை பயில்வித்து புதுப் பெரியவராக்கிய பணி மகத்தான பணியாகும்.

இக்காலங்களில் ஸ்ரீ மடத்துக்கு வரும் பக்தர்கள் புதுப் பெரியவரை தரிசனம் செய்யக் கூட பெரியவர்களிடம் அனுமதி பெறவேண்டியிருந்தது. பாடத்துக்கு இடைஞ் சலாகும் எனக் கருதியே இவ்வாறு தடைகளையும் கட்டுப் பாட்டையும் விதித்து தம்பணியை செவ்வனே நிறைவேற்றி மனமகிழ்வுற்றார். சிறிது சிறிதாக மடத்துக் காரியக் கிரமங் களிலும் பூஜையிலும் ஈடுபடச் செய்தார். இளந்துறவி வேந்தரது மனோநிலை தான் எப்படி யிருந்திருக்கும் என நாம் ஊகித்துப் பார்க்கலாம். பெரியதொரு பீடத்தே அமரப் போகிறோம் என்ற பயம், பக்தி, திகில் ஒருபுறம். அது நீங் கியதும் பெரியவாள் இருக்கும் அதே பீடத்தில் தாம் எப்படி நிர்வகிப்போம், எப்படி தவறு நேராமல் குருவினுடைய திருப்தியை சம்பாதிப்போம் என்று கவலையும் இல்லாம லிருக்கமுடியாது. எல்லாவற்றையும் அந்த பாத மந்திர தியானத்தாலேயே படிப்படியாக வென்று ஏறி, தனது பெய ருக்கேற்ப ஜயத்துடன் முன்னேறினார் ஸ்ரீ ஜயேந்திர சரஸ் வதி சுவாமிகள்.

இந்த மகத்தான முன்னேற்றத்துக்குக் காரணம் குரு கடாக்ஷம் தான். ஸ்ரீபெரியவர்களுக்குக் கிடைக்காத, தனது குருவுடன் கூடவே இருந்து பயிலும் வாய்ப்பும், பாக்கியமும் ஸ்ரீ புதுப் பெரியவர்களுக்குக் கிடைத்தது. ஒரு குழந்தை தனது தந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு நடந்தால் தவறி விழ வாய்ப்பு உண்டு. ஆனால் தந்தை குழந்தையின் கரத்தைப் பிடித்துக் கொள்ளும் போது தவறுவதற்கே இட மற்றுப் போகிறது! இவ்வாறே குருவினுடைய பிடியில் சிக்கிய நமது புதுப் பெரியவாள் மின்னல் வேகத்தில் முன்னேறியது ஆச்சரியமில்லை.

# ஆத்ம போதம்

ஞாத்ரு ஞான ஞேய பேத: பரே நாத்மநி வித்யதே
சிதானந்தைக ரூபத்வாத் தீவ்யதி ஸ்வயமேவ ஹி 41
ஏவ மாத்மாரணெள த்யாந மதநே ஸததம் க்ருதே
உதிதா வகதி ஜ்வாலா ஸர்வாக்ஞாநேந்தனம் தஹேத் ॥ 42



அறிவோன், அறிவு, அறியப்படும் பொருள் என்ற வித்தியாசங்கள் ஆத்மாவிடத்து இல்லை. அது ஞான ஆனந்த ஸ்வரூபமானதால் தானே பிரகாசிக்கிறது.

இவ்வாறு அந்தக் கரணமென்னும் அரணிக் கட்டையில் த்யானமென்ற கடைதலை விடாமல் தொடர்ந்து செய்து வந்தால் அதிலிருந்து உண்டான ஆத்மஸாக்ஷாத்காரம் என்ற நெருப்பு அக்ஞானமாகிற விறகினை எரித்து சாம்பலாக்கிவிடுகிறது.

Go on doing good, thinking holy thoughts continuously; that is the only way to Suppress base impressions.

—*Swami Vivekananda.*

# 7. தருமமிகு சென்னையில்

1957-ம் ஆண்டு சென்னை மாநகர்எங்கும் அலைவீசியது. அலைகடல் வீசும் அலை ஒருபுறம், அருட்கடல் வீசும் ஆன்மீக அலை ஒருபுறம். ஜனக்கடல் எழுப்பும் ஆரவார அலை ஒரு புறம். நமது பெரியவர்கள், புதுப் பெரியவர்கள் இருவரும் சென்னைக்கு வருகை தந்து, மக்களை இன்பக் கடலில் ஆழ்த் தினர். இவ்விரு பெருங்குரவர்களையும் காண்பதும், அவர் களின் பூஜை தரிசனம், உபன்யாசம் கேட்பது என்பதும் ஜனங்களின் அன்றாட நிகழ்ச்சியில் ஒன்றாகியது.

அலுவலகங்களிலிருந்து அலுத்துப்போய் வீடு திரும்பி வரும் பல்லாயிரக் கணக்கான மக்கள் சாந்தியும் புதுத் தெம் பும் பிறக்கும் அன்னாருடைய அறிய அமுத மொழியில் பரம திருப்தியுடன் செல்வர். உடல்தான் அவரவர் இல்லத்துக் குச் செல்லும். எல்லா உள்ளங்களும் சமஸ்கிருத கல்லூரி யிலேயே அக்கருணா சாகரத்தில் கரைந்து போயிருக்கும். இது அன்றாடம் காணும் அனுபவ உண்மையாயிற்று.

நாகரிக முன்னேற்றம் என்று அறியாமையில் ஆழ்ந்து முன்னேறிய ஆயிரமாயிரம் குடும்பங்களுக்கும், அக்குடும் பத்து இளைஞர்களுக்கும் அகத்தே ஒரு பெரும்புரட்சி உரு வாக்கியது இம் மஹா மந்திர மவுன உபதேச உபன்யாசம்! ஆம், அன்றாடம் மாலையில் சந்திர மௌளீச்வரர் பூஜை யானதும் அமைதியே-இல்லை, அருளே-அல்ல - கருணையே எல்லாம் கலந்த வடிவாக ஆசாரிய புருஷர் வருவார். ஒலி பெருக்கியின் முன் அமருவார். ஆயிரக் கணக்கான மக்கள் கூடியிருக்கும் அப்பெரும் இடத்தில் ஊசி விழுந்தால் சப்தம் கேட்கும் நிசப்தம் நிலவும். அதுதான் மவுன உபதேசம். இக்கட்டம். சில நிமிட நேரம் நீடிக்கும்: அவ்வளவு ஜீவாத் மாவும் பரமாத்ம ஸ்வரூபத்தில் லயப்பட்டுப் போயிருக்கும்,

மந்திரம் மனத்தே பதிந்த நிலையில் ஆழ்ந்து இருக்கும் நிலை இதுதான்.

பிறகு உபதேசம்—உபன்யாசம். எல்லாவற்றிற்கும் வேதத்திலே என்றுதான் ஆரம்பம்! அல்லது இடை அல்லது கடைசியில் இருக்கும். 'ச்ருதி சாஸனாத்' என்று எல்லாவற்றிற்கும் ச்ருதியே ப்ரமாணமாக உபமான உதாரணங்களோடு அன்றாட நடைமுறைக்கு ஒத்துவருமாறு அவ்வறிவுரைகள் அமையும் அழகே அழகு. தனித்தனித் துறையிலே பட்டங்களும் மாலைகளும் சூடியவர்கள் கூட அவரவர் துறையை பெரியவாள் எடுத்துச் சொல்லும்போது அதில் உள்ள நயத்தை, ஆழ்ந்த அறிவினைக் கண்டு வியக்காத நாளில்லை. இது பலரை பயத்துடன் பக்தி கொள்ளச் செய்தது. நடமாடும் பல்கலைக் கழகம் எனவே எத்துறையிலும் அத்துறையினை ஆழ்ந்து அலசியபடியே திகழும் அப்பெருமானின் பேச்சுக்கள்—அல்ல மந்திர மொழிகள்—

"நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த
மறை மொழிதானே மந்திரம் என்ப" (தொல்காப்பியம்)

மஹான்கள், தவச்ரேஷ்டர்கள், ரிஷிகள், தமது மனத்தின் அடித்தளத்தே நிறைந்த அமைதியின் ஒன்றிய அமுத நிலையிலே எழும் அரிய த்வனிகளை சீரிய முறையில், வளரும் சமுதாயம் முன்னேறவேண்டி அவ்வப்போது வெளியிடுகிறார்கள். அதுவே மந்திரம். இதுவே ஈண்டும் உண்மையாகிறது அன்றோ? கலிகாலக் கொடுமையினால் வயிற்றுப்பாடே பெரும் பிரச்னையாகக் கழித்துக்கொண்டு காலத்துடன் போட்டி போட்டுக் கொண்டு, நமது மதம், அனுஷ்டானம், அதன் பலம் முதலியனவற்றை மறந்து நிற்கும் மக்களை நல்வழிப்படுத்த இம்மஹானின் மனதிலே எழும் இம்மொழிகள் மந்திர மொழிகள் அல்ல என்பதை எவரால் துணிந்து கூற இயலும்?

இந்நாட்களிலே புதுப் பெரியவர்களுக்கு ஒரு அரும்பணி (கடுமையான அப்பியாசம் என்றும் சொல்லலாம்)யை பெரிய

வர்கள் கொடுத்திருந்தனர். பூஜை அறையில் தூபதீபங்களை திரியிட்டு ஏற்றி பணியாட்கள் செய்த அவ்வளவையும் புதுப் பெரியவர்கள் செய்து தர, அதை அம்முதிய ஆசான் அலை அலையாக ஆரத்தி செய்து வைப்பர். இப்பணியைக் காணவே ஆயிரம் கண்கள் போதா! இத்தகைய அதியற்புத காட்சியைக் கண்டவர் பூர்வபுண்ய சாலிகள்.

இப்பணியில் ஈடுபட்ட நேரம்போக மற்றைய நேரங்களில் பாடங்களிலேயே காஞ்சியில் போல், இங்கும் கருத்தூன்றியிருந்தார்கள் புதுப் பெரியவர்கள். ஜன்னல் வழியே தரிசனம் செய்துகொண்டு செல்லும் (அவாவினால் உந்தப்பட்டு புதுப் பெரியவர்களையும் தரிசனம் செய்யவே பலர் விழைவர்) பத்தர்களுக்கு கற்கண்டுகளை வாரி இறைத்த வண்ணம் இருப்பார். சிலநாட்களில் உபன்யாசம் செய்ததும் உண்டு. அது அவர் இறைத்த கற்கண்டுத் துகள்போலவே தித்திக்கும்!

இக்காலத்தே பெரியவர்களின் தரிசன பாக்கியத்தால் பலர் துர்பாக்கியத்தை இழந்தனர். மீசையை இழந்தோர், தலை கிராப்பை இழந்தோர், அனாசாரத்தை இழந்தோர், ஓட்டல் உணவை இழந்தோர், சினிமாவை இழந்தோர் என்று பலர் காணலாயினர். என்னே இரத்த வெள்ளமின்றி, கத்தியின்றி நடத்திய மஹா உன்னதமான அறப்போர், சீர்திருத்த இயக்கம் இது என்பது புரியும்!


தர்மக்ஷேத்திரத்திலே பாண்டவ துரியோதன யுத்தம் எழுந்தது! கீதை உபதேசம்: விளைந்தது-ஞானம்-உணர்வரிய ஓங்கு பெரு மெய்ஞ்ஞானம்.

இங்கு மனத்திலே அறத்துக்கும் அதர்மத்துக்கும் நிகழ்ந்த போர் — ஹிதோபதேசம் — விளைவு அமைதி அஞ்ஞான மாயை விலகி மெஞ்ஞானம் பிறந்ததுதான், அங்கு கீதாசாரியன் ரதத்திலே ரண களத்திலே ஞான உபதேசம் செய்தான். அதுதான் கீதையின் பெருமை! இங்கு நவநாகரீகத்திலே திளைத்துப்போய், அதிலேயே ஒன்றிய

# ஆத்ம போதம்

அருணேநேவ போதேன பூர்வம் ஸந்தமஸே ஹ்ருதே
தத ஆவிர்பவேதாத்மா ஸ்வயமே வாம்சுமாநிவ 43
ஆத்மாது ஸததம் ப்ராப்தோS ப்ய ப்ராப்தவத வித்யயா
தந்நாசே ப்ராப்தவத் பாதி ஸ்வகண்டாபரணம் யதா ॥ 44

★



சூரியோதயம் போன்ற ஞானத்தால் அக்ஞானம் என்னும் இருட்டு அழிக்கப்பட்டதும், ஆத்மா தானகவே சூரியன்போல் பிரகாசிக்கிறது.

[இதைப் படிக்கும்போது புதுப் பெரியவர்களின் ஜனனத்தையொட்டிய மூன்று கிராமங்கள்—இருள் நீக்கி. ஆதித்யபுரம், பெரிய புள்ளி—பக்தி மனத்தில் தோய்ந்துவிடும்.]

எப்போதும் அடைந்த பொருளாக ஆத்மா இருப்பினும் அடையாததுபோல தோற்றுகிறது. அக்ஞானம் விலகியதும் தன் கழுத்தில் உள்ள ஆபரணம் போல் காணப்படுகிறது.

★

All misery comes from fear; from unsatisfied desire. Man will find that he never dies and then he will have no more fear of death.

—*Swami Vivekananda.*

---

பட்டணத்திலே—நகரம் அல்லது நரகமா என்றுகூறும் இடத்திலே—இத்துறவி வந்து நிகழ்த்திய அறிவுரையினுல் நகரமாயிராது நரகமாயிருந்த "தருமமிகு சென்னை" என அன்று வள்ளலார் கூறியதை மெய்யாக்கி, மீண்டும் புத்துயிர் அளித்த பெருமை பெரியவர்களேயே சாரும் எனலாம்.

இக்காலத்திலே பழைய மாம்பலத்து சங்கர மடம் நிறுவி அங்கு பாதுகை பிரதிஷ்டையும் நிகழ்த்தினர். புதுப்பெரியவர்கள் மந்திரங்களைப் படித்து ஓத, பெரியவர்கள் அதை ஊன்றிக் கேட்கும் காட்சியை இன்றும் (புகைப்படமாக்கப் பட்டுள்ளதை) காணலாம். சிறிது காலம் இங்குமங்குமாக ஸ்ரீமடம் முகாம் மாறியபடி இருந்தது எனினும், பெரும் பகுதி சம்ஸ்கிருத கல்லூரியிலேயே கழிந்தது. வானகரம், என்னும் ஓர் இடத்தில் முகாம் இருந்த சமயம்: நகரின் எல்லைப்புறத்தே இருந்ததால் அமைதியான சூழ்நிலை. அப்போது துலா ஸ்நாநம் சமயம். பெரியவாள் கும்பகோணம் போகப் போகிருர்கள்: காவேரி ஸ்நாநம் என்று எல்லாம் பேச்சு அடிபட்ட வண்ணம் இருந்தது. பக்தியிலும் ஸ்ரீ பெரியவர்களிடத்தும் தன்னையே பறிகொடுத்த பலர் இருக்கத்தானே செய்தனர்! சிலர் பெரியவாளையே கேட்டு விட்டனர். 'அவர் எங்கு கிளம்பி விடுவாரோ? தரிசனம் செய்ய முடியாது போய்விடுமோ?' என்ற ஏக்கமே அதற்குக் காரணம். பெரியவாள் புன்னகை தவழ, "துலா ஸ்நாநம் எல்லாம் கூவத்திலேதான்! கவலைப்படாதே போ!" என்ருர். கூடியிருந்தோர் சிரித்துவிட்டனர், பெரியவாள் சொன்னது வேடிக்கை என நினைத்து! ஏனெனில், கூவம் ஓடும் லக்ஷணம் நமக்குத் தெரிந்த கதைதானே! இங்கு துலா ஸ்நாநம் என்ருல் சிரிக்காமல் என்ன செய்வர்! ஆயின் அப்பக்தருக்கு அருள் பாலிக்க, ஆண்டவன் ஐயனின் வார்த்தையை—அல்ல ஆணையைக் கேட்டு அதன்படி ஓரிருநாளில் மழை 'சோ' எனக் கொட்டி கூவம் நதியாக ஓடியது! துலாஸ்நாநம் முழுவதும் ஓடும் காவிரி போல கூவத்திலேயே நடந்ததை எண்ணிப் பார்த்தால் இன்றுகூட மயிர்க் கூச்செறியும்.

ஒருநாள். சாதுர்மாஸ விரத சமயம். நண்பர் ஒரிருவரு டன் சென்றிருந்தேன். அதில் ஒருவர் தீவிர பழநி உபாஸகர். புதுப் பெரியவர்களைப் பார்க்க அவாவைக்கூட காண்பிக்க வில்லை. "புதுப் பெரியவர்களைப் பார்த்துவிட்டு வருவோமே—வாருங்களேன்" என்றேன். "நீங்கள் போய்விட்டு வந்து விடுங்கள். நான் இங்கேயே சந்நதியில் இருக்கிறேன்" என்றார். "ஏன், அவர்களைப் பார்க்கவேண்டாமா?" என்றேன்.

அவர் கூறிய பதில் அவரது பக்தியின் ஆழத்தைக் காட்டியது என்றாலும், அறியாமையும் இழைந்து தனித் தங்கமாக இராது வெட்டியெடுக்கப்பட்ட தங்கம் போன்று காணப்பட்டது.

அவர் கூறினார்: "எனக்கு என்னமோ பெரியவாளைப் பார்த்துவிட்டு புதுப் பெரியவர்களைப் பார்க்க மனம் வர வில்லை. என்ன இருந்தாலும் இப்போதுதானே பட்டத்துக்கு வந்திருக்கிறார்!" என்றார்.

நான் திடுக்கிட்டேன்! "ஏன் ஐயா, ஒரு டம்ளர் பால் பாயசத்தில் மேலே உள்ளது தித்திக்கும்; கீழே உள்ளது கசக்குமா? அது மாதிரி குருமூர்த்தி என்றதும் அதிலே எங்கிருந்து பெரியவர், சிறியவர் வித்தியாசம் வரும்?" என்றேன்.

"எனக்கு என்னமோ மனதுக்கு சம்மதமாயில்லை" என்று கூறினார் அம் மனிதர். அவர் சொல் எனக்கு மன வாட்டமும் வேதனையும் தந்தது. நான் மட்டும் மன பாரத்துடன். புதுப் பெரியவர்களைத் தரிசித்து நமஸ்கரித்து வந்தேன், புதுப் பெரியவர்கள் பாடசாலை மாணவர்கள் புடைசூழ உடன் மாலை ஸ்நானத்துக்கு கூவம் ஆற்றிற்குப் புறப்பட்டு விட்டார்கள். அந்தி மயங்கிய நேரம். மடத்துப் பூஜை ஸந்நிதானத்தில் விஷ்ணு ஸஹஸ்ர நாம பாராயணம் நடந்து கொண்டிருக்கிறது. நானும் அந்த பழநியாண்டவன் பக்தரும் நின்று கொண்டிருந்தோம்.

திடீரென்று சிலர் பரபரப்புடன் வெளியே சென்றனர். பட்டை பட்டையாக விபூதியுடனும் சிறு குழந்தை அத்யாயிகள் புடைசூழ ஸ்நாந அனுஷ்டானம் முடித்து, மான் கன்று போல் துள்ளு நடையிலே வந்துகொண்டிருந்தார் புதுப் பெரியவர். ஓடிச்சென்று நமஸ்கரித்தேன். என்னுடன் வந்த பழநி பக்தரும் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார். ஒரே ஓட்டமும் நடையுமாக உள்ளே சென்றுவிட்டார் புதுப் பெரியவர்.

என் மனத்திலே சாந்தி பிறந்து, நிம்மதியும் தவழ்ந்தது. நண்பர் பழநி பக்தர் நமஸ்கரித்து விட்டதில் பரம நிம்மதி இருந்தது: அவரையே கேட்டேன். "ஏனய்யா சற்று முன் அப்படி பேசினீரே, இப்போது ஏன் நமஸ்காரம் செய்தீர்?" என்று கேட்டேன்.

"ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியே நவ வீரருடன் வருவது போல் இருந்தது, புதுப் பெரியவர் பாடசாலை மாணவர்களுடன் வந்த காட்சி!" என மனமுருகக் கூறினார்.

"பால் பாயாசம் பூராவும்தான் தித்திக்கும்! பாதி இப்படி, பாதி அப்படி அல்ல!" என்று நான் கூறிய உலகமறிந்த உண்மையை ஏனோ அவர் இத்தனை காலமாக உணராதிருந்தார்! எல்லாம் குரு சித்தம் !

* * *

பெரியவர்களையும் புதுப்பெரியவர்களையும் தரிசித்து வரவேற்று ஆச்ரயித்த சென்னை நகர பக்தர்களைக் காட்டிலும் அப்பக்தியை ஆகாயமளவுக்கு தூண்டிய நகரத்திலிருந்து பல்வேறு மொழியில் பிரசுரமாகும் தினசரி, வார, மாதப் பத்திரிக்கைகள் எல்லாம் ஒவ்வொரு இதழையுமே சங்கர விஜய மலராகச் சிறப்புக் கட்டுரைகளும் படங்களும் போட்டு தொடர்ந்து ஒரு வைபவமாகவே கொண்டாடின. அதில் ஒன்றான "குருபீடம் கண்ட பட்டினத்தை"க் காண அடுத்த அத்யாயத்திற்குப் போகலாம்.

# 8. குருபீடம் கண்ட பட்டணம்

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கரா சாரிய சுவாமிகள் 1957–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் சென்னை—பட்டணத்தில் தமது முகாமை ஸ்தாபித்தார்கள். கடந்த பதினெட்டு மாதங்களாக நகரத்தில் தங்கியிருந்து மக்களுடைய அகம், புறம் இரண்டிலும் தூய்மையை ஏற்படுத்திய பிறகு ஒரு நன்னுளில் முகாமைக் கலைத்துவிட்டு, ஸ்ரீ காஞ்சிக்குத் திரும்பினார்கள். பிரிவு உபசார வைபவத்தின்போது நகராண்மைக் கழகத் தலைவரும், ராஜ்ய அறநிலையப் பாதுகாப்பு அமைச்சரும், நகராண்மைக் கழக வாத்ய கோஷங்களுடன் மக்களுக்கு முன்னின்று ஸ்ரீ சுவாமிகளை வழியனுப்பினர். இருபத்தாறு ஆண்டுகளுக்கு முன்பு 1932ல் ஸ்ரீ சுவாமிகள் சென்னைக்கு விஜயம் செய்திருந்தார்கள். கால் நூற்றுண்டுக்குப் பிறகு நிகழ்ந்த விஜயத்தின் போது, ஸ்ரீ சுவாமிகள் நகரத்தின் வளர்ச்சியையும், நகரமாந்தர்களின் சீரிய வாழ்க்கையையும் கண்டு பாராட்டி அனுக்கிரகித்தார்கள்.

இன்று. உலகோர் வியக்கும் அளவுக்கு வளர்ந்திருக்கும் சென்னை நகரம், கடந்த தலை முறைகளில் எவ்வாறு இருந்து படிப்படியாக முன்னேறி வந்துள்ளது என்பதை அறிய சரித்திர நூல்களும், ஸ்தல புராணங்களும் நமக்குப்பேருதவி செய்கின்றன.

* * *

சென்னப் பட்டணத்தின் சரித்திரம் மிகப் பழமையானது. பேயாழ்வாரும், சுந்தரரும், சம்பந்தரும் திருவல்லிக்

கேணியையும். திருமயிலையையும் நமக்குப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்கள். குறளாசிரியர் வள்ளுவநாயனார் மயிலையையே தமது தாயகமாகக் கொண்டவர்.

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு காவிரிப்பூம் பட்டணத்திற்குத்தான் 'பட்டணம்' என்ற பெயர் இருந்து வந்தது. அந்த ஊரில் பிறந்ததன் காரணமாக பட்டணத்தார் என்ற பெயர் ஒரு மகானுக்கு ஏற்பட்டது. இன்றும் தமிழ் நாட்டில் அம் மகானின் பெயர் சிகரமாக விளங்கி வருகிறது. இவர் நமது சென்னை நகரின் வட எல்லையில் இருக்கும் திருவொற்றியூர் க்ஷேத்திரத்தில் சிவபெருமானைக் குறித்து "இருபா இருபஃது" என்னும் சைவத் திருமுறை அடங்கிய பிரபந்தத்தைப் பாடி, அப்பெருமான் திருவடியிலேயே தமது ஆன்மாவை அர்ப்பணம் செய்திருக்கிறார்.

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு பூம்புகாருக்கே தனிப் பெயராயிருந்த பட்டணம் என்ற சொல்! இந்த முந்நூறு ஆண்டுகளாக நமது சென்னை நகருக்கே தனிப் பெயராக அமைந்து விட்டது. பட்டணத்தார், இத் தலத்தி லிருக்கும் சிவபெருமானிடம் உள்ள பேரன்பினால் அப் பெயரை இங்கு கொண்டு வந்து சேர்த்துவிட்டார் போலும். வடக்கே கலிங்கபட்டணம், பீபிலி பட்டணம் முதல், தெற்கே சுந்தரபாண்டிய பட்டணம், குலசேகரபட்டணம் வரை சமுத்திரக் கரையிலுள்ள துறைமுகங்களுக் கெல்லாம் பட்டணம் என்ற சிறப்புச் சொல் இருந்த போதிலும். தனியே பட்டணம் என்று சொன்னால் இன்று சென்னப் பட்டணத்தையே குறிக்கிறது. இதனால், பண்டைய பூம்புகார் பட்டணத்திற்கும் இன்றைய சென்னப்பட்டணத்திற்கும் பொதுவாக பட்டணத்து அடிகள் என்னும் ஆத்மஞானியின் அருள் சம்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்றும் கூறலாம்.

அவதார புருஷராக விளங்கி, அத்வைதத்தை உலகுக்கு அளித்து, வேத மார்க்கத்தை வற்புறுத்தி, ஷண்மத ஸ்தாபனம் செய்து, ஹிந்து மதத்திற்குத் தோன்றிய எதிர்

சக்திகளைச் செயலிழக்கச் செய்து, தவயோகியாக தேச மெங்கும் திக் விஜயம் செய்து, அன்றும், இன்றும், என்றும் உலகமாந்தர் உய்ய ஆதி வேதாந்த பாஷ்யங்களைச் செய்து அருளிய ஸ்ரீ சங்கர பகவத் பாதாளின் தூளியும் இந்தச் சென்னப் பட்டணத்தில் பல நூற்றுண்டுகளுக்கு முன்பே பட்டு, இன்றைய பெருமைகளுக் கெல்லாம் வித்தாக அமைந் துள்ளது.

வேததர்ம பரிபாலனத்துக்காகவும், அத்வைத பிரசாரத் திற்காகவும் ஆதிசங்கரர் தோற்றுவித்த ஸ்ரீ மடங்கள் அன்று தொட்டு இன்றுவரை அரும்பணியாற்றி வருகின்றன. பல நூற்றுண்டு காலமாக இந்த சன்மார்க்கப் பணியைப் பாரம்பர்யமாகச் செய்து வரும் ஸ்ரீ மடங்களின் சரித்திரத் தோடு நம் தேச சரித்திரமும் இணைந்து காணப்படுகின்றது. இவற்றின் வரலாறுகளை ஆராயும் போது அநேக சாம்ராஜ் யங்களின் வாழ்வையும், வீழ்ச்சியையும் பார்க்கிறோம். கண்கவர் மாளிகைகளோடும், வானளாவும் கூட கோபுரங் களோடும், அழகுமிக்க அரண்மனைகளோடும் திகழ்ந்த நகரங் களும், அவற்றின் திடீர் மறைவுகளும் புலனாகின்றன. அதே போன்று புறக்கணிக்கப்பட்ட பிரதேசங்கள் வளம்பெற்று, புது வாழ்வில் மிளிரும் விந்தையையும் காண்கிறோம்.

இந்த ஆராய்ச்சி முறையில் தமிழகத்தின் தலை நகரமாக இன்று விளங்கும் சென்னப்பட்டணத்தின் சரித்திரத்தை ஸ்ரீ ஆதிசங்கர பரம்பரையின் அடிச்சுவட்டில் சென்று சிறிது பார்க்கலாம்.

* * *

வேத தர்மத்தை யொட்டி வாழும் மக்கள் பாரத மக்கள். வேத சாரங்களையும், தத்துவங்களையும், நீதிகளையும் உணர்ந்தோர் வழிகாட்டியாக இருந்து பாமரர்களை நல்வழி யில் கொண்டு செல்வது இந்நாட்டின் உயர்ந்த பண்பாடு. நமது ஆன்றோரும் சான்றோரும் வேத வழியிலிருந்து வழுவாது வாழ்ந்து வந்தார்கள் என்பதற்கு அநேக உதா

# ஆத்ம போதம்

ஸ்தாணௌ புருஷவத் ப்ராந்த்யா க்ருதா ப்ரஹ்மணி ஜீவதா
ஜீவஸ்ய தாத்விகே ரூபே தஸ்மின் த்ருஷ்டே நிவர்த்ததே ॥ 45

தத்வஸ்வரூபாநு பவாதுத்பந்தம் ஞானமஞ்ஜஸா
அஹம் மமேதி சாஞானம் பாததே திக்ப்ரமம் யதா ॥ 46



★

மரத்தை மனப்ராந்தியால் மனிதன் என எண்ணுகிறுன். அதுபோல மனம் முதலிய வற்றுடன் சேர்ந்த ப்ரஹ்மம் ஜீவனுகத் தோன்றுகிறது.

ஆத்ம ஸ்வரூபத்தின் அநுபவம் அக் ஞானத்தை உடன் அழிக்கிறது. எவ்வாறு திசை தடுமாற்றம் வழி தெரிந்ததும் நீங்கு கிறதோ அவ்வாறு நான், எனது என்ற எண்ணமும் மறைகிறது.


★

All pervading, Omnipotent, Omniscient, Brahman—appears to be limited because of Ignorance. —*Sri. Aurobindo.*

# ஆத்ம போதம்

ஸம்யக் விஞ்ஞானவான் யோகீ ஸ்வாத்மந்யே வாகிலம் ஸ்திதம்
ஏகம் சஸர்வ மாத்மாநமீக்ஷதே ஞானசக்ஷுஷா. 47

ஆத்மைவேதம் ஜகத்ஸர்வம் ஆத்ம நோந்யத் நகிஞ்சன
ம்ருதோ யத்வத் கடாதீதி ஸ்வாத்மாநம் ஸர்வமீக்ஷதே. ॥ 48



★

ப்ரஹ்மத்தை உணர்ந்த ஞானி எல்லா ப்ரபஞ்சமும் தன்னிலே இருப்பதாக உணர்கிறான். அறிவு மயமான கண்ணினால் எல்லாவற்றையும் ஆத்ம ஸ்வரூபமாகக் காண்கிறான்.

குடம் முதலிய மண் பாண்டங்களை மண்ணைத் தவிர வேறில்லை என்று பார்ப்பதுபோல் ஆத்ம ஸ்வரூபம்தான் இவ்வுலகம் யாவும் என்று தன்னை யறிந்த ஞானி காண்கிறான்.

★

A man may be wicked and yet make an astronomical discovery, but in religion it is different. NO IMPURE Man will ever have the power to reach the truths of religion.

—*Swami Vivekananda.*

ரணங்களை நாம் புராணங்கள் வாயிலாகவும், உபநிஷத்துக் கதைகள் மூலமாகவும் அறிகிறோம்.

நமது ரிஷிகள், வேதங்களைப் பின்பற்றி நம் நல்வாழ்வுக்கான நியதிகளையும், நீதிகளையும் நிர்ணயம் செய்து அருளியிருக்கிறார்கள். இவற்றை நாம் கருத்தோடு கவனமாக ஆராய்ந்தால், நமது ரிஷிகள் நீதி தர்மபரிபாலனத்தில் பாமர மக்களுடைய பொறுப்பைக் குறைத்து, தர்மோபதேசம் செய்யும் தவசிகளிடமும், புவியாளும் மன்னர்களிடமும் அதை ஒப்படைத்திருப்பது தெரியவரும். இப்பெரும் பொறுப்பை அவர்கள் சுலபமாக நிறைவேற்றுவதற்கான உபாயங்களையும் மகரிஷிகள் கூறியிருக்கிறார்கள்.

பாமர மக்களின் அக வாழ்வு மலரக் காரணமாயிருக்கும் துறவிகளும் புறவாழ்வு மலரக் காரணமாயுள்ள மாமன்னர்களும், அடிக்கடி தேச சஞ்சாரம் செய்து ஜனங்களோடு ஒன்றியிருந்து, அவர்களிடையே காணப்படும் குறைகளைக் களைந்து பேருதவிகள் பல செய்து, அவர்கள் வாழ்க்கையைத் தூய்மைப்படுத்தி சிறப்படையச் செய்யவேண்டும் என்பதை வேதநெறி வலியுறுத்துகிறது. அரசன் தேச சஞ்சாரம் செய்யாமல் ஓரிடத்திலேயே நிலைத்து விட்டானானால், அவன் பிறவிப் பயனை அடைவதற்குத் தவறி விடுகிறான். அவன் ஆட்சியின் கீழ் உள்ள மக்கள் அனைவரையும் நல்ல முறையில் ரட்சிக்க இயலாமல் போய்விடும். அதனால் ஜனங்களுடைய புறவாழ்வில் சுபிட்சம் குறைந்து அவர்கள் அகத்திலும் மாசு ஏற்பட்டுவிடும். நாளடைவில் பிரஜைகளின் பால் உள்ள மாசு, மாசற்ற மாமன்னனையும் பற்றிக் கொள்ளும். இந்த அபாயத்தை அறிந்திருந்த நமது பண்டையகால மன்னர்களில் பலர் சஞ்சார தத்துவத்தை அக்கறையோடு கடைப் பிடித்து மேன்மை அடைந்திருக்கிறார்கள்.

சந்நியாசிகளோ, 'இன்று இருந்த இடத்தில் நாளை இருப்பதில்லை' என்ற சங்கற்பத்தோடு நாடு பூராவும் சஞ்சாரம் செய்து வந்திருக்கிறார்கள். அவர்கள் பாத தூளி

பட்ட பிரதேசம் புனித மடைவதையும், அவர்கள் கடாட்சத்தில் திளைத்த ஜனங்கள் எவ்விதக் குறைவுமின்றி வாழ்வதையும் நாம் கண்டும், கேட்டும் வருகிறோம்.

இவர்கள் மேற் கொள்ளும் சஞ்சாரத்தினுல் நமக்கு வேருெரு பலனும் கிடைக்கிறது. சரீரப் பிரயாசையைப் பொருட்படுத்தாமல் அவர்கள் சஞ்சாரம் செய்வதால், எளிதில் சென்று பார்க்கக் கூடாத அநேக ஸ்தலங்களைப் பற்றி நாம் அறிய முடிகிறது. ஏனெனில், அவர்கள் விஜயம் செய்த இடங்களைப் போற்றிப் பாடியும், குறிப்புகள் எழுதியும் நம் முன்னோர் கொண்டாடியுள்ளார்கள். இவ்வாறு நமது பெரியோர் பேருதவிகள் பல நமக்குச் செய்திருப்பதாலேயே இன்று நம் தேசத்தில் பிரபலமாயுள்ள ஸ்தலங்களின் புராதனத் தன்மையையும், அவற்றின் வளர்ச்சியையும் நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதாள் கேரள ராஜ்யத்தில் காலடியில் அவதரித்து, பால பருவத்திலேயே பரதக் கண்டம் முழுவதும் சஞ்சாரம் செய்தார். அநாதியான வேதத்தை ரட்சித்தார். அவருடைய அத்வைதப் பிரசாரம் சாச்வதத் தன்மை பெற்று விளங்க, தேசத்தின் நான்கு திக்குகளிலும், ஸ்ரீ காஞ்சியிலும் ஸ்ரீமடங்களை ஸ்தாபனம் செய்தார். அந்த ஸ்ரீமடங்களும், பீடங்களும் இன்றும் நாளையும் வற்றாத ஆன்மீக சக்திகளாக இருந்து வருகின்றன.

ஸ்ரீ காஞ்சியில் சங்கரர் ஸர்வக்ஞ பீடத்தில் அமர்ந்து தர்மோபதேசம் செய்ததும் காமாட்சி அம்மன் ஆலயத்தில் ஸ்ரீ சக்ர பிரதிஷ்டை செய்து அம்பிகையின் உக்கிர சக்தியை அருள் சக்தியாக மாற்றி, எவரும் எக்காலத்திலும் வழிபட்டு மேன்மையடைய வழி செய்ததும் பிரசித்தமானவை. ஆனல் அதே சந்தர்ப்பத்திலோ, மற்ருெரு சந்தர்ப்பத்திலோ ஸ்ரீபகவத் பாதாள் சென்னப் பட்டணத்தின் ஒரு பகுதியாக உள்ள திருவொற்றியூரில் நிகழ்த்திய அற்புதத்தை ஒரு சிலரே அறிந்திருப்பார்கள்.

அக் காலத்தில் திருவொற்றியூர் ஆலயத்தில் அம்பிகை, வட்டப்பாறை அம்மன் என்ற திருநாமம் தாங்கி, கண்டோரும் கேட்டோரும் நடுங்கும் வண்ணம் உக்கிர சக்தியோடு இருந்ததாக வரலாறு இருக்கிறது. தமது விஜயத்தின் போது ஸ்ரீ ஆதிசங்கரர், அம்பிகையின் பீஜாக்ஷர மந்திரம் பொறிக்கப்பட்டிருந்த கல்லில் உள்ள உக்கிர பீஜாக்ஷரத்தை மாற்றி, அதன் சக்தியை அடக்கி அதைத் திருப்பி வைத்து, உக்கிரத்தன்மையோடு விளங்கிய தெய்வத்தைச் சாந்தப்படுத்தினர். தவிர சகலரும் நிர்ப்பயமாக அங்கு தரிசனம் செய்ய வேண்டி, திரிபுரசுந்தரி விக்கிரகத்தையும் பிரதிஷ்டை செய்து, யந்த்ர ஸ்தாபனமும் செய்வித்தார். பின்னர் பூஜை முறைகளில் இருந்த குறைகளை அகற்றி, அம்பிகைக்கு வைதிக முறையில் பூஜை நடத்த ஏற்பாடுகள் செய்தருளினர். இதற்காகக் கேரளத்திலிருந்து ஒரு நம்பூதிரி அந்தணரையும் தருவித்து, ஈசன், அம்பிகை இருவருக்கும் அபிஷேக அலங்கார அர்ச்சனைகள் நடத்தும் பொறுப்பை அவரிடம் ஒப்புவித்தார். இன்றும் இந்தப் பழக்கமே நீடித்து வந்து கொண்டிருக்கிறது.

திருவொற்றியூரில் ஸ்ரீ சங்கர பகவத்பாதாள் சிறிது காலம் தங்கியிருந்ததற்கு அநேக சான்றுகள் உள்ளன. இங்கு கட்டப்பட்டிருக்கும் வியாக்கியான மண்டபம் குறித்து இரண்டு வரலாறுகள் கூறப்படுகின்றன. ஈசன் இம் மண்டபத்தில் பாணினி பதஞ்சலி வியாக்ரபாதர்களுக்கு அருளுபதேசம் வழங்கினர் என்று ஒரு வரலாறு கூறுகிறது. மற்றொன்று, ஸ்ரீ பகவத்பாதாள் இங்கு தங்கியிருந்து வேதாந்த பாஷ்ய உபதேச மொழிகள் வழங்கினர் என்று கூறுகிறது. இந்த இரண்டு வரலாறுகளுமே வியாக்கியான மண்டபத்தின் புனிதத்தன்மையை விளக்குவதால், இரண்டுக்குமே நாம் மதிப்புக் கொடுத்து வருகிறோம்.

இவ்வாறு ஸ்ரீ காஞ்சியிலும், திருவொற்றியூரிலும் பகவத் பாதாளுடைய சஞ்சாரம் நீடித்து இருந்து வந்ததால் சென்னப்பட்டணம் சிறப்படைகிறது.

ஆதி சங்கரருக்குப் பிறகு, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தில் அமர்ந்து, குருநாதனின் புனிதத் தொண்டை தொடர்ந்து நடத்தி வரும் ஸ்ரீ சங்கராசாரிய பரம்பரையில் எல்லோருமே, இந்தப் பிரதேசத்தில் பேரபிமானம் கொண்டிருந்தார்கள் என்பதற்கு திருவொற்றியூரில் உள்ள ஸ்ரீ மடமும், அதன் சூழ்நிலையும் அத்தாட்சிகளாகத் திகழ்கின்றன. இந்த ஸ்ரீமடம் கட்டப்பட்ட காலத்தை நிர்ணயிக்க இதுவரை சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. மடத்தின் பூஜா கிரகத்தின் கற் சுவரில் பொறிக்கப்பட்டிருக்கும் சிலா ரூபத்தில் தமது சிஷ்யர்களோடு பகவத் பாதாள் தரிசனம் தருகிறார்கள். மடத்தின் பின்புறம் உள்ள தோட்டத்தில் ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளில் ஒரு ஆசாரியருடைய பிருந்தாவனம் (சமாதி) இருக்கின்றது. இன்னும் தெற்குத் தேர் விதியை யடுத்து, சர்வமான்ய சுதந்திரத்துடன் ஸ்ரீ மடத்திற்குச் சொந்தமான ஒரு பெரிய சம வெளியில் மற்றொரு ஆசாரியருடைய பிருந்தவானமும் தென்படுகிறது.

இன்று ஐம்பது சதுர மைல் விஸ்தீர்ணம் கொண்ட சென்னை நகரம் நாலைந்து நூற்றாண்டுகளுக்கு முன்வரை ஒரு சிறிய கிராமமாகவே இருந்து வந்திருக்கிறது. தேச சஞ்சாரம் செய்யும் மகான்களும், மாமன்னர்களும், இவ்வழியாகப் போய் வந்திருக்கலாம் என்று ஊகிப்பதற்கு அனுசரணையாக அவர்களால் போற்றப்பட்ட ஊர்கள் பல இப்பிரதேசத்தை மேற்கிலும், வடக்கிலும், தெற்கிலும் சூழ்ந்து கொண்டிருக்கின்றன, சைவசமயக் குரவர்களால் பாடப்பெற்ற திருமயிலையும் திருவான்மியூரும், ஆழ்வாராதிகளால் பாடப்பெற்ற அல்லிக்கேணியும் தெற்கு பாகத்தில் அமைந்திருக்கின்றன. மேற்கில் *எழும்பூர் எனப்படும் எழும்ஊரும், பூவிருந்தவல்லி மாங்காடு, குன்றத்தூர் போன்ற ஸ்தலங்களும் புராதனமானவை. ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள் பலருடைய திக்விஜய வரலாறுகளைப் பார்த்தால் இந்த ஸ்தலங்களின் பெயர்கள் அடிக்கடி வருவது தெரிகிறது.

# ஆத்ம போதம்

ஜீவன்முக்தஸ்து தத்வித்வான் பூர்வோபாதி குணாம்ஸ்த்யஜேத்
ஸச்சிதானந்த ரூபத்வாத் பவேத் ப்ரமரகீடவத். 49

தீர்த்வா மோஹார்ணவம் ஹத்வா ராகத்வேஷாதி ராக்ஷஸான்
யோகீ சாந்தி ஸமாயுக்த ஆத்மாராமோ விராஜதே ॥ 50



வண்டையே நினைப்பதால் புழுவானது வண்டாக மாறுவதுபோல், ப்ரஹ்மத்தைப் பற்றிய நினைவினால் ஞானி சரீரம், மனம் முதலியவற்றையும் ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களும் நீங்கி ஜீவன் முக்தனாகிறான்.

ராக, த்வேஷம் முதலிய அரக்கர்களை மோஹம் என்கிற கடலைக் கடந்து சென்று ஸம்ஹரித்து, ஞானி சாந்தியுடன் கூடினவனாய் ஆத்ம இன்பம் எய்துகிறான்.

Character is repeated habits and repeated habits alone can-reform character.

—*Swami Vivekananda*.

# ஆத்ம போதம்

பாஹ்யாநித்ய ஸுகாஸக்திம் ஹித்வாத்ம ஸுக நிர்வ்ருத:
கடஸ்த தீபவச் சச்வதந்தரேவ ப்ரகாசதே ॥ 51

உபாதி ஸ்தோபி தத்தர்மைர் ந லிப்தோ வ்யோமவன்முநி:
ஸர்வவிந் மூடவத் திஷ்டேத ஸக்தோ வாயு வச்சரேத் ॥ 52



வெளிப் பொருள்களால் ஏற்படும் அநித்யமான இன்பங்களில் மனதை செலுத்தாது ஆத்மாவிடத்திலேயே ரமித்துக் கொண்டு குடத்து விளக்குபோல் உள்ளேயே பிரகாசித்துக்கொண்டிருப்பான்.

ஆகாயம் போல, உபாதிகளுடனும் இருந்தாலும் அத்தர்மங்கள் ஆத்ம ஞானியை ஒட்டுவதில்லை. மூடன்போல் இருந்தாலும் எல்லாமறிந்தவன் காற்றுபோல ஈடுபாடின்றி சஞ்சரித்துக்கொண்டிருப்பான்.

★

As the organs Get finer the perceptions Get finer.

*—Swami Sivanandha.*

# ஆத்ம போதம்

உபாதி விலயாத் விஷ்ணௌ நிர்விசேஷம் விசென்முநி :
ஜலே ஜலம் வியத் வ்யோம்நி தேஜஸ் தேஜஸி வா யதா 53

யல்லாபாத் நாபரோ லாபோ யத்ஸுகாத் தாபரம் ஸுகம்
யத்ஞானாத் நாபரம் ஞானம் தத் ப்ரஹ்மேத்ய வதாரயேத் 54



ப்ராரப்த கர்மா விட்டதும், உபாதிகள் அனைத்தும் நீங்கிய ஞானி நீரில் நீர் போலவும், தேஜஸில் தேஜஸ் கலப்பதுபோல் எங்கும் நிறைந்த ப்ரஹ்மத்தில் இரண்டற கலந்து விடுகிறான்.

எந்த லாபம் அடைந்த பிறகு (ஆத்ம லாபம்) அதைவிட அடைய வேண்டியது ஒன்றும் இல்லையோ எதை அறிவதைவிட உயர்ந்த அறிவு வேறு இல்லையோ அது தான் ப்ரஹ்மம் என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

For those who want to make rapid progress, and to practice hard, a strict diet is absolutely necessary.

# ஆத்ம போதம்

யத் த்ருஷ்ட்வா நாபரம் த்ருச்யம் யத்பூத்வா ந புனர் பவ :
யத் ஞாத்வா நாபரம் ஞேயம் தத் ப்ரஹ்மேத் யவதாரயேத் 55

திர்ய கூர்த்வமத : பூர்ணம் ஸச்சிதானந்தமத்வயம்
அனந்தம் நித்யம் ஏகம் யத் தத் ப்ரஹ்மேத் ய வதாரயேத் 56



எதைக் கண்ட பிறகு காண வேண்டிய காட்சி எதுவும் இல்லையோ, எதுவாகியபின் மீண்டும் பிறவி இல்லையோ, எதை அறிந்தபின் அறிய வேண்டியது ஒன்றும் இல்லையோ அதுதான் ப்ரஹ்மம் என்று தீர்மானிக்க வேண்டும்.

குறுக்கும் நெடுக்கும் கீழும் மேலும் எங்கும் எஞ்சாத பூரணமாகி, இரண்டற்ற சச்சிதானந்தமான, எல்லையில்லா, அழிவற்ற ஒன்று எதுவோ அதுவே ப்ரஹ்மம் என்று சொல்லப்படுகிறது.

"The Jeevan Muktha becomes intangible — invisible — He becomes a mere consciousness — freely moves about—"

*Ramana Maharishi.*

வடக்கில் உள்ள திருவொற்றியூர் க்ஷேத்திரமோ ஸ்ரீ ஆதி சங்கரரின் சரித்திரத்தோடேயே இணைந்து காணப்படுகிறது.

இவ்வாறு அவதார புருஷர்களும் மகான்களும் சிவ விஷ்ணு அடியார்களும் விஜயம் செய்த ஊர்களைச் சுற்றிலும் அமைத்துக் கொண்டு, அவர்கள் பாத தூளிபட்டுப் பெருமை யடையும் தனிப் பெரும் பாக்கியத்தை சென்னப் பட்டணம் அடைந்திருக் கிறது.

எழுதி வைக்கப் பட்டிருக்கும் நமது தேச சரித்திரத்தில் சென்னை முதன் முதலாக கி. பி. 1639-ம் ஆண்டு அக்டோபர் 25-ந் தேதி அன்றுதான் இடம் பெற்றது. ஹிந்து ராஜ் யத்தை ஸ்தாபித்து இருநூற்று இருபத்தெட்டு வருஷங்கள் சீரும் சிறப்புமாக ஆட்சி புரிந்து வந்த விஜய நகர மன்னர்கள் கி. பி. 1565-ல் வீழ்ச்சியுற்றுர்கள். தெற்கு நோக்கி ஓடி வந்த மன்னன் ராம ராயனின் சந்ததியார் சென்னைக்கு வட மேற்கே எழுபது மைலில் உள்ள சந்திரகிரியில் தலைநகரை ஸ்தாபித்துக் கொண்டு, கல கலத்துப் போன சாம்ராஜ் யத்தைப் பெயரளவுக்கு ஆண்டு வந்தனர், அப்போது மசூலிப் பட்டணத்தில் வியாபாரஸ்தலம் ஒன்றை நிறுவிக் கொண்டு, முன்னேறவும் முடியாமல் பின்னேறவும் முடியா மல் தத்தளித்துக் கொண்டிருந்த ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி அதிகாரிகளுக்கு தமது பிரதேசத்தில் வியாபாரம் செய்ய வசதிகள் செய்து கொடுக்க விழைந்தார், செங்கற் பட்டு மாவட்டத்தின் விஜயநகர சாம்ராஜ்ய பிரதம அதி காரி (நாய்க்) யான வெங்கடப்பா! பிரான்ஸிஸ் டே என்ற ஆங்கிலேய வர்த்தகரின் பெரு முயற்சியாலும், ராஜ தந்தி ரத்தாலும், ஸான்தோமுக்கு வடக்கில் மூன்று மைல் நீளத் துக்கு கடற்கரை ஓரமாக இருந்த பிரதேசம் கம்பெனி யாரின் வசமாகியது. 1640ம் ஆண்டு பிப்ரவரி 20ந் தேதி அன்று ஆங்கிலேய வியாபாரிகள் தங்கள் மூட்டை முடிச்சுக் களோடு கடல் மார்க்கமாக வந்து இறங்கி, கடற்கரையில் பனை ஓலைக்குடிசைகளை அமைத்துக்கொண்டு தங்கலானார்கள்.

சிறிது காலத்திற்குப் பிறகு அதே அதிகாரியிடமிருந்து ஒரு சிறிய கோட்டை கட்டிக் கொள்ள அனுமதி பெற்று, மிகக் குறுகிய அவகாசத்திலேயே, சாமான்கள் வைக்கும் கிடங்குகளும், யுத்ததளவாடங்களுக்கான பாசறைகளையும் கொண்ட ஒரு மூன்று மாடிக் கட்டடத்தைக் கட்டி முடித்தார்கள். அதையொட்டி புல்லும் பூண்டுமாக, குடிசை வாழ் மீனவர்களின் ஆதிக்கத்தில் இருந்த பிரதேசத்தில் சுறுசுறுப்பு தென்பட்டது. இன்றைக்கு ஒன்று, நாளைக்கு ஒன்று என தினந்தோறும் அபிவிருத்தித் திட்டங்களை வகுத்து ஆங்கில வியாபார கோஷ்டி அவற்றை ஊக்கத்தோடு நிறைவேற்றியும் வந்ததால், வெகு சீக்கிரத்திலேயே அண்டையிலுள்ள ஸான்தோமில் அவர்களுக்கு முன்பிருந்தே ஒண்டுக் குடித்தனம் செய்த போர்ச்சுகீசியரைப் பொறுமை பிடித்துக் கொண்டது. கிடைத்தற்கரிய பண்டம் ஒன்று வலிய வந்து கிடைத்துவிட்ட மகிழ்ச்சியிலும், பரஸ்பரம் உள்ள போட்டியிலும், தங்கள் வாசஸ்தலத்தை பலமுள்ளதாகச் செய்து கொள்வதில் ஆங்கிலேயர் முனைந்தார்கள்.

சென்னை ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டையை அவர்கள் பூரணமாகக் கட்டி முடித்த சமயம் விஜய நகர ஆதிபத்தியம் மறைந்து, கோல்கொண்டா ஆட்சிக்குள் இந்தப் பிரதேசம் அடங்கியது. ஆனல் ராஜ தந்திரத்தால் ஆங்கிலேயர் கோல்கொண்டா பிரதம மந்திரி மிர்ஜும்லாவோடு வியாபார ஒப்பந்தம் ஒன்றை முடித்துக் கொண்டு, அவரை கம்பெனியின் பங்குதார்களில் ஒருவராகவும் சேர்த்துக் கொண்டார்கள். பிறகு முகலாய ஆட்சியின் கீழ் கர்நாடக நவாபுகள் ஆங்கிலேயர்களுக்கு விசேஷ சலுகைகள் காட்டியதால், அது வரை கடற்கரைப் பிரதேசத்தில் மட்டுமே வளர்ந்து வந்த பட்டணம் மேற்கிலும் தெற்கிலும் வியாபித்தது.

ஆங்கிலேய கிழக்கிந்தியக் கப்பெனியின் சரித்திரத்தை ஊடுருவிப் பார்த்தால், அவர்களுக்கு உள் நாட்டுக்காரர்களிடமிருந்து வந்த எதிர்ப்பை விட ஐரோப்பியக் குடியேற்

றக்காரர்களிடமிருந்து வந்த எதிர்ப்பே அதிகமா யிருந் தது.

பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனியார் தெற்கே புதுவை யில் வேரூன்றிய பிறகு வடக்கே முன்னேறத் தொடங்கினர் கள். அவர்களுக்கும் ஆங்கிலேயருக்கும் யுத்தம் மூளுவதில் ஒரு வேடிக்கையும் இருந்து வந்தது. ஐரோப்பாவில் அவர் களுக்குள் யுத்தம் ஏற்படும் போதெல்லாம் இங்கேயும் அவர் கள் சண்டை போட வேண்டி வரும். இரவில் தூங்கப் போகும்வரை கூடிக் குலாவுவார்கள்; தூக்கத்திலிருந்து விழித்த சமயம் ஐரோப்பிய யுத்தச் செய்தி வந்து விட்டால் உடனே யுத்த சன்னத்தர்களாகி விடுவார்கள்!

இப்படிப் பல இடையூறுகளுக்கு மத்தியில் ஆங்கிலேய சாம்ராஜ்யமும், அதோடு நமது இன்றைய சென்னை நகரும் வளர்ந்து வந்தது.

இந்தக் காலத்தில் சென்னை ஜார்ஜ் கோட்டை ஒரு பெரிய நகரத்துக்குள் ஒரு சிறிய நகரமாக மாறியது. கல்வி, வைத்தியம், தொழுகை, முதலானவற்றிற்கான வசதிகள் அங்கு செய்யப்பட்டன. நாணய சாலை ஒன்றும், சர்க்கார் அலுவலகக் கூடம் ஒன்றும் ஏற்பட்டன. கோட்டைக்கு வெளியே பெரிய நகரத்தில் பற்பல அபிவிருத்திகள் தோன்ற லாயின. அப்போது பிளாக் டவுன் என்று வழங்கி வந்த ஜார்ஜ் டவுனில், சைனாபஜார் ரோடு, அரண்மனைக்காரத் தெரு, வடக்கு பீச் ரோடு, போன்ற நெடுஞ்சாலைகளும் அவற்றை இணைக்கும் பல குறுக்குச் சாலைகளும் ஏற்பட்டன. நகரத்தின் விஸ்திரணம் மூன்று சதுர மைல்களிலிருந்து முப்பது சதுர மைல்களாக விஸ்தரித்தது. தேசத்தின் நாலு திசைகளிலிருந்தும் பலர் வர்த்தகத்திற்காகவும், தொழில் துறையில் பிரவேசிப்பதற்காகவும், உத்தியோகங்களுக்காக வும் சென்னை நகருக்கு வந்து குடியேறினார்கள். 'நகரம் ஒன்று வளர்ந்து வருகிறது' என்ற செய்தி தெற்கிலும் மேற் கிலும், வடக்கிலும் பரவப் பரவ, நகரத்தில் ஜனப் பெருக்கம் அதிகமாகி வந்தது.

குடியேறியவர்கள் முதலில் தங்களை ஸ்திரப்படுத்திக் கொண்டு, பலதரப்பட்ட நோக்கத்தோடு அவரவர் பிரிவுக்கு ஏற்ப மத, கலாசார, கல்வி ஸ்தாபனங்களையும் அமைத்துக் கொண்டார்கள். கி: பி. 1743ம் ஆண்டில் வஜ்ரால தியாக ராய என்பவர் தம்பு செட்டித் தெருவில் ஒரு மடம் கட்டி அதை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளுக்கு அர்ப்பணம் செய்தார்.

அப்போது பீடத்திலமர்ந்திருந்த ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளின் ஆக்ஞையின் பேரில் சென்னை நகரில் வாழ்ந்த பதினெட்டு இனத்தாருக்கு பதினெட்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, ஒரு தலைவரின் கீழ் கூடி, ஹிந்து தர்ம பரிபாலன விஷயத்தில் ஏற்படும் விசாரணைகளை ஆராய்ந்து முடிவு தெரிவிக்கும் வழக்கம் மேற்கொள்ளப்பட்டது. ஜாலாதிபதிகள் என்ற பெயரில் பிரதிநிதிகளும் சபாபதி என்ற பெயரில் தலைவரும் அழைக்கப்பட்டார்கள். அநேக வருஷங்கள் இந்த மகாசபை இந்த மடத்தில் கூடி நகரமாந்தர்களின் ஆத்மீக வாழ்க்கையை புனிதமாக்கி வந்திருக்கிறது. இப்போது இந்த மடத்தில் மத சம்பந்தமான சபைகளும், புராண பிரவசனங்களும் நடைபெறுகின்றன.

பதினெட்டாம் நூற்றுண்டில் காஞ்சி ஸ்ரீ மடத்துக்கும் சென்னை நகரத்துக்கு மிடையே இருந்த தொடர்புக்குச் சான்ருக கிழக்கிந்தியக் கம்பெனியார் 1792ம் ஆண்டில் பிறப்பித்த ஒரு உத்தரவு விளங்குகிறது.

[பிரசித்தி பெற்ற பல க்ஷேத்திரங்களைச் சுற்றிலும் கொண்டு வளரும் ஒரு நூதன நகரத்தில் பற்பல அலுவல்களுக்கிடையே அல்லும் பகலுமாக உழலும் மாந்தர்கள் தம்மை ஆச்ரயிக்க விழைவதை ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் மனமுவந்து ஏற்றுக் கொண்டதாலேயே கிழக்கிந்தியக் கம்பெனியார் இந்த உத்தரவைப் பிறப்பித்து, புதிதாக அமைந்த சென்னை நகருக்கு ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் விஜயத்திற்கான வழிவகை செய்தார்கள்.]

## ஆத்ம போதம்

அதத் வ்யாவ்ருத்திரூபேண வேதாந்தைர் லக்ஷ்யதேS வ்யயம்
அகண்டானந்த மேகம் யத் தத் ப்ரஹ்மேத் யவதாரயேத் 57

அகண்டானந்த ரூபஸ்ய தஸ்யாநந்த லவாச்ரிதா :
ப்ரஹ்மாத்யாஸ் தாரதம்யேன பவந்த் யாநந்திநோS கிலா ! 58



★

இது அன்று அது அன்று என வேதாந்த மார்க்கம் அறிவுறுத்துவதும், அகண்டாகார மானதும், ஆனந்த வடிவமானதும் ஆகிய ஒரே தத்துவம்தான் ப்ரஹ்மம் என்று கூறப் படுகிறது.

அளவிடற்கரிய ஆனந்த மயமான அந்த ப்ரஹ்மத்தின் துளியை அடைவதால், ப்ரஹ்மா முதலாகிய அனைவரும் ஏற்ற தாழ்வுற்ற ஆனந்தத்தை அடைந்தவர்களாக உள்ளனர்.

★

Yoga is controlling the mind from taking Various forms.

—*Patanjali Yoga Sutram.*

---

தத்யுக்தமகிலம் வஸ்து வ்யவஹாரஸ்ததந்வித ।
தஸ்மாத் ஸர்வகதம் ப்ரஹ்ம க்ஷீரே ஸர்பிரிவாகிலே 59

அநண்வஸ்தூல மஹ்ரஸ்வமதீர்க மஜமவ்யயம்
அருப குணவர்ணக்யம் தத் ப்ரம்மேத்ய வதாரயேத் 60



பால் முழுவதும் நெய் பரவியிருப்பது போல், அனைத்துப் பொருளும் இவ்வுலக வியவகாரங்கள் யாவும் ப்ரஹ்மத்திடமே உள்ளது. ஆகவே ப்ரஹ்மம் எங்கும் நிறைந்தது,

சிறியது, பருமன், குட்டை, நீளம், பிறப்பு, இறப்பு, அழிவு, உருவம், குணம், நிறம், பெயர் இல்லாதது எதுவோ அதுவே ப்ரஹ்மம் என்று தீர்மானிக்கவும்.

His Manifesting Word is 'OM'
—*Patanjali Yoga Sutram.*

சென்னப் பட்டணமும் அதன் சுற்றுப்புறமும் பதினு ரும் நூற்றூண்டிலிருந்து பதினெட்டாம் நூற்றூண்டு முடிவு பெறும் வரை அடிக்கடி எதிரிகளின் தாக்குதல்களுக்கு ஆளாகி வந்தன. படையெடுப்போரின் பலம் மேலோங்கிய போதெல்லாம், இந்தப் பிரதேசத்தில் அராஜகமும், அவ நம்பிக்கையும் தாண்டவமாடின. படைபலம் குன்றி எதிரி பின் வாங்கும் வரை தடியெடுத்தவன் தண்டல்காரன் என்ற ரீதியில் நிர்வாகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அக் காலத்திய யுத்த நிகழ்ச்சிகளையெல்லாம் ஆராய்ந்து பார்த் தால், சென்னையைச் சுற்றியுள்ள வாலாஜா, வந்தவாசி ஆரணி, காஞ்சிபுரம், வேலூர் சித்தூர் போன்ற ஊர்கள் எப் போதும் யுத்தபீதியின் பிடியில் இருந்து வந்தது தெரியவரும்.

ஸ்ரீ ஆதி சங்கரர் ஸர்வக்ஞ பீடமேறிய ஸ்ரீ காஞ்சியை பிரதான ஸ்தலமாகக் கொண்டு, வடக்கே கிருஷ்ணு நதி தீரம் முதல் தெற்கே பொருநை நதி தீரம் வரை சஞ்சாரம் செய்து, ஸ்ரீ பகவத் பாதாள் மேற்கொண்ட புனித கைங் கரியத்தை இடையருமல் நடத்தி வரும் ஸ்ரீ காமகோடி பீட மும் அக் காலத்திய யுத்த முழக்கத்தின் காரணமாக சோழ மண்டலத்தில் தாற்காலிக தலைமை ஸ்தலம் ஒன்றை நிறுவ வேண்டி வந்தது. அப்போதைய பீடாதிபதிகள் தஞ்சை ஜில்லாவில் பொன்னி நதியின் கரையிலுள்ள குடந்தையைத் தேர்ந்தெடுத்தார்கள், அது முதல் உள்நாட்டுக் குழப்பங் களும், யுத்தங்களும் குறுக்கிடும் காலங்களில் ஸ்ரீ காமகோடி பீடம் குடந்தையில் முகாம் செய்வதும், பின்னர் சகஜநிலை ஏற்பட்டதும் சஞ்சாரத்தைத் துவக்குவதும் வழக்கமாகி விட்டது.

இந்த முறையில்தான் 1792ல் ஸ்ரீ சுவாமிகளின் சென்னை விஜயத்திற்கான ஏற்பாடுகள் செய்யபட்டன. நகரத்தில் மக் களிடையே ஆத்மீகசக்தியும் வளரவேண்டும் என்று அக்கறை கொண்டவர்கள் போல் ஆட்சியினர் ஸ்ரீ சுவாமிகளின் விஜ யத்திற்கான கீழ்க்கண்ட உத்தரவைப் பிறப்பித்து தங்களா லான உதவியைச் செய்ய முன் வந்தனர்.

[“கும்பகோணத்திலிருந்து சென்னப் பட்டணத்திற்கு வந்துகொண்டிருக்கும் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் வடக்கே கிருஷ்ண நதி தீரம் முதல் தெற்கே திருநெல்வேலி வரை சஞ்சாரம் செய்வார்கள். 500 ஜனங்கள், மூன்று யானைகள், ஐந்து ஒட்டகங்கள், பத்து பல்லக்குகள், இருபது குதிரைகள், ஐம்பது எருதுகள் முதலிய பரிவாரங்களோடு வரும் சுவாமிகளுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் போதிய பாதுகாப்பு அளிப்பதோடுகூட, அன்னாரிடமிருந்து எந்தவித மான சுங்க வரியும் வசூலிக்கக்கூடாது”...

அப்போது சென்னப் பட்டணம் சிறப்புற விளங்கி வந்தது. பல புதிய பேட்டைகளும், பாக்கங்களும், சாலை களும், தோன்றலாயின. தவிர நகரசபை, நீதி மன்றம், கல்விச்சாலைகள் போன்ற அத்தியாவசியமான ஸ்தாபனங் களும் நிறுவப்பட்டன. ஒவ்வொரு தெருவும் தோன்றக் காரணமாக ஒரு கதையும் இருந்து வருகிறது.

இன்று பவழக்காரத் தெரு என்று அழைக்கப்படும் வீதி யில் அக்காலத்தில் பல யூதர் குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. வர்த்தக துறையில் பணப்புழக்கம் ஏற்படும்போதெல்லாம் அவதியுறுவோர் இந்த யூதர்களின் உதவியை நாடுவது சகஜ மாகிவிட்டது. பணமாகவும் பண்டமாகவும் கடனுக்குக் கொடுத்து குறியாக வட்டி வாங்கி, செல்வாக்கோடு இவர்கள் இருந்து வந்தனர். தவிர இவர்கள் அந்நிய நாடுகளிலிருந்து பவழத்தை ஏராளமாகத் தருவித்து பெருமளவில் வியாபாரம் செய்வார்கள். அதனாலேயே இவர்கள் வாழ்ந்து வந்த தெரு பவழக்காரத் தெரு வாகியது. காலப்போக்கில் இந்தத் தெருவை யூதர்கள் காலி செய்ததும், நமது நகரத்தார் சமூகம் தன்னுடைய தாக்கிக் கொண்டது. லேவாதேவியும் வர்த்தகமும் அன்று போல் இன்றும் பவழக்காரத் தெருவில் பிரகாசிக்கின்றன.

கிழக்கிந்தியக் கம்பெனியார் அப்போது நமது சென்னப் பட்டண கைத்தறித் துணியைக் கொண்டுபோய் உலகின்

# ஆத்ம போதம்

யத்பாஸா பாஸ்யதேSர்காதி பாஸ்யைர் யத்து ந பாஸ்யதே
யேந ஸர்வமிதம் பாதி தத் ப்ரஹ்மேத்யவ தாரயேத் ‖ 61

ஸ்வயமந்தர் பஹிர் வ்யாப்ய பாஸயந்நகிலம் ஜகத்
ப்ரஹ்ம ப்ரகாசதே வஹ்நி : ப்ரதப் தாயஸ பிண்டவத் ‖ 62



●

சூரியன் முதலியன எதனுடைய ஒளியி னல் ப்ரகாசிக்கிறதோ, பிரகாசிக்கும் இவை களால் எது ப்ரகாசிக்கவில்லேயோ, காண படும் 'இது' எல்லாம் எதனுல் காணப்படு கிறதோ அதுவே ப்ரஹ்மம்.

உள்ளும் புறமும் எங்கும் பரவி நின்று பழுக்கக் காய்ச்சின இரும்புபோல் எல்லா வற்றையும் பிரகாசிக்கச் செய்து தானும் ஒளிமயமாக நிற்கிறது.

●

"The mind whose dross has been cleared away by pranayama, becomes fixed in Brahman, therefore pranayama is declared.

—*Sankara.*

---

# ஆத்ம போதம்

ஜகத் விலக்ஷணம் ப்ரஹ்ம ப்ரஹ்மணோ் யத் ந கிஞ்சன
ப்ரஹ்மாந்யத் பாதி சேத் மித்யா யதா மருமரீசிகா 63

த்ருச்யதே ச்ரூயதே யத்யத் ப்ரஹ்மணோऽந்யந் ந தத் பவேத்
தத்வஞானச்ச தத் ப்ரஹ்ம ஸச்சிதாநந்த மத்வயம் 64

●



ப்ரஹ்ம லக்ஷணம் உலக லக்ஷணம் இரண்டும் வேறுபாடுடையது. ப்ரஹ்மத்தைவிட வேறான வஸ்து எதுவும் இல்லை. அப்படி இருப்பதாக தோன்றுவது எல்லாம் 'கானல் நீர்' போன்றதேயாகும்.

பார்ப்பது கேட்பது முதலியன யாவும் ப்ரஹ்மமேயன்றி வேறானது இல்லை. தத்வ ஞானத்தினால் ஸச்சிதானந்தமான இரணடற்ற ஒன்றேயான அந்த ப்ரஹ்மமாகத் தெரிகிறது.

●

Practice is alsolutely necessary. You may Sit down and listen to me by the hour every day, bnt if you do not practice, you will not get one Step farther.

—*Swami Vivekananda.*

---

பல பாகங்களிலும் வியாபாரம் செய்து பெரும் லாபம் அடைந்து வந்ததால், அவர்கள் நெசவாளரின் வாழ்க்கையில் அபார சிரத்தை காட்டி வந்தனர். இன்றைய நயினியப்ப நாயக்கன் தெருவும்,* காலாடிப்பேட்டையும், சிந்தாதிரிப் பேட்டையும் நெசவாளர் குடும்பங்களுக்காகவே பிரத்தி யேகமாக அமைக்கப்பட்டன. அந்தக் குறிப்பிட்ட பகுதி யிலோ, தெருவிலோ நெசவாளர்களையும், அத்தொழில் சம் பந்தப்பட்ட ஊழியர்களையும் தவிர யாரும் குடியிருக்கக் கூடாது என்று அரசாங்கம் தடையுத்தரவு ஒன்று பிறப்பித் தது. வண்ணாரப்பேட்டையும் இவ்விதமாகவே தோன்றியது.

பிளாக் டவுன் பிரதேசம் ஓரளவுக்கு வளர்ந்து வருகை யில் சுற்றுவட்டாரத்தில் உள்ள கிராமங்களில் திருஅல்லிக் கேணி முதன் முதலாக ஆங்கிலேய ஆட்சிக்கு உட்பட்டது. அப்போதிருந்த கோல்கொண்டா ராஜ்ய அதிகாரியிட மிருந்து இந்த கிராமத்தை ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 175 வாடகை அளித்து குத்தகை மான்ய சுதந்தரத்தோடு கம் பெனியார் வாங்கிக்கொண்டார்கள். கோல்கொண்டா ராஜ்யம் வீழ்ச்சியுற்றதும், குத்தகை மான்யம் சர்வமான்ய மாகிவிட்டது! இதைப் போலவே எழும்பூர், தொண்டை யார்பேட்டை, புரசவாக்கம், நுங்கம்பாக்கம் முதலிய கிராமங்களையும் டெல்லி முகலாயச் சக்ரவர்த்தியிடமிருந்து இனமாகவும், குத்தகை சுதந்தரத்தோடும் பெற்றுக்கொண் டார்கள். சிறிது காலம் கழித்து கர்நாடக நவாபின் நேர் ஆட்சியில் இருந்த வேப்பேரியும், பெரம்பூரும் வலுவில் கம்பெனியாரை வந்து அடைந்தன. 1749ல் போர்ச்சுகீசிய கிழக்கிந்திய சாம்ராஜ்யம் சிதறியதும் சாந்தோமையும், திருமயிலையும் ஆங்கிலேயர் சேர்த்துக் கொண்டார்கள்.

---

* திருவட்டூர் என்ற பெயருள்ள கிராமம் கம்பெனியார் ஆட்சியில் 'காலாட் பேட்டா' என்று மாறி, இப்போது 'காலாடிப்பேட்டை'யாக இருந்து வருகிறது!

இவ்வாறு மூன்று திசைகளிலும் வேகமாக வளர்ந்து கொண்டிருந்த சென்னப்பட்டனத்திற்கு ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள் 1792—93-ல் விசேஷ பரிவாரங்களுடன் திக்விஜயம் செய்திருக்கிறார்கள்!

## புனித விஜயங்கள்

கி. பி. 1840-ல் காஞ்சீபுரத்தில் ஸ்ரீ காமாக்ஷி அம்மன் ஆலயத்தில் திருப்பணிகள் பல தமது மேற்பார்வையிலேயே செய்து, மகா கும்பாபிஷேகத்தை நமது ஸ்ரீ சுவாமிகளின் *பராபரகுரு நடத்தி வைத்தார்கள். அக் காலத்தில் ஸ்ரீ மடம் கும்பகோணத்தில் இருந்தது. ஸ்ரீ காமாக்ஷி ஆலயம் சர்க்கார் நிர்வாகத்தில் இருந்துவந்தது. சர்க்கார் அளித்த ரூ. 5000 மான்யத் தொகை கும்பாபிஷேகம் நடத்தப் போதுமானதாக இல்லை. அந்தக் குறையை நிவர்த்திக்கும் நோக்கத்தோடு நமது ஸ்ரீ சுவாமிகளின் பராபர குரு காஞ்சிபுரத்தில் காமாக்ஷி அம்பாளை கலாகர்ஷணம் செய்து பாலாலயத்தில் அமர்த்திவிட்டு, சென்னைக்கு ஸ்ரீ காமாக்ஷி கும்பாபிஷேகத்திற்கு வேண்டிய நிதி திரட்ட வந்தார்கள். அப்போது சென்னை நகரில் அவர்கள் தங்கியிருந்த சமயம் ஒரு அற்புதம் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

ஒரு குறிப்பிட்ட இரவில் அன்னை காமாக்ஷி ஸ்ரீ ஆசாரியருடைய திருஷ்டியில் சிக்கும் சிடுக்குமா இருந்த கேசத்தோடும் அழுக்கடைந்த ஆடைகளோடும் தோன்றி, "என்னை பாலாலயத்தில் அமர்த்திவிட்டு, விசேஷ தைல அபிஷேகாதிகள் இல்லாமல் எத்தனை நாள் பணம் திரட்டுவதற்காக சுற்

---

* பராபரகுரு

இப்போதைய பீடாதிபதியை ஸ்ரீ ஆசாரியர் என்றும், இவருக்கு முந்தியவரை குரு என்றும், அவருடைய குருவை பரமகுரு என்றும், அவருக்கு முன்பு பீடத்திலமர்ந்திருந்த பரமேஷ்டி குரு என்றும், பரமேஷ்டி குருவின் குருவைப் பராபர குரு என்றும் அழைப்பது வழக்கத்தில் இருக்கிறது.

# ஆத்ம போதம்

ஸர்வகம் ஸச்சிதானந்தம் ஞான சக்ஷுர் நிரீக்ஷதே
அக்ஞான சக்ஷுர் நேக்ஷேத பாஸ்வந்தம் பானுமந்தவத் 65

ச்ரவணாதிபிருத்தீப்தோ ஞானாக்நி பரிதாபித:
ஜீவ: ஸர்வமலாந் முக்த: ஸ்வர்ணவத் த்யோததே ஸ்வயம் ॥ 66

★



ஞானக் கண்ணுடையவன் ஸச்சிதானந்த ரூபமான ஆத்மாவை காண்கிறான். குருடன் ஸூரியன் ப்ரகாசமாயிருந்தும் பார்க்க முடியாததுபோல் ஞானக் கண்ணில்லாதவன் ப்ரஹ்மத்தைக் காண்பதில்லை.

கேள்வி ஞானம் முதலியவற்றால் ப்ரகாசமடைந்து புடம் போட்ட தங்கம்போல் ஞானாக்னியில் எல்லா அழுக்குகளையும் பொசுக்கி தான் தானாகப் பிரகாசிக்கிறான்.

★

"In the Heart is the conscious light, the one Real; That art THOU"

—*Ramana*.


---

# ஆத்ம போதம்

ஹ்ருதாகாசோ திதோ ஹ்யாத்ம போத பாநுஸ்தமோSபஹ்ருத்
ஸர்வ வ்யாபீ ஸர்வ தாரீ பாதி ஸர்வம் ப்ரகாசதே 67

திக்தேச காலாத் யந பேக்ஷ்ய ஸர்வகம் சீதாதி ஹ்ருத்
நித்ய ஸுகம் நிரஞ்சனம்

ய : ஸ்வாத்ம தீர்த்தம் பஜதே விநிஷ்க்ரிய :
ஸ ஸர்வவித் ஸர்வகதோS ம்ருதோபவேத் 68



★

இதய ஆகாயத்தில் ஆத்ம ஞானம் என்ற ஆதவன் ஆக்ஞானமாகிய இருளைப்போக்கி, யாவற்றிலும் வியாபித்து நின்று ஆதாரமாக நிற்கிறது. அப்போது யாவும் ஆத்ம ஸ்வரூபமாகத் தோன்றுகிறது.

திக்கு, இடம், காலம், எதையும் எதிர்பாராது எங்கும் நிறைந்து நிற்பதும், குளிர் முதலியவற்றை நீக்குவதும், யாண்டும் சுகமானதும், நிர்மலமானதும் ஆகிய ஆத்ம ஸ்வரூபமாகிய நீரில் எவன் நீராடுகிருனே அவன் எல்லாக் காரியங்களும் அற்றவனுகி, எல்லா மறிந்தவனுக, எங்கும் இருப்பவனுக, மரணமற்ற பெருவாழ்வை அடைவான்.

★

By CONTINENCE, REVERENCE, and devotion to GURU Success comes after a long time.

—*Swami Vivekananda.*

---

றிக்கொண்டிருப்பாய்? பார், என் கோலத்தை! உனக்கு நிதி தேவையாக இருந்தால் என்னைப் பிரார்த்தித்தால் உடனே நான் தரமாட்டேனா?'' என்று அதட்டிச் சொன்னதாகவும், உடனே ஸ்ரீ ஆசாரியர் திடுக்கிட்டு எழுந்து, தமது பரிவாரங்களோடு காஞ்சிக்குப் புறப்பட்டு விட்டார்கள் என்றும் ஸ்ரீ மடத்தில் கர்ணபரம்பரை வரலாறு வழங்கி வருகிறது. ஸ்ரீ ஆசாரியர் திடீரென்று புறப்படவேண்டிய சங்கல்பத்தைக் கேட்டதுமே ஆங்கிலேய அதிகாரி (நகரக் காவலன்) நகரத்தின் ஆசார வாசலை வழக்கமாய் திறக்கும் சமயத்திற்கு வெகுநேரம் முன்பே திறந்து வைத்து ஸ்ரீ பீடாதிபதிகளின் உஷத் கால அவசர யாத்திரை தடைபடாமல் இருக்க உதவி செய்தார்.

அக்காலத்து ஸ்ரீ ஆசாரியர், காமாக்ஷியின் இந்த கும்பாபிஷேகத்திற்காக கும்பகோணத்திலிருந்து காஞ்சிக்கு வந்து அம்பிகைக்கு பாலாலயம் செய்து, சென்னை நோக்கிப் புறப்படும் வரையில் உள்ள விவரங்களெல்லாம் அவ்வப்போது ஸ்ரீ மடத்தில் எழுதப்பட்ட தினசரி குறிப்பில் (Diary) இருந்து தெரிய வருகிறது. வழியில் 'போர்டர்நோவோ' என்னும் பறங்கிப்பேட்டை துறைமுகத்திற்கு வரும்போது, அங்கிருந்த யுத்தக் கப்பலிலிருந்து சர்க்கார் ஸ்ரீ ஆசாரியரின் வரவை உத்தேசித்து குண்டுபோட்டு மரியாதை செய்திருக்கிறார்கள். அக்காலத்திய அந்த டயரியில் கும்பாபிஷேகத்திற்குப் பிறகு காஞ்சிபுரத்தைச் சுற்றியுமுள்ள கிராமங்களில் சஞ்சாரம் செய்த விவரங்கள் தெரிகின்றன. ஆனால் துரதிருஷ்ட வசமாக சென்னை நகரத்தில் யாத்திரை செய்த விவரமும் காஞ்சியில் கும்பாபிஷேகம் செய்த விவரமும் உள்ள டயரி பாகம் கைதவறிப் போயிருக்கிறது.

அந்த சமயம் சென்னப்பட்டணம் பிராந்தியத்திலும் சுற்றுப் புறத்திலும் பிரசித்தமாக இருந்தவரும் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தவருமான உதயகிரி வெங்கய்யா என்பவர் ஸ்ரீ சுவாமிகளுக்கு ஏராளமான செலவில் இரண்டு விமானங்களோடு கூடிய வெள்ளி அம்பாரி ஒன்று செய்து சமர்ப்பித்

தார். சென்னப்பட்டண விஜயமும், காமாக்ஷி கும்பாபிஷேக மும் சிறப்பாக நடந்தேறி ஸ்ரீ ஆசாரியர் முடிவாக காஞ்சி புரத்திலிருந்து புறப்படும் சமயம் அந்த க்ஷேத்திரத்து நான்கு வீதிகளிலும் இந்த அம்பாரியிலேயே ஊர்வலம் நடத்தி, அங்கிருந்து மேற்கே ஐந்து மைல் தூரத்திலுள்ள மடத்து கிராமமாகிய அம்பிக்கு முகாமை மாற்றியதாகத் தெரிகிறது.

மேற்படி அம்பாரியைச் செய்து கொடுத்த ஸ்ரீ வெங்கய் யாவே பூவிருந்தவல்லிக்கு நாலு மைல் தூரத்திலுள்ள பாப்பான் சத்திரத்திலுள்ள இரண்டு சத்திரங்கள், விஷ்ணு ஆலயம் சிவாலயம் எல்லாம் கட்டி, சிவாலயத்தில் ஆதி சங்கரர் பிரதிஷ்டை ஒன்றும் செய்திருக்கிறார். ஸ்ரீ வெங் கய்யா சமர்ப்பித்த அம்பாரி ஸ்ரீ மடத்தில் இப்போதைய நமது ஸ்ரீ பெரியவர்களின் பால்ய காலம் வரையில் உபயோ கத்தில் இருந்தது.

அந்தப் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே அந்த ஆசாரியருக்கு அடுத்த ஆசாரியரான (பரமேஷ்டி குரு) ஸ்வாமிகள் ('இளையாத்தாங்குடி பெரியவாள்') காலத்தில் சென்னைக்கு மற்றும் இரு விஜயங்கள், முறையே கி. பி. 1865 லும், 1883லும் நிகழ்ந்தன.

இந்த சந்தர்ப்பத்தில் சென்னப் பட்டணத்தோடு இணைந்த மற்றும் இரு மகாபுருஷர்களைப் பற்றிக் குறிப் பிடுவது பொருத்தமாயிருக்கும். முளைக்கப் போகும் நகரத் தைப் புனிதமாக்கவந்த இவர்களில் 16, 17-வது நூற்றாண்டு களைச் சேர்ந்த மகான் அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் முதலாம வர், கிண்டியை யடுத்த வேளச்சேரி கிராமத்தை தமது வாசஸ்தலமாகக் கொண்டு ஸ்ரீ தீக்ஷிதர், அங்கு அநேக யக்ஞங்களைச் செய்து, அவ்வூரிலுள்ள புராதன சிவ ஸ்தலத்தையும், சமீபத்தில் உள்ள பாடல் பெற்ற திருவான்மியூர் கோவிலையும் வழிபட்டு வந்தார். அவர் யக்ஞ அபவிருத ஸ்நானம் செய்த தீர்த்தம் "அப்பய்ய

குளம், அப்பய்ய தீக்ஷிதர் குளம்," என்கிற பெயர் களோடு இப்போதும் கிண்டி ராஜபவனத்தின் தோட்டத் திற்குள் தெற்குக் கோடியில் அமைந்திருக்கிறது. அவதார புருஷர் அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள், அக்காலத்தில் தத்துவ ஞானிகள் பரிசிலனை செய்துவந்த அத்வைத, சிவாத்வைத, வைஷ்ணவ விசிஷ்டாத்வைத சாஸ்திரங்கள் மூன்றுக்கும் சம திருஷ்டியுடன் விரிவுரை பல அருளி, தொன்று தொட்டு தலைமுறை தலைமுறையாக வந்துகொண்டிருந்த பல சந்தே கங்களைத் தீர்க்க உதவினார்கள். பக்தியின் எல்லையை அனுப வத்தில் கண்டறிந்த இந்த மகா புருஷரின் பாத தூளி விசே ஷத்தால் கிண்டி ராஜபவனம் இன்று ரிஷி ஆச்ரமத்தைப் போல் மான்கள், பட்சிகள் இவைகள் சுதந்தரமான உரிமையுடன் வாழ விஸ்தாரமான இயற்கை வளமாக உலகப் புகழ் பெற்று விளங்குகிறது என்றும் கூறலாம்.

19-ம் நூற்றாண்டையே சிறப்பிக்க அவதரித்த ஒரு மஹானின் அருள் நோக்கைப்பெறும் பாக்கியமும் சென்னப் பட்டணத்துக்குக் கிடைத்தது. இதற்கு, கி. பி. 1823-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் சிதம்பரம் நடராஜப் பெரு மான் ஆலயத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை ஞாபகப்படுத் திக்கொள்ளவேண்டும். அப்போது திரு ராமையாப் பிள்ளை என்னும் சிவநேசச் செல்வர் புதிதாகத் தமக்குப் பிறந்த ஆண் குழந்தையைக் கரத்திலேந்தி மனைவி பின் தொடர வந்து, தில்லையம்பலநாதனின் சந்நிதியில் தரிசனத்துக்குக் காத்திருந்தார். குழுமியிருந்த பக்தர்களில் ஒருவராக நின் றிருந்த வயோதிக அந்தணர் (பிற்காலத்தில் அப்பய்ய தீக்ஷி தர் ஒருவர்) இக்குழந்தையை நெருங்கிச் சென்று பார்த்து விட்டு உற்சாகத்தோடு, "வருங்காலத்தில் இவன் பிரசித்தி பெறும் ஒரு யோகியாக விளங்குவான்: நடராஜன் அருள் இவ னிடம் பூரணமாக இருக்கிறது" என்று கூறி, குழந்தையை ஆசீர்வதித்தார். அக்குழந்தைதான் பின்னர் அருட்பெருஞ் ஜோதி, திரு அருட்பிரகாச வள்ளலார் என்ற சிறப்புப் பெய ருடன் தமிழகத்தையே உய்விக்க வந்த ஸ்ரீ ராமலிங்க சுவாமி கள். தமது தாய் மாமன் இல்லத்தை சென்னையை அடுத்த

பொன்னேரியில் கொண்டிருந்த ஸ்ரீ சுவாமிகள், தந்தை ராமையாப் பிள்ளை காலமான பிறகு சென்னையிலேயே வந்து தங்கி, பால்யத்திலிருந்தே பக்தியில் திளைத்து திருவொற்றியூர் தியாகேசன் மீதும், சென்னை கந்தசாமி கோயில் தமிழ்த் தெய்வத்தின் மீதும் நெஞ்சுருகும் பாமாலைகளைப் பாடி, வளரும் பட்டணத்தை வாழ்வித்தார்.

ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள் சென்னையின் வளர்ச்சியிலும் பாதுகாப்பிலும் விசேஷ சிரத்தை கொண்டு 'கந்த கோட்டத்துள் வளர் தலமோங்கு கந்தவே'ளைக் குறித்துப் பாடிய துதிப் பாடல்களை அறியாதவர் இருப்பதற்கில்லை.

சென்னப் பட்டணத்தில் அருட்பெருஞ் ஜோதி வள்ளலார் ஜீவிய வந்தராக வாழ்ந்து வந்த காலத்தில் நமது ஸ்ரீ சுவாமிகளின் 'பரமேஷ்டி குரு' ஸ்ரீ காமகோடி பீடாதிகள் ஒருமுறை விஜயம் செய்திருக்கிறார்கள். கி. பி. 1855ல் நிகழ்ந்த இந்த விஜயத்தின்போது ஸ்ரீ ஆசாரிய சுவாமிகளுக்கும் வள்ளலாருக்கும் சந்திப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். வள்ளலாரைப் பற்றிய நூல்களில் ஆசார்ய ஸ்வாமிகளோடு தொடர்பு கொண்ட சில விவரங்கள் காணப்படுகின்றன.

ஸ்ரீ மடத்தின் கணக்குப் புத்தகத்தில் இந்த விஜயம் பற்றிய வரவு செலவுகள் எல்லாம் இருக்கின்றன. அவற்றில் கவனத்தைக் கவரும்படியான பெரிய காணிக்கைகளும் இல்லாமலில்லை. ஆரிய வைசிய கோமட்டிகளைச் சேர்ந்த காகுமானி சுப்பராய செட்டியார் ஆயிரம் தங்க நாணயங்களை ஸ்ரீ ஆசாரியரின் பாதங்களில் சமர்ப்பித்திருக்கிறார்கள். அத்தேபல்லி வேங்கடராம செட்டியார், ஸ்ரீ சந்திரமௌளீச்வரருக்கு ஆயிரக்கணக்கில் விலைமதிப்பிடக்கூடிய தங்க நாகாபரணம் ஒன்றைச் செய்து, அந்த சமர்ப்பணத்தைப் பற்றிய சுலோகத்தையும் அதிலேயே எழுதி அளித்திருக்கிறார். இது இன்றும் ஸ்ரீ சந்திரமௌளீச்வரருக்கு உபயோகப்பட்டு வருகிறது.

அக்காலத்தில் சென்னை டவுன் பாகத்தில் தெலுங்கு, தமிழ் செட்டி வர்த்தகர்களே விசேஷமாக வாழ்ந்து வந்தனர். அவர்களில் ஆயிரவாள் பேரி வைசியர்களும் ஆரிய கோமட்டி வைசியர்களுமே முக்கியமானவர்கள். வர்த்தகத் துறையில் அவர்களுக்கு உள்ள அநுபவமும், நுட்பமும் பிரசித்தமானவை. அந்நிய நாட்டினர் பலருக்கு மத்தியில் மிகவும் வெற்றிகரமாக வியாபாரம் செய்து பெருநிதி சேமித்தவர்கள் இந்தப் பிரிவினர். அவர்களுடைய ஆத்மீகமான பக்தியை வெளிக்காட்டிக்கொள்ள ஸ்ரீ ஆசாரியருடைய விஜயம் ஒரு அரிய சந்தர்ப்பத்தை அளித்தது.

ஆற்காடு நெடுஞ்சாலை சென்னப் பட்டணத்தை வெளியூர்களோடு இணைக்கும் பழைய கால நெடுஞ்சாலைகளில் ஒன்ருகும். நமது ஸ்ரீ சுவாமிகளின் பரமேஷ்டி குரு கி. பி. 1865-ல் காஞ்சிபுரத்திலிருந்து பூவிருந்தவல்லி வந்து அங்கிருந்து இந்த ஆற்காடு நெடுஞ்சாலை வழியாக சென்னப் பட்டணத்தின் ஒருபகுதியான நுங்கம்பாக்கத்தை அடைந்து, குரோதன வருஷம் ஆனி மீ 21ஃ சென்னையில் பட்டணப் பிரவேசம் செய்திருக்கிருர்கள். இந்த வைபவம் நிகழ்ந்த பின்னர், ஸ்ரீ ஆசாரியர் கொல்லவார் அக்கிரகாரத்தில் இரண்டொரு தினங்கள் முகாமிட்டார்கள். அதற்குப் பிறகு நகரத்தின் மத்தியில் வர்த்தகத் துறையினரின் கேந்திரஸ்தானமாக விளங்கும் கொத்தவால்சாவடியில் ஊர்வலமாகப் பிரவேசித்து அப்பிராந்தியத்திலேயே வியாச பூஜை நடத்தி ஸ்ரீ ஆசாரியர் சாதுர்மாஸ்ய சங்கல்பமும் ஆரம்பித்தார்கள்.

மகாராஜாக்களும், ஜமீன்தார்களும், ஜாகிர்தார்களும் வழங்கிய மான்யங்களைக் காட்டிலும் பாமர மக்களின் அன்பு கடந்த பக்தி பூர்வமான காணிக்கைகளையே தாம் பெரிதும் விரும்புகிருேம் என்று அறிவிப்பது போன்று ஸ்ரீ ஆசாரியர் அந்தக் காலத்தில் நகரத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று, அவரவர் சக்தியானுசாரம் செலுத்தும் காணிக்கைகளை ஏற்று. தம்மை ஆச்ரயிக்க வந்த மக்களை அனுக்கிரகித்தார்கள்.

ஒரு வருஷ காலம் சென்னை முத்தியாலுப்பேட்டை, பெத்தநாயக்கன்பேட்டை, கொல்லவார் அக்கிரகாரம் திருவொற்றியூர் போன்ற இடங்களில் முகாமிட்டு பக்தர்களைக் குதூகலத்திலாழ்த்திய பிறகு ஸ்ரீ ஆசாரியர் காஞ்சிபுரத்திற்குத் திரும்பினார்கள். அவர்களுடைய இந்த விஜயத்தின்போது குறிக்கப்பட்ட ஸ்ரீ மடத்து தஸ்தாவேஜுகளில் சென்னப் பட்டணத்தோடு இணைந்துள்ள திருஅல்லிக்கேணி, மயிலை, எழும்பூர், பெரம்பூர் போன்ற இடங்களின் பெயர்கள் அதிகமாகத் தென்படவில்லையாதலால் அக்காலத்தில் இந்தப் பகுதிகளில், விசேஷமாக மக்கள் குடியேறவில்லை என்று ஊகிக்கலாம்.

ஆனால், இளையாத்தாங்குடி பெரியவாள் என்று ஸ்ரீமடத்தாரால் அழைக்கப்படும் இந்த ஆசாரியரே, பதினெட்டு வருஷங்கள் கழித்து ஆந்திர தேசத்தில் பொப்பிலி, காக்கிநாடா, பெத்தாபுரம், பெஜவடா, நெல்லூர் போன்ற ஸ்தலங்களில் சஞ்சாரம் செய்யும் மார்க்கத்தில் கி.பி. 1883-ல் மீண்டும் சென்னப் பட்டணத்திற்கு விஜயம் செய்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் பட்டணம் பூரணமாக வியாபித்து விட்டது என்று சொல்லும் அளவுக்கு வளர்ந்திருந்தது.

ஓர் ஊரும் அதன் பெயரும் பிரசித்தி அடையும்போது ஆராய்ச்சியாளர்களுக்கு உற்சாகம் கரைபுரண்டோடுகிறது. அந்த ஊர் ஏற்படக் காரணமாயிருந்த பல வரலாறுகளைத் திரட்டுவதில் சிலர் முனைகிறார்கள், வேறு சிலரோ ஊரின் நாமதேயத்தை நிர்ணயம் செய்ய ஆராய்ச்சியில் ஈடுபட்டு, சரித்திர ஏடுகளைப் புரட்டி, கதைகளை ஆதாரங்களாகக் காட்டி பல பெயர்களை அதற்குச் சூட்டுகிறார்கள். புகழ் எய்திய ஊருக்கு ஆராய்ச்சியாளர்கள் தரும் விவரங்கள் எல்லாம் நாளடைவில் அணிகலன்களாகத் திகழ்கின்றன.

நமது இன்றைய சென்னப் பட்டணத்தையே எடுத்துக் கொள்வோம். ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் சார்பில் பிரான்ஸிஸ்டே அன்று குத்தகை மான்ய சுதந்திரத்

# குருவஷ்டகம்



★

சரீரம் ஸுரூபம் ததா வா களத்ரம்
யசஸ்சாரு சித்ரம் தனம் மேரு துல்யம்
மனஸ்சேன்ன லக்னம் குரோரங்க்ரி பத்மே
தத: கிம் தத: கிம் தத: கிம் தத: கிம். 1

களத்ரம் தனம் புத்ரபௌத்ராதி ஸர்வம்
க்ருஹம் பாந்தவா: ஸர்வமேதத்தி ஜாதம்
மனஸ் சேன்ன லக்நம் குரோரங்க்ரி பத்மே
தத: கிம் தத: கிம் தத: கிம் தத: கிம்

★

# குருவஷ்டகம்



ஷடங்காதிவேதோ முகே சாஸ்த்ர வித்யா
கவித்வாதி கத்யம் ஸுபத்யம் கரோதி
மனஸ்சேன்ன லக்நம் குரோரங்க்ரி பத்மே
தத: கிம் தத: கிம் தத: கிம் தத: கிம் 3

விதேசேஷு மான்ய: ஸ்வதேசேஷு தன்யா:
ஸதா சார வ்ருத்தேஷு மத்தோ ந சான்ய:
மனஸ்சேன்ன லக்நம் குரோரங்கிரி பத்மே
தத: கிம் தத: கிம் தத: கிம் தத: கிம். 4

தோடு பெற்ற மூன்று மைல் நீளம், கால் மைல் அகலத்திற் குட்பட்ட பிரதேசம் அன்று கண்ட மேனிக்கு அழிவில்லாமல் அதே நிலையிலிருந்திருந்தால் அதைப்பற்றி யாரும்—சரித்திர ஆசிரியர்களும் சரி—ஆராய்ச்சியாளர்களும் சரி—நாமும் சரி—சிந்தித்துப் பார்க்கக் கூட மாட்டோம்.

இன்று ஐம்பது சதுர மைல் பிரதேசத்தைத் தன்னுள் அடக்கிக் கொண்டு, துறைமுகம், சர்வகலாசாலை, பயனுன உயர்தரப் பள்ளிகள், மாபெரும் நீதிமன்றங்கள், நியதியான நூல் நிலையங்கள், நோயற்ற வாழ்வுக்கான மருத்துவ விடுதிகள், கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக அமையும் பொருட் காட்சி சாலைகள், ஆத்மீக உயர்வையளிக்கும் புனித ஸ்தலங்கள், நீந்தி விளையாடக் கூடிய நீர்நிலைகள், உத்யான வனங்கள், தர்ம சத்திரங்கள், நாட்டு வளத்திற்கான தொழிற்கூடங்கள், திரைகடலோடித் திரவியம் தேடும் வர்த்தக ஸ்தாபனங்கள் முதலியவற்ருேடு அகண்ட பாரதத்தின் நட்சத்திர நகரங்களில் ஒன்ருக சென்னப்பட்டணம் திகழ்வதாலேயே இதன் பூர்வாசிரமத் தன்மையைத் துருவிப் பார்த்து மகிழ்ச்சியடைகிருேம்.

சென்னப்பட்டணம் என்றும் 'மெட்ராஸ்' என்றும் சகஜமாக நாம் கூறிவரும் பெயர்கள் எப்படியெல்லாமோ ஆரம்பித்து, தேய்ந்து திரிந்து இவ்வாறு வழக்கில் வந்திருக்கிறது. 'சென்னப்ப நாயக்கன்' என்பவரின் பெயரையே இப்பிரதேசம் தாங்கி நிற்கிறது என்பது ஒரு ஆராய்ச்சி! 'மதரேசன்' என்ற மீனவர் தலைவரின் பெயரால் 'மதரேசன் பட்டணம்' என்று வழங்கி வந்ததாகவும், பின்னர் திரிந்து இன்றைய 'மெட்ராஸ்' ஆகிவிட்டதாகவும் ஒரு ஆராய்ச்சியாளர் கூறியிருக்கிருர். அண்டையில் உள்ள 'சான்தோமில்' வாழ்ந்து வந்த போர்ச்சுகீசியரால் இப்பெயர் சூட்டப் பெற்றதாகவும் ஒரு வரலாறு இருக்கிறது. 'மேட்ரி—டி—டியஸ்' என்ற மாதா கோவிலைப் போர்ச்சுகீசியர்கள் மயிலைப் பிரதேசத்தில் கட்டினர்கள் என்றும், அங்கு வாழ்ந்து வந்த


ஜனங்கள் அவ்வளவு நீளமான பெயரைச் சொல்ல முடியா மல் குறைத்தும் மாற்றியும் 'மெட்ராஸ்' என்று குறிப்பிட்டு வந்ததாலேயே இப்பெயர் நிலைத்து விட்டது என்றும் ஒருவர் கூறியுள்ளார்.

இவ்வாறு பல விளக்கங்கள் இருந்தபோதிலும், சென் னப்பட்டணம் என்று பெயர் வந்ததற்குக் கூறப்படும் கார ணங்களில் ஒன்று மட்டும் நம் கருத்தைக் கவருவதாக உள்ளது.

அக்காலத்தில் கோட்டைப் பகுதியில் வெள்ளையர் வாழ்ந்து வந்த இடத்தில் சென்னக்கேசவர், சென்ன மல்லீச் சுரர் ஆலயங்கள் இருந்ததாகவும், அந்தப் புராதன ஆலயங் களைத் தோற்றுவித்த பக்தர் கர்நாடக ராஜ்யத்தைச் சேர்ந் தவர் என்றும், அவருடைய அபிமான மூர்த்தியான 'சென் னக் கேசவ'ப் பெருமாளின் பெயரில் 'சென்னி கேசவபுர'மா யிருந்து பிறகு 'சென்னப்பட்டணம்' ஆயிற்று என ஒரு வர லாறு பாரம்பர்யமாக வந்துகொண்டிருக்கிறது. இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு மணலி திரு. முத்துகிருஷ்ண முதலி யார் என்னும் பெரியார், பழைய ஆலயங்களிலிருந்த மூர்த்தி களை எடுத்துப்போய், இன்று நாம் தரிசித்துவரும் சென்னக் கேசவர் 'சென்ன மல்லீச்சுரர்' ஆலயங்களை எழுப்பினர். ஆக, 'சென்னப் பட்டணம்' என்று ஸ்தல தெய்வத்தின் பெய ரால் ஏற்பட்ட நாமதேயமே பட்டணத்திற்கு நிலைத்து விட்டது.

சென்னப் பட்டணத்தோடு சேர்ந்துள்ள திருமயிலைக்கும் அக்காலத்தில் வெவ்வேறு பெயர்கள் இருந்து வந்துள்ளன. ஏறக்குறைய இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு இப் பிரதேசத்திற்கு 'மயிலார்ப்பு', மயூர சப்த பட்டணம் (பாலி மொழியில் உள்ள பௌத்த நூலில் இப்பெயர் காணப்படு கிறது) என்ற பெயர்கள் வழங்கி வந்ததாகத் தெரிகிறது. அம்பிகை மயில் உருக்கொண்டு ஈசனை வழிபட்ட இந்த ஸ்தலம் பிற்காலத்தில் பெயர் மாறி, இன்றைய மயிலாப்பூர் ஆகிவிட்டது.

# குருவஷ்டகம்



க்ஷமா மண்டலே பூபபூபால ப்ருந்தை:
ஸதா ஸேவிதம் யஸ்ய பாதார விந்தம்
மனஸ்சேன்ன லக்நம் குரோரங்கிரி பத்மே
தத: கிம் தத: கிம் தத: கிம் தத: கிம். 5

யசோ மே கதம் திக்ஷு தானப்ரதாபாஜ்
ஜகத்வஸ்து ஸர்வம் கரே யத் ப்ரஸாதாத்
மனஸ் சேன்ன லக்நம் குரோரங்க்ரி பத்மே
தத: கிம் தத: கிம் தத்: கிம் தத: கிம் 6

# குருவஷ்டகம்



●

நபோகே நயோகே ந வா வாஜிராஜௌ
ந காந்தாமுகே நைவ வித்தேஷு சித்தம்
மனஸ்சேந்ந லக்னம் குரோரங்க்ரி பத்மே
தத: கிம் தத: கிம் தத: கிம் தத: கிம். 7

அரண்யே ந வா ஸ்வஸ்ய க்ருஹே ந கார்யே
ந தேஹே மனோ வர்த்ததே மே த்வனர்க்யே
மனஸ்சேன்ன லக்னம் குரோரங்க்ரி பத்மே
தத: கிம் தத: கிம் தத: கிம் தத: கிம். 8

குரோரஷ்டகம் ய: படேத் புண்ய தேஹி
யதிர் பூபதிர் ப்ரஹ்மசாரி ச கேஹி
லபேத் வாஞ்சிதார்த்தம் பதம் ப்ரஹ்ம ஸம்ஞும்
குரோருக்த வாக்யே மனோ யஸ்ய லக்னம். 9

●

இவ்வாறு காலப்போக்கில் ஊர்களும் அவற்றிலுள்ள ஆலயங்களும், பலவகையில் மாறியிருப்பதற்கு எத்தனையோ உதாரணங்களைச் சொல்லலாம். பறங்கிமலை (St. Thomas Mount)யில் மலை உச்சியில் நமது தேவாலயம் ஒன்று இருந்ததாகவும், அந்த இடத்திலே எழுப்பப்பட்ட மாதா கோவிலைத்தான் இன்று நாம் பார்க்கிறோம் என்றும் சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். அதே போன்று பல்லாவரம் மலையில் மகேந்திர பல்லவன் எழுப்பிய சிலாசாஸனங்களோடு கூடிய சிவாலயமே உருமாறி இன்றைய மசூதியாக இருக்கிறது என்றும் தெரிகிறது.

கி. பி. 1857-ம் ஆண்டில் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியாருக்குச் சோதனையாக வந்த சிப்பாய்க் கலகம் பலமிழந்து போயிற்று. அதைத் தொடர்ந்து அந்நிய ஆட்சியில் இந்நாட்டினருக்கு நம்பிக்கை ஏற்படச் செய்ய 1858-ல் விக்டோரியா மகாராணியார் பிரகடனம் வெளியிட்டார். உடன் சென்னப் பட்டணமும் முன்னேறியது. நகர பந்தோபஸ்துக்காக கட்டப்பட்ட சுவர் இடிந்துபோய், அதன் ஞாபகமாக *வால்டாக்ஸ்ரோடு, யானை கௌனி இரண்டும் நிலைத்தன. தவிர, கல்வி ஸ்தாபனங்கள் பல தோன்றின. தபால் தந்தி வசதியும் ஏற்பட்டது. போக்குவரத்துக்கான சாதனங்களும் நகரத்தில் அதிகமாயின, இரட்டைக் குதிரை,

---

* ஆங்கிலேய வர்த்தகர்கள் சிக்கனத்திற்குப் பேர் போனவர்கள், பட்டணத்தைச் சுற்றியிருந்த பந்தோபஸ்து அரணைப் பழுதுபார்த்து, இடிந்துபோன பாகத்தைப் புதுப்பிக்க வேண்டுமென நகரவாசிகள் கோரியபோது கம்பெனியார், சுவர் கட்ட சுங்கவரி செலுத்தும்படி ஜனங்களை வற்புறுத்தினார்கள். அச் சம்பவத்தின் பெயரைத் தாங்கியே வால்டாக்ஸ் ரோடு (Wall tax Road சுவர் வரிச் சாலை) தோன்றியது. இங்கே சுவரின் மத்தியில் இருந்த ஆசார வாசலைத்தான் யானை கௌனி (Elephant Gate) எனக் குறிப்பிடுகிறோம்.

நாலு குதிரை பீட்டன்களோடு மின்சார விசை வண்டி (Tram)யும் போட்டி போடத் தொடங்கியது. நகரம் அபி விருத்தி அடைய அடைய நகர மாந்தர்களும் நூதன வாழ்க் கையை மேற்கொள்ளலானார்கள். அன்னிய நாட்டு வர்த் தகர்களோடும் அறிஞர்களோடும் பழகும் வாய்ப்புக் கிடைத் தவர்கள், தங்கள் செல்வாக்கை உபயோகித்து நமது மதம், கலாசாரம் முதலியவற்றில் அன்னியருக்கும் அக்கறை ஏற் படச் செய்தார்கள்.

இந்த நிலையில்தான் கி. பி. 1865ல் சென்னப்பட்ட ணத்துக்கு விஜயம் செய்த ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள் (இளையாத்தாங்குடி ஸ்வாமிகள்) மீண்டும் 1883-ம் ஆண்டில் டவுன் பக்கத்தில் முகாமிட்டார்கள். அந்த வருஷம் ஜூலை மாதம் 8-ம் தேதியன்று, பல்லாவரம், சைதாப் பேட்டை வழியாக வந்து நுங்கம்பாக்கத்தில் பகல் பொழுது தங்கியிருந்து, இரவு *யானைமேல் அம்பாரியில் பட்டணப் பிரவேசம் செய்தார்கள்.

முன் தடவை அவர்கள் விஜயம் செய்தபோது அரிய கைங்கரியங்கள் பல செய்து காணிக்கைகளும் சமர்ப்பித்த பாபய்ய செட்டியார், நாட்டாண்மை வேலு செட்டியார், சர்க்கரை செட்டியார், அம்மணி அம்மாள் (மணலி முதலி யார் குடும்பம்) *காகுமானி வம்சத்தார் போன்ற பிரபலஸ்

---

* 1907ம் வருஷத்திற்கு முன்பு அநேகமாக யாத்திரை யில் இரண்டு நாட்களுக்கொரு தடவை பக்தர்கள் ஸ்ரீ ஆசா ரியருக்கு யானை மேல் அம்பாரியில் ஊர்வலம் செய்வித்தார் கள். சென்னையிலும் அந்த வைபவங்கள் அம்மாதிரியே நடந்ததற்குச் சான்றாக அக்காலத்திய சென்னை நகர போலீஸ் லைசென்ஸுகள் மடத்தில் ரிகார்டில் உள்ளன.

* இந்த காகுமானி வம்சத்தார்களால் 20 லக்ஷம் ரூபாய் மூலதனத்தில் தர்ம ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டு இன்றும் நடந்து வருகிறது.

# ஸ்ரீ தோடகாஷ்டகம்



விதிதாகில-சாஸ்த்ர-ஸுதா-ஜலதே
மஹிதோபநிஷத்-கதிதார்த்தநிதே—
ஹ்ருதயே கலயே விமலம் சரணம்
பவ சங்கர தேசிக மே சரணம் ‖ 1

கருணாவருணாலய பாலய மாம்
பவஸாகர துக்க-விதூந-ஹ்ருதம்—
ரசயாகில தாசந-தத்வவிதம்
பவ சங்கர தேசிக மே சரணம் ‖ 2

---

தர்களின் குடும்பத்தினரும், மற்றும் பல பேரி செட்டிமார் களும் ஸ்ரீ ஸ்வாமிகளிடம் பக்தி பூண்டு அவர்கள் விஜயத் தைச் சிறப்புறச் செய்தார்கள்.

அந்த சமயம் ஸ்ரீ மடத்தின் முகாம் கொல்லவார் அக்ர காரம், கன்னைய செட்டி பங்களாவில் அமைந்தது. சபா நாயகர் ஆதிநாராயண ஐயர் [ஸ்ரீ. வி. கிருஷ்ணஸ்வாமி அய்யரோடு சேர்ந்து இந்தியன் பாங்கியை ஆரம்பித்தவர்] அன்றையதினமே பாதபூஜை ஒன்று நடத்தி வைத்தார்கள். அதற்கு மறுதினம் வியாஸ பூஜை நடந்தது.

அக் காலத்தில் நகரப் பகுதி மட்டுமே ஜன நெருக்க முள்ளதாக இருந்திருக்கிறது. தவிர நாளுவிதமான ஜனங் களும் அங்கு கூடி வாழ்ந்திருக்கிறார்கள். தென்னாட்டவர். வட நாட்டவர், ஆந்திரதேசத்தவர். கன்னட ராஜ்யத்தார், குஜராத்தியர் ஆகியோர் தங்களிடையே உள்ள ஜாதி மதப் பிரிவுகளைச் சிறிதும் பாராட்டாமல் ஒற்றுமையுடன் வசித்து வந்திருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஸ்ரீ ஸ்வாமி களை ஒரு தினம் தரிசிக்க வந்தவர்களின் பட்டியலைப் பார்ப் போம்.

10-7-1883ல் காணப்படும் கணக்கு குறிப்பில், கிருஷ்ணஜி டாக்கர்—ராமகிருஷ்ண மேத்தா—சதாசிவசலத்து, சிவராம தரவாடி, கிருஷ்ணஜிசலத்து, விசுவநாத தரவாடி, வேங்கட சுப்பராயலு செட்டி, சிவசங்கர தவே. அம்பா சங்கர டாக் கர். சுந்தராபாயி, வசந்தபுரம் வெங்கய்யர், அம்பா சங்கர தரவாடி, தஞ்சாவூர் துளஜாராம் ராமராயர், ராமஸ்வாமி செட்டியார், ராஜா ஈஸ்வரதாஸ், குரு சுப்பய்ய செட்டி, சிந்தகலகுண்டு வெங்கய்ய செட்டி, புதுச்சேரி குங்கிலியம் கோபால செட்டியார் சம்சாரம் போன்றவர்கள் தகுந்த றயில் பொன்னுருவிலும் வெள்ளியுருவிலும், வஸ்திர பிலும் விதவிதமான காணிக்கைகள் செலுத்தி ஸ்வாமி தரிசனம் செய்தார்கள்.

கன்னைய செட்டி பங்களாவில் ஸ்ரீ ஆசாரியருடைய முகாம் சுமார் மூன்று மாத காலத்திற்கு நீடித்திருந்தது. ஸ்ரீ மடத்தின் அக்காலத்து வரவு செலவு கணக்குகளைப் பார்வையிடும்போது பிட்டி முனுசாமி செட்டியார் (ஸர் பி. டி. தியாகராஜ செட்டியாரின் முன்னோர்களில் ஒருவர்) சவலை ராமஸ்வாமி முதலியார் மணலி வைத்தியலிங்க முதலியார், (மணலி முத்துகிருஷ்ண முதலியாரின் வம்சத்தைச் சேர்ந்தவர்) ஹைகோர்ட் ஜட்ஜ் முத்துஸ்வாமி ஐயர் போன்றோரின் பெயர்களும், அவர்கள் செலுத்திய காணிக்கை விவரங்களும் தெரிகின்றன.

ஸ்ரீ ஸ்வாமிகள் பின்னர் திருவட்டுருக்குத் தமது முகாமை மாற்றினார்கள். அங்கு பத்து தினங்கள் தங்கியிருந்த பிறகு மீண்டும் கன்னைய செட்டியார் பங்களாவில் வந்து, அங்கிருந்தபடியே கொத்தவால்சாவடி வட்டத்தில் தோன்றியிருந்த வீதிகள் எல்லாவற்றிலும் யானை மேல் அம்பாரியில் ஊர்வலம் வந்தார்கள். இக்காலத்தில் கன்னிகா பரமேச்வரி கோயிலுக்கும் ஸ்ரீ சுவாமிகள் விஜயம் செய்தார்கள். அங்கு கோயில் சார்பில் பாதபூஜைக்காக ஆயிரம் ரூபாய்கள் சமர்ப்பிக்கப்பட்டன. திரு. கன்னையா செட்டியாரும் ஆயிரம் தங்க நாணயங்களைக் காணிக்கையாகச் செலுத்தினர். தெஸநாகுலு சுப்பிரமணிய செட்டியார் என்பவர் பாத பூஜையும் செய்வித்து. ஸ்ரீ சந்திரமௌளீச்வரருக்குப் பிரீதியாக ஐந்தடுக்குக் கற்பூர ஹாரத்தி தட்டு ஒன்றும் செய்து அளித்தார்.

அதற்குச் சில தினங்கள் கழித்து ஸ்ரீ ஸ்வாமிகள் முத்தியாலுப்பேட்டையில் யானை மேல் அம்பாரியில் வீதிவலம் வந்து, தர்மசிவாசார்ய மடத்தில்தங்கி நவராத்திரி பூஜையை ஆரம்பித்தார்கள். அச்சமயம் அந்த வட்டாரத்தில் முக்யஸ்தர்களாயிருந்த தம்பு வீராசாமி செட்டி, ஆயிரவாள் பிரிவினரான பார்த்தசாரதி செட்டி, ஏழுமலை செட்டி, சின்ன காளீய செட்டி, அப்பாவு செட்டி, பாக்கம் சபாபதி செட்டி,

பாக்கம் கந்தசாமி செட்டி ஆகியோர் பிக்ஷை, பாதபூஜைகள் செய்வித்து அஞ்சலி செய்தனர்.

முத்தியாலுப்பேட்டை தர்ம சிவாசார்ய மடத்தில் நவராத்திரி பூஜை நடத்திய பிறகு ஸ்ரீ ஆசாரியர் திருவொற்றியூருக்கு விஜயம் செய்தார்கள். அதற்குப் பிறகு சுமார் நான்கு மாத காலம் ஸ்ரீ ஆசாரியரின் சஞ்சாரம் சென்னப் பட்டணத்தின் வட பாகத்திலேயே இருந்து வந்தது. அலுப்பு சலிப்பின்றி கூட்டங் கூட்டமாகத் தம்மை நாடி தரிசனத்திற்காக பக்தியோடுவந்த நகரமாந்தர்கள் அனைவரையும் ஏழை, பணக்காரர், உயர் குலத்தவர், தாழ்குலத்தவர், படித்தவர், படிக்காதவர் என்ற வேற்றுமை பாராட்டாமல் எல்லோரையும் அனுக்ரஹித்தார்கள், கரையான் வகுப்பினர் கூட (இன்று மீனவர் என அழைக்கப்படுபவர்) ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு அவ்வமயம் ஒரு பிக்ஷை நடத்தியிருக்கிறார்கள்!

இவ்வாறு ஸ்ரீ இளையாத்தாங்குடி ஸ்வாமிகளின் சென்னப்பட்டண முகாம் சுமார் எட்டு மாத காலம்வரை நீடித்திருந்து 9-3-1884ல் பூர்த்தியடைந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையும் தறுவாயில் சென்னப்பட்டணம் தக்ஷிணப்பிரதேசத்திற்கே தலைநகரமாக மாறியது. வர்த்தகத்தையே குறியாகக் கொண்டு வந்த ஆங்லேய வர்க்கம் ஆளும் வர்க்கமாக மாறியது. தேசமும் ஒரே ஆட்சியின் கீழ் வந்தது.

சரித்திர ஆராய்ச்சியாளர் ஆங்கிலேய ஆட்சியின்போது தான் பாரததேசம் இமயம் முதல் குமரிவரை ஒன்றுபட்டு ஒரே அரசியலின் கீழ் வந்துள்ளது என்று ஆதார பூர்வமாகக் கூறி வருகிறார்கள். இக்கூற்றை நாம் அப்படியே ஆமோதிப்பதற்கில்லை. ஏனெனில், சரித்திரம் தோன்றுவதற்கு முன்பே நமது இந்து சமூகத்தை ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் தமது ஆன்மீக சக்தியால் இமயம் முதல்

குமரிவரை ஒன்றுபடுத்தி வைத்திருக்கிறார்கள். ஆன்மீக உறவுக்கு யாரும் எக்காலத்திலும் பங்கம் விளைவிக்க இயலாது என்பதை அந்த தீர்க்கதரிசி அப்போதே எடுத்துக் காட்டியிருக்கிறார்.

* * *

இருபதாம் நூற்றாண்டில் பூரண உருவத்தோடு பரிமளித்த இந்த நூதனப் பட்டணத்திற்கு இன்று ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்தை அலங்கரித்து வரும் ஸ்ரீசந்திரசேக ரேந்திர சரஸ்வதீ ஸ்வாமிகள் 1932-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28-ந் தேதி விஜயம் செய்தார்கள். இதற்குமுன் நிகழ்ந்த குருபீட விஜயங்களின்போது முதன் முதலாகப் பாத தூளிபட்டுப் புனித மடையும் பேறு நுங்கம்பாக்கத் திற்கும், ஆற்காடு நெடுஞ்சாலைக்குமே கிடைத்து வந்தது. இந்த இருபதாம் நூற்றாண்டு விஜயத்தில் அப்பெரும் பேறு பட்டணத்தின் தென்பகுதிக்குக் கிட்டியது. பட்டணப் பிரவேச தினத்தன்று ஸ்ரீஸ்வாமிகள் மௌபரீஸ்ரோடு வழியாக வந்து, ஸ்ரீஎல்.எ. கோவிந்தராகவ அய்யர் இல்லத்தி லிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு, மயிலாப்பூர் சம்ஸ்கிருதக் கல்லூரியை அடைந்து அங்கேயே முகாமை அமைத்துக் கொண்டார்கள். புஷ்பாலங்காரத்தோடு ஜ்வலித்த தந்தச் சிவிகையில் ஆரோகணித்து ஜ்யோதிர்மயமாக விளங்கிய ஸ்ரீ ஸ்வாமிகளின் திருமேனியை அன்று தரிசித்தவர்கள் பாக்கியசாலிகள்.

அந்த சமயம் நகராண்மைக் கழக சார்பில் ஸ்ரீ ஸ்வாமி களுக்கு வரவேற்பு அளிக்கும் தீர்மானம் ஒன்றை கோபதி நாராயணசுவாமி செட்டியாரும், ஆற்காடு ஸர். ஏ. ராமஸ் வாமி முதலியாரும் நகர சபையில் கொண்டுவந்து, சபையின் ஒரு முகமான அங்கிகாரத்தையும் பெற்றார்கள்.

அவ் வருஷத்திய நவராத்ரி பூஜையைத் தமது முகாமிலேயே ஸ்ரீ ஸ்வாமிகள் நடத்தியபோது, ஆயிரக் கணக்கான ஜனங்கள் தினந்தோறும் ஸ்ரீ ஆசாரியரைத்

தரிசிப்பதிலும், ஸ்ரீ சந்திர மௌளீச்வர பூஜையைக் கண்டானந்தித்துப் பிரசாதங்கள் பெறுவதிலும் பக்தி சிரத்தையோடு ஈடுபட்டிருந்தார்கள். புதிதாகத் தோன்றியுள்ள வீதிகளிலும், பழமையாக உள்ள வீதிகளிலும் ஸ்ரீ ஸ்வாமிகள் பவனி வந்து அசக்தர்களுக்கும். தம்மை ஆச்ரயிக்க விழைந்த இதர மதத்தினருக்கும் திவ்ய தரிசனம் தந்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிகள் ஒரு தினம் ஸ்ரீராமகிருஷ்ண மாணவரில்லத்திற்கு விஜயம் செய்து, அங்கு நடைபெறும் அலுவல்களைக் கண்டு மகிழ்ச்சி தெரிவித்து, மாணவர் இல்லத்தின் தந்தையெனப் போற்றப்படும் காலஞ் சென்ற ஸ்ரீ ராமானுஜாச்சாரியாரின் தன்னலமற்ற சேவையையும் பாராட்டினுர்கள்

அந்த விஜயத்தின்போது ஸ்ரீ ஸ்வாமிகள் நான்கு மாதங்களுக்கு மேல் சென்னையில் தங்கியிருந்து, கேட்போர் உள்ளத்தை ஊடுருவிச் செல்லும் உபந்நியாஸங்களை நிகழ்த்தியும், மயிலாப்பூர், மாம்பலம், ஜார்ஜ் டவுன், கோமளீஸ்வரன்பேட்டை, புரசைவாக்கம், திருவல்லிக்கேணி, திருவொற்றியூர், கிண்டி, திருமங்கலம் முதலான இடங்களில் சஞ்சாரம் செய்தும் பக்தர்களை அநுக்ரஹித்தார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிகளின் இந்த விஜயம் மேலும் பல மாதங்களுக்கு நீடித்திருக்க வேண்டும். ஆனுல் 1933-ம் வருஷம் மார்ச்சு மாதம் கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமக உற்சவத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் அன்னதான சிவன் (தேப்பெருமா நல்லூர் சிவன்) அவர்களுடைய வேண்டுகோளை முன்னிட்டுக் கலந்துகொள்ள வேண்டியிருந்ததால், சென்னப்பட்டண வாசிகள் ஸ்ரீ ஸ்வாமிகளுக்குப் பிரியாவிடை கொடுத்து அனுப்பினுர்கள்.

* * *

இருபத்தைந்து வருஷங்களுக்குப் பிறகு ஸ்ரீ ஸ்வாமிகளின் விஜயம் மீண்டும் சென்ற 1957-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நிகழ்ந்தது. குருபீட பரம்பரையில் தமது இளவரசாகத் திகழும் ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதீ ஸ்வாமிகளோடு நமது ஜகத்குரு அவர்கள் இம்முறை சென்னப்பட்டணப் பிரவேசம் செய்தார்கள். இந்த விஜய வரலாறுகளையும்

இன்றைய சென்னைப் பட்டணத் தோற்றத்தையும் உணராதார் இருப்பதற்கில்லை. நமது ஸ்ரீ ஆசாரியரின் அருள் வடிவையும் வாழ்க்கை மேன்மைகளையும் நேரில் காணும் பாக்கியம் பெற்றவர்கள் ஒரு முகமாக 'இந்தத் தலைமுறைக்குக் கிடைத்த அளவிற்கு பாக்கியம் வேறெந்தத் தலைமுறைக்கும் கிட்டியதில்லை' என்று கூறி வருகிறார்கள்.

ஆதிசங்கரர் அவதார மென்றும், நடமாடும் பிரத்யட்ச தெய்வம் என்றும் நாம் இன்று போற்றும் ஸ்ரீ சந்த்ர சேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்வாமிகள் எளிய வாழ்க்கையையே பெரிதும் விரும்புகிறார்கள். அவர்களுக்குள்ள தேசப்பற்று கட்டுக்கடங்காத தன்மையுடையது. துறவுக் கோலம் பூண்ட நாளன்று முதல் தூய கதராடையையே உடுத்து வருகிறார்கள். அன்னிய ஆட்சியிலிருந்து நாடு விடுதலை பெறவேண்டி கிளர்ச்சிகளும், போராட்டங்களும், சத்யாக்கிரகங்களும் நடத்திய நமது பெருந் தலைவர்களுக்கெல்லாம் 'ஆத்மீக'மாக ஆதரவளித்து வந்திருக்கிறார்கள். மகாத்மா காந்தி, பாபு ராஜேந்திர பிரஸாத், சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார், ஸி. ஆர். தாஸ், சத்தியமூர்த்தி, பாபு புருஷோத்தம தாஸ் டாண்டன், சேத் ஜமனுலால் பஜாஜ், ஸர் சாப்ரூ போன்ற பல தலைவர்கள் ஸ்ரீ ஆசாரியரைத் தரிசித்து, தீர்க்க திருஷ்டியோடு அவர்கள் உபதேசித்த அருள் மொழிகளைக் கேட்டுப் பயன்பெற்று, சாத்வீக முறையினின்று சிறிதும் பிறழாது கடமை ஒன்றையே பெரிதாகக் கருதி தேசத் தொண்டாற்றி வந்திருக்கிறார்கள். அவர்கள் முயற்சி வெற்றியடைந்து இன்று நாடு அரசியலிலும் ஆன்மீகத்திலும் ஒன்றுபட்டு சுதந்திரப் பேரரசாக உலகம் கண்டு வியக்கும் அளவுக்கு முன்னேற்ற மடைந்து வருகிறது.

சின்னஞ் சிறு குப்பமா யிருந்த சென்னப்பட்டணம் இன்று சௌந்தர்ய நகரமாக உருவெடுத்திருப்பதற்கு மகான்களின் பாத தூளி இப் பிரதேசத்தில் இடையறுமல் பட்டுப் புனிதமடையச் செய்ததும் ஒரு காரணமாகும். ஆதி சங்கரர், நாயன்மார்கள், ஆழ்வாராதிகள், தவயோகிகள் பின்வருங் காலத்தில் மீண்டும் தோன்றலாம்; தோன்றுமலும்

இருக்கலாம், ஆனால், அன்று தொட்டு இன்றுவரை புனிதத் தொண்டாற்றி வரும் குருபீடம் என்றென்றும் நீடித்து வரும் என்றும், அந்தப் பரம்பரையில் தோன்றும் மகான் களின் பாததூளி விசேஷத்தால் இன்னும் பல பட்டணங்கள் எதிர்காலத்தில் தோன்றக் கூடும் என்றும் நம்புவோமாக.


"சங்கரா ஜய போற்றி போற்றி போற்றி" என்று திருத் தாண்டகத்திலும், "அரன்நாமமே சூழ்க, வையகம் துயர் தீர்கவே" என்று தேவாரத்திலும் அக்காலத்தில் கோஷித்த திருநாவுக்கரசு சுவாமிகளுடையவும் சம்பந்தப் பெருமா னுடையவும் அருளாசியினாலோ என்னவோ, இந்த இருபதாம் நூற்றாண்டில் சென்ற பதினெட்டு மாதங்களாக குருபீடம் கண்ட பட்டணம் பெருமிதத்தோடு, திருவொற்றியூர் முதல் தாம்பரம் வரையிலும், திருவல்லிக்கேணி முதல் அம்பத்தூர் வரையிலும் ஒவ்வொரு மூலையிலும் முடுக்கிலும்,

"ஹரஹர சங்கர" "ஜயஜய சங்கர" என்று ஈசனுடைய புகழை ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அகிலம் போற்றும் ஆதிசங்கரருடைய அத்வைத ஆன் மீக நெறிகளை இந்துமத அறிஞர்களும், மற்ற மதச் சார் புடைய ஆராய்ச்சியாளர்களும் உலகம் உய்ய அம் மஹான் வகுத்தருளிய மஹத்தான சித்தாந்தம் எனக் கொண்டாடு வதைப் பார்த்து பாரதம் பெருமிதம் அடைகிறது.

பல நூறு வருஷங்களுக்கு முன்தோன்றிய மஹா புருஷர் சங்கரர், அன்று காட்சி தந்த விதம் இதுவாகத்தான் இருக் கும் என்று அறுதியிட்டு கூறும் வண்ணம், சிறிதும் விதிமுறை வழுவாது இருபதாம் நூற்றாண்டின் பாக்கியமாக பழம் பெரும் காஞ்சிமாநகரில் ஸர்வக்ஞபீடம் எனும் ஸ்ரீ காமகோடி பீடத்தை அலங்கரிக்கும் ஸ்ரீ பெரியவர்களும், புதுப் பெரிய வர்களும் இக்காலத்திய சமுதாயத்தின் பலதரப்பட்ட மனப் பாங்குக்கேற்ப உள்ளம் உருகும் உபதேசங்கள் வழங்கி, தாய கத்தின் கலை, கலாசாரம் தத்வம், ஞானம் எல்லாம் வைய மெங்கும் விளங்க ஆற்றிவரும் சமுதாயத் தொண்டு பற்றிய வரலாற்றை மேலும் தொடர்ந்து காண்போம்.

# ஜகத்குரு வந்தனம்



வஸுதேவ ஸுதம் தேவம்
கம்ஸசாணூர மர்த்தனம் |
தேவகீ பரமானந்தம்
க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும் || 1

அதஸீ புஷ்பஸங்காசம்
ஹாரநுபுர சோபிதம் |
ரத்ன கங்கண கேயூரம்
க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும் || 2

---

# குருவஷ்டகம்



★

யசோ மே கதம் திக்ஷு தானப்ரதாபா
ஜகத் வஸ்து ஸர்வம் கரே யத் ப்ரஸாதாத்
மனஸ் சேந்ந லக்னம் குரோரங்க்ரி பத்மே
தத : கிம் தத : கிம் தத : கிம் தத : கிம் ?

அகில உலகப் புகழும், உலக வஸ்துக்கள் யாவு
தானே, தர்ம குணத்தினால் ஒருவன் அடைந்
திருப்பானே யானலு
குருவின் பாத கமலங்களில் மனமானது
பற்றுக் கொள்ளாவிடில் பிறகு என்ன பயன்?
—அவ்வளவும் வீணே. (ஸ்ரீ சங்கரர்)

★



★

"தீங்குறு மாயை சேராவகை வினைதிரிவிதத்தால்
நீங்கிட நீங்கா மூலநிறையிருளரிய நேயத்
தோங்குணர் வகத்தடங்கி யுளத்துளின்
பொடுங்கநேரே
தூங்குவர் தாங்கியேகத் தொன்மையிற்
துகளிலோரே"

★

---

# யதி பஞ்சகம்

## (கௌபீன பஞ்சகம்)

வேதாந்த வாக்யேஷு ஸதா ரமந்தோ
பிக்ஷான்ன மாத்ரேணச துஷ்டி மந்த:
விசோக மந்தக் கரணே ரமந்த:
கௌபீன வந்த: கலு பாக்ய வந்த: ॥ 1

முலம் தரோ: கேவலம் ஆச்ரயந்த:
பாணித்வயம் போக்தும் அமத்ரயந்த:
கன்யாமிவ ஸ்ரீமபி குத்ஸயந்த:
கௌபீன வந்த: கலு பாக்ய வந்த: ॥ 2

தேஹாதிபாவம் பரிமார் ஜயந்த:
ஆத்மாந மாத்மன் அவலோகயந்த:
நாந்தம் நமத்யம் நபஹிர் ஸ்மரந்த:
கௌபீன வந்த: கலு பாக்ய வந்த: 3

ஸ்வாநந்த பாவே பரிதுஷ்டிமந்த:
ஸம் சாந்த ஸர்வேந்த்ரிய த்ருஷ்டிமந்த:
அஹர்நிசம் ப்ரஹ்மணி யே ரமந்த:
கௌபீன வந்த: கலு பாக்ய வந்த: 4

பஞ்சாக்ஷரம் யாவனம் உச்சரந்த:
பதிம் பசூனும் ஹ்ருதி பாவயந்த:
பிக்ஷாசனு திக்ஷு பரிப்ரமந்த:
கௌபீன வந்த: கலு பாக்ய வந்த: 5

—ஸ்ரீ சங்கரர்

# தத்வமஸி

## (சிஷ்யர்கள்)

நிஸ்தமஸி நீரஜஸி நிர்கலித ஸத்வே
தேஜஸி விவேகஜுஷி பேதமதி சூன்யே
நிர்வசனமானஸ பதாதிகம சிந்த்யம்
தத்வமஸி தத்வமஸி தத்வமஸி ராஜன் ॥ 1

யஜ்ஜனித மேததகிலம் ஜகத நித்யம்
ஸ்வப்னஜகதப் ரகஜ வாரிவன துல்யம்
அப்ரமித மூர்த்தி ரஹிதம் பரஸுகம் யத்
தத்வமஸி தத்வமஸி தத்வமஸி ராஜன் ॥ 2


தேஹகுண ஜாலமதி லீலமதி லோலம்
யேன லஸிதம் பவதி தீபுரசதஞ்ச
அத்வய மனந்த கமபார மதி ஸூ க்ஷ்மம்
தத்வமஸி தத்வமஸி தத்வமஸி ராஜன் ॥ 3

கோச மய பஞ்சக மிதஞ்ச ஸவிகாரம்
யத்ர வியதாதி விமலஸ் புரித மேதத்
அஸ்திநகதாசிதபி ரஜ்ஜு வதனந்தம்
தத்வமஸி தத்வமஸி தத்வமஸி ராஜன் ॥ 4

பேதமதி ஜாத மவ தூத மனு பூதம்
யேன விகிதம் ததம் பராத் பரஸுகஞ்ச
தத்பவதி ஸோஹமிதி யச்ருதிஷு சோக்தம்
தத்வமஸி தத்வமஸி தத்வமஸி ராஜன் ॥ 5











Wrapper Blocks Courtesy : "DEVAN"

Gnanodaya Press, Madras - 600